# முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், வேலூர்,
# வேலூர் மாவட்டம்.

**முன்னிலை: திருமதி.என்.வசந்தலீலா, பி.காம்., எல்.எல்.எம்.,**
**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, வேலூர்.**

**2023ம் வருடம், ஜூன் மாதம், 28ம் நாள், புதன்கிழமை**
**2054, திருவள்ளுவராண்டு, சோபகிருது வருடம், ஆனி மாதம், 13ம் நாள், புதன்கிழமை**

## சிறப்பு அமர்வு வழக்கு எண். 3/2022
## (Special Case No.2/2019 - PDJ Court Villupuram)
## Special Court for Preventive of Corruption Special Case No.2/2015
## Chief Judicial Magistrate Court Special Case No. 7/2003)

| | | |
|---|---|---|
| அரசுக்காக | | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு<br>விழுப்புரம் - குற்ற எண் 4/2002 |
| எதிரிகள் பெயர் மற்றும் விலாசம் | | 1. கே.பொன்முடி, த/பெ. எம்.கந்தசாமி, எண் 6ஏ, திருப்பாணாழ்வார் தெரு, கிழக்கு சண்முகபுரம் காலனி, விழுப்புரம்.<br><br>2. பி.விசாலாட்சி, க/பெ. கே.பொன்முடி, எண் 6ஏ, திருப்பாணாழ்வார் தெரு, கிழக்கு சண்முகபுரம் காலனி, விழுப்புரம்.<br><br>3. பி.சரஸ்வதி, **(இறப்பு)** க/பெ. லேட் கே.பழனி, எண் 13, வடக்கு அவென்யூ, பறீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை.15.<br><br>4. ஏ.மணிவண்ணன், **(இறப்பு)** த/பெ. அப்பாதுரை, எண் 2, கோர்ட் சாலை, விழுப்புரம்.<br><br>5. ஏ.நந்தகோபால், **(இறப்பு)** த/பெ. ஆதிசேஷன், மேல்பட்டி அஞ்சல், விழுப்புரம் மாவட்டம். |

| | | |
|---|---|---|
| எதிரிகள் மீது அரசுதரப்பில் முறையிடப்பட்ட குற்றச்சாட்டு | | 1ம் எதிரி - 1988 ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ)ன் கீழ்.<br>2 முதல் 5ம் எதிரிகள் - இ.த.ச. பிரிவு 109 உ/இ 1988 ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ)ன் கீழ். |
| எதிரிகள் மீது நீதிமன்றத்தில் வனையப்பட்ட குற்றச்சாட்டு | | 1ம் எதிரி - 1988 ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ)ன் கீழ். 2, 4ம் எதிரிகள் இ.த.ச. பிரிவு 109 உ/இ 1988 ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ)ன் கீழ். |
| 1,2 மற்றும் 4 எதிரிகளின் பதிலுரை | | 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல |
| நீதிமன்றத்தின் முடிவு | | 1,2 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல. 3 முதல் 5 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது. |
| நீதிமன்றத்தின் தீர்ப்பு விவரம் | | முடிவாக 1ம் எதிரி மீதான ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன்படியான குற்றச்சாட்டும், 2ம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு 109 உடன் இணைந்த பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன்படியான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து 1 மற்றும் 2 எதிரிகளை கு.வி.மு.ச.235(1)-ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இவ்வழக்கின் 3 முதல் 5 எதிரிகள் இறந்துவிட்டபடியால் அவர்களை பொறுத்து வழக்கு அற்றுப்போய்விட்டதாக உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | | 1ம் எதிரி தரப்பில் - திரு.எஸ்.வித்யா சங்கர்<br>2ம் எதிரி தரப்பில் - திரு.கல்பட்டு வி.ராஜா |
| கூடுதல் அரசு வழக்கறிஞர் | | திருமதி. கே.வெற்றிச்செல்வி, எம்.ஏ.எம்.எல்., |

இவ்வழக்கானது விழுப்புரம், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் சிறப்பு வழக்கு எண் 7/2003 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் கீழான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 20.03.2015 அன்று சிறப்பு வழக்கு எண் 2/2015 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவலக குறிப்பாணை ROC. No.5745/2018/94, dated 07.06.2019 and G.O. (Ms). No.697 Home (Courts-II) dated 09.07.2018 and order of Hon'ble Supreme Court of India in W.P.No. (Civil) No.699/2018, dated 01.11.2017-ன்படி விழுப்புரம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 6.08.2019 அன்று சிறப்பு வழக்கு எண் 2/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு தொடர் விசாரணைக்காக மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் ROC. No.49596-A/22/B2, dated 12.07.2022 தேதியிட்ட உத்தரவின்படி 15.07.2022 அன்று இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தால் சிறப்பு அமர்வு வழக்கு எண் 3/ 2022 என 19.10.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக சிறப்பு அரசு வழக்கறிஞர் திருமதி.வெற்றிச்லெ்வி அவர்களும், இன்று வரை எனது பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கானது இறுதியான விசாரணைக்கு 27.06.2023 அன்று எடுக்கப்பட்டு இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று 28.06.2023 இந்நீதிமன்றம் வழங்கும் :-

## தீர்ப்புரை

முதல் எதிரி 13.15.1996 முதல் 14.05.2001 வரை விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு போக்குவரத்து துறையின் அமைச்சராகவும் பொறுப்பில் இருந்து பணியாற்றிய வகையில் அரசு பொது ஊழியர் என்ற வகையிலும், 1ம் எதிரி இப்பதவிக்கு வரும் முன்பு விழுப்புரம் மாவட்டம் டி.எடையார் கிராமத்தில் தெய்வசிகாமணி என்ற பெயரில் நடுத்தர விவசாய குடும்பத்தில் வளர்ந்து வந்தும், 1ம் எதிரியின் பெற்றோர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களாக இருவரும் சேர்ந்து மாத ஓய்வூதியமாக ரூ.1000/- பெற்று வந்த நிலையில் 1ஆம் எதிரியின் தந்தையர் கந்தசாமி 2.5 ஏக்கர் நிலம் திருக்கோவிலூர் தாலுக்கா டி.எடையார் கிராமத்தில் வைத்திருந்ததாகவும், 1ஆம் எதிரி வரலாற்று துறை உதவி பேராசிரியராக பல அரசு கல்லூரிகளில் 06.01.1972 முதல் 21.12.1988 வரை பணியாற்றி அப்பணியிலிருந்து விருப்பு ஓய்வு பெற்ற 1ஆம் எதிரி கல்லூரி பேராசிரியராக பணியாற்றிய காலகட்டத்தில் 1ஆம் எதிரியின் மனைவி மற்றும் 2வது எதிரியான விசாலாட்சி ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் பாகாலா கிராமத்தைச் சேர்ந்தவரான நடுத்தர விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவரை திருமணம் செய்து, 1ம் எதிரியின் மனைவி எவ்வித வருமானம் ஈட்டும் பணியிலும் இல்லாமல் குடும்ப இல்லத்தரசியாக மட்டும் இருந்தும், 1ம் எதிரியின் மாமியாரும் 3ம் எதிரியுமான திருமதி.பி.சரஸ்வதி குடும்ப இல்லத்தரசி அவரது கணவர் திரு.பழனி என்பவர் ரயில்வே துறையில் கார்டாக பணியாற்றி ஓய்வு பெற்று இறந்துவிட்ட பின்னர் குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்த நபர் என்றும், நான்காவது எதிரியாகிய மணிவண்ணன் முதலாவது எதிரியுடன் ஒரே கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றிய வகையிலும் மற்றும் நெருங்கிய நண்பரும் என்ற வகையிலும், ஐந்தாவது எதிரி திரு. நந்தகோபால் முதல் எதிரியின் தூரத்து உறவினர் என்ற வகையிலும் இருந்து வந்த நிலையில், முதல் எதிரி

விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு போக்குவரத்து துறையின் அமைச்சராக 13.05.1996 முதல் 14.05.2001 வரை பணியாற்றிய நிலையில், 13.05.1996 முதல் 31.03.2002 வரை சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் 1ம் எதிரி பொது ஊழியராக இருந்த காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்திருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் 13.05.1996 முதல் 31.03.2002 வரையிலான காலத்தை தணிக்கை காலமாக எடுத்துக்கொண்டு (Check Period) புலன் விசாரணை செய்யப்பட்டதில்

1997ம் வருடம் முதல் எதிரியானவர் இரண்டாவது எதிரியான திருமதி. விசாலட்சி என்பவரை தின்பட்ட உரிமையாளராக கொண்டு விழுப்புரத்தில் கிழக்கு சண்முகபுரம் காலனியில் திருப்பாணாழ்வார் தெருவில் ஏற்றுமதி, பிரசுரம் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் உதிரி பாகங்களை விற்பதற்கு என்று விஷால் எக்ஸ்போ என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டு உண்மையில் உங்களால் சேர்க்கப்படும் சொத்துக்களை அந்த நிறுவனத்தின் பெயரில் சேர்க்கும் எண்ணத்துடன் அந்த நிறுவனத்தை உருவாக்கி, உண்மையில் முதலாவது எதிரி தான் அதன் உரிமையாளர் என்றும்,

1999ம் வருடம் நான்காம் எதிரியான திரு. மணிவண்ணன் என்பவரை நிறுவனர் மற்றும் தலைவர் என்றும் திருமதி. சரஸ்வதி மற்றும் திரு. நந்தகோபால் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு சிகா கல்வி அறக்கட்டளை, எண்.2, நீதிமன்ற சாலை, விழுப்புரம் என்ற பெயரில் மேற்கூறிய 3 முதல் 5 வரையிலான எதிரிகளின் பெயர்களை மட்டும் உபயோகித்துக் கொண்டு, முதலாவது எதிரி மேற்கூறிய அறக்கட்டளையை நிறுவி அதனை தன்னிச்சையாக நடத்தி அதன்மூலம் நன்மை அடையும் எண்ணத்தைக் கொண்டும்,

மேற்கூறிய M/S. விஷால் எக்ஸ்போ மற்றும் சிகா கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனங்கள் முதலாவது எதிரி சட்டத்திற்கு புறம்பாக சேர்க்கும் சொத்துக்களை மேற்கூறிய நிறுவனங்களின் பெயரில் சேர்ப்பதற்கு கருவிகளாக பயன்படுத்த 2 முதல் 5 வரையிலான எதிரிகளின் உதவியோடு உருவாக்கி, மேற்கூறிய M/S. விஷால் எக்ஸ்போ மற்றும் சிகா கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனங்கள் பெயரில் உள்ள சொத்துக்கள் 1ம் எதிரியால் சேர்க்கப்பட்டு வைத்திருக்கும் சொத்துக்களே என்றும்,

இவ்வழக்கின் தணிக்கை காலமாக கொள்ளப்பட்ட காலத்தின் ஆரம்ப தேதியான 13.05.1996 அன்று முதலாவது எதிரியின் பெயரிலும், அவரது மனைவியும் இரண்டாவது எதிரியான திருமதி.விசாலாட்சி என்பவரது பெயரிலும் அட்டவணை 1ன்படி ரூ.18,10,644.50/- மதிப்புள்ள நிதி வள வசதிகள் மற்றும் சொத்துக்கள் கொண்டிருந்தும்,

தணிக்கை காலத்தின் இறுதி தேதியான 31.03.2002ந் தேதியன்று முதலாவது எதிரியின் பெயரிலும், அவரது மனைவி மற்றும் மாமியாரான 2,3 எதிரிகள் பெயரிலும் மேற்கூறிய M/S. விஷால் எக்ஸ்போ மற்றும் சிகா கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனங்கள் பெயரில் அட்டவணை 2ன்படி ரூ.4,10,04,307.95/- மதிப்புள்ள வள வசதிகள் மற்றும் சொத்துக்களை சேர்த்தும்,

முதலாவது எதிரி தனது பெயரிலும், மனைவி மற்றும் மாமியாரான 2,3 எதிரிகள் பெயரிலும் மேற்கூறிய M/S. விஷால் எக்ஸ்போ மற்றும் சிகா கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனங்கள் பெயரில் அட்டவணை 5ன்படி ரூ.3,91,93,663.45/- மதிப்புள்ள நிதிவள வசதிகள் மற்றும் சொத்துகள் சேர்த்தும்,

மேற்கூறிய தணிக்கை காலத்தில் 1வது எதிரி அட்டவணை 3ன்படி ரூ.2,21,61,391.45/- மதிப்புள்ள வருமானத்தை ஈட்டியுள்ள நிலையில் அட்டவணை 4ன்படி ரூ.1,38,02,794.97/- அளவிற்கு செலவுகள் செய்துள்ள நிலையில்,

தணிக்கை காலத்தின் இறுதியில் 31.03.2002 அன்று முதலாவது எதிரி அட்டவணை 6ன்படி ரூ.83,58,596.48/- சேமிப்பு செய்துள்ள நிலையில் அட்டவணை 7ன்படி வருமானத்திற்கு அதிகமாக ரூ.3,08,35,066.97/- மதிப்புள்ள நிதி வளங்கள் மற்றும் சொத்துக்களை சேர்த்துள்ளீர்கள் என்றும்,

இவ்வாறாக 13.05.1996 முதல் 31.03.2002 வரையில் உள்ள காலத்தில் மாதிரிமங்கலம், கஸ்பாகாரணை, கப்பியாம்புலியூர் போன்ற விழுப்புரம் வட்டத்திலுள்ள கிராமங்களிலும், விட்டலாபுரம் போன்ற திண்டிவனம் வட்டத்திற்குட்பட்ட கிராமத்திலும், கடலூர், புதுச்சேரி, சென்னை மற்றும் திருச்சி போன்ற நகரங்களிலும் முதலாவது எதிரி தனது பெயரிலும், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் பெயரிலும், M/S. விஷால் எக்ஸ்போ மற்றும் சிகா கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனங்கள் பெயரிலும், திருப்திகரமான விளக்கம் அளிக்க இயலாத வகையில் தெரிந்த அளவிலான வருமானத்திற்கு அதிகமாக நிதிவள வசதிகள் மற்றும் சொத்துக்களை சேர்த்துள்ளதாக 1ம் எதிரி மீது 1988 ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ)ன் கீழும், 2 முதல் 5ம் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 109 உ/இ 1988 ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ)ன் கீழும், விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில் 1,2,4 எதிரிகள் விழுப்புரம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜரானபோது இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள்

அனைத்தும் வழங்கப்பட்டு எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ எதிரிகள் தங்கள் மீதான குற்றத்தை மறுத்துள்ளார்கள். 1ம் எதிரி மீதான 1988 ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ)ன் கீழும், 2 முதல் 5ம் எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 109 உ/இ 1988 ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ)ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவியதற்கு 1,2,4 எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்து குற்றவாளிகள் இல்லையென கூறியுள்ளார்கள்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.172 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.563 வரையிலான சான்றாவணங்களும் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.6 வரையிலான எதிரிகள் தரப்பு சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் எ.சா.1 சாட்சி மட்டும் விசாரிக்கப்பட்டு எ.சா.ஆ.7 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்</u>

அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட திரு.இராஜாராமன் அவர்களால் செயல்முறை நடவடிக்கைகள் எண் Rc.No.20785/2003-TNLAS/OP/1 24.11.2003 தேதியிட்ட ஆவணம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட திரு.இராமகிருஷ்ணன் அவர்களால் கந்தசாமி மற்றும் மரகதம்மாள் என்பவர்களின் ஓய்வூதிய விவரங்கள் அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது,

அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட திரு.தவிடன் என்பவர் 1ம் எதிரியின் பண்ணையில் தினக்கூலியாக பணிபுரிவது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட திரு.கேசவன் அவர்களால் 1ம் எதிரியின் பெற்றோர் பெயரில் உள்ள நிலத்தின் பட்டா மற்றும் சிட்டா அ.சா.ஆ.4 ஆகவும்,

செங்கல்வராயன் சர்க்கரை ஆலை நிர்வாகத்தால் அளிக்கப்பட்ட கடிதம் அ.சா.ஆ,5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட மனோகர் என்பவரால் 1ம் எதிரியின் சம்பள சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.6 சூரிய போகு சாமுவேல் என்பவரால் 2,3 எதிரிகளுக்கு இடையேயான பாகப்பிரிவினை குறித்த கிரய ஆவண எண் 1667/1950 அ.சா.ஆ.7 ஆகவும், செட்டில்மெண்ட் பத்திர எண் 2233/2009 அ.சா.ஆ.8 ஆகவும், செட்டில்மெண்ட் பத்திர எண் 2610/1998 அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.7 ஜெயச்சந்திரா, வட்டாட்சியர், சித்தூர் என்பவரால் 2ம் எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள பட்டாக்கள் முறையே அ.சா.ஆ.10 முதல் அ.சா.14 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.8 சுவாமிநாதன், 2ம் எதிரியின் சகோதரர், 2ம் எதிரியின் குடும்பத்தில் உள்ள சொத்துக்கள் குறித்து சாட்சியம் அளித்து 14.03.1997 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திர எண் 270/1997 அ.சா.ஆ.15 ஆகவும், பாகப்பிரிவினை பத்திர எண் 631/1997 அ.சா.ஆ.16 ஆகவும், இவரது வருவாய் வரி செலுத்திய கோப்பு அ.சா.ஆ.17 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.9 சரவணன், அ.சா.10 ஏழுமலை, அ.சா.11 பத்ரிநாராயணன், அ.சா.12 முனிரத்தினம் மற்றும் அ.சா.13 சேகர் ஆகியோர் 3ம் எதிரியின் கடைகளின் வாடகைதாரர்கள் என்ற முறையில் விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.14 பஷீர் அகமத், பாகாலா சென்ட்ரல் வங்கியின் கிளை மேலாளர் அவர்களால் 3ம் எதிரியின் வங்கி கணக்கு விவரங்கள் அடங்கிய கோப்பு அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.15 கிருஷ்ணமூர்த்தி என்பவர் 1ம் எதிரியின் தகப்பனாரின் நிலம் குறித்து சாட்சியம் அளித்து இவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.16 வி.என்.ரங்கநாதன், விழுப்புரம் இணை—1 சார்பதிவாளர் அவர்கள் 2,3,4 எதிரிகள் மற்றும் சிகா எஜுகேஷனல் டிரஸ்ட் பெயரில் உள்ள நிலங்கள் குறித்து சாட்சியம் அளித்து இவரால் அ.சா.ஆ.19 முதல் அ.சா.ஆ.22 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.17 மதன்மோகனா என்பவர் 3ம் எதிரியின் கடைகளின் வாடகைதாரர் என்ற முறையில் விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.18 கஸ்தூரி, தலைமை செயலக இணை செயலாளர் அவர்கள் 1ம் எதிரியின் சம்பளம் குறித்து சாட்சியம் அளித்து அவரால் 1ம் எதிரியின் சம்பள விவரம் குறித்த கோப்பு அ.சா.ஆ.24 ஆக  குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.19 நடராஜன், ஓய்வுபெற்ற சார்பதிவாளர் அவர்கள் 4ம் எதிரி, அவரது மனைவி மற்றும் சிகா எஜுகேஷனல் டிரஸ்ட் பெயரில் உள்ள நிலங்கள் குறித்து சாட்சியம் அளித்து அவரால் அ.சா.ஆ.25 முதல் அ.சா.ஆ.29 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.20 குபேரன், 1ம் எதிரியின் விற்பனையாளராக சாட்சியம் அளித்து தெய்வசிகாமணி பெயரில் உள்ள கிரய பத்திர நகல்கள் முறையே அ.சா.ஆ.26 மற்றும் அ.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.21 பி.ஜோதி, 1,2ம் எதிரிகளின் விற்பனையாளராக சாட்சியம் அளித்து ஜெயச்சந்திரன் மற்றும் தெய்வசிகாமணி பெயரில் உள்ள கிரய பத்திர நகல்கள் முறையே அ.சா.ஆ.30 முதல் அ.சா.ஆ.32 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.22 கே.செல்வராஜ், பத்திர எழுத்தராக சாட்சியம் அளித்து கிரய பத்திர நகல் அ.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.23 ஹேமலதா தேவி, விக்கிரவாண்டி சார்பதிவாளர் அவர்கள் விஷால் எக்ஸ்போ பெயரில் உள்ள நிலங்கள் குறித்து சாட்சியம் அளித்து இவரால் அ.சா.ஆ.34 முதல் அ.சா.ஆ.35 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.24 ஞானசம்பந்தன், விக்கிரவாண்டி சார்பதிவாளர் அவர்கள் 1ம் எதிரியின் பெயரில் உள்ள நிலங்கள் குறித்து சாட்சியம் அளித்து இவரால் அ.சா.ஆ.36 மற்றும் அ.சா.ஆ.37 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.25 ஜனகராஜ், 2ம் எதிரியின் விற்பனையாளராக சாட்சியம் அளித்து கிரய பத்திர நகல் அ.சா.ஆ.38 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.26 ஆறுமுகம், அ.சா.27 சுகுமார், அ.சா.28 ஜெயச்சந்திரன், அ.சா.29 பழனிவேல் மற்றும் அ.சா.30 தண்டபாணி ஆகியோர் விற்பனையாளர்கள் என்ற முறையில் விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.31 அருள்சாமி, சார் பதிவாளர் இவரால் அ.சா.ஆ.34 மற்றும் அ.சா.ஆ.35 ஆகிய ஆவணங்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.32 மோகன் சீனிவாசன் மாவட்ட பதிவாளராக விசாரிக்கப்பட்டு இவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.33 விஷ்ணுராம், பத்திர எழுத்தராக சாட்சியம் அளித்து கிரய பத்திர நகல்கள் அ.சா.ஆ.39 மற்றும் அ.சா.ஆ.40 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.34 ஜெயவேல், அ.சா.35 லோகநாதன் மற்றும் அ.சா.36 கோவிந்தசாமி ஆகியோர் விற்பனையாளர்கள் என்ற முறையில் விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.37 ஜெகன்னாதன், ரமணீயம் ரியல் எஸ்டேட் நிறுவனத்திலிருந்து விசாரிக்கப்பட்டு அவரால் கிரய ஆவண எண் 1999/2000 அ.சா.ஆ.41 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.38 சந்திர சேகரன், இந்தியன் ஒவர்சீஸ் வங்கியின் முதன்மை நிர்வாகி விசாரிக்கப்பட்டு அவரால் 2ம் எதிரியின் வங்கி கணக்கு விவரம் அ.சா.ஆ.42 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.39 நடராஜன், பொதுப்பணித் துறை மதிப்பீட்டு பொறியாளர் விசாரிக்கப்பட்டு அவரால் 3ம் எதிரியின் வீட்டின் மதிப்பீட்டு அறிக்கை அ.சா.ஆ.43 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.40 கலிவரதன், அ.சா.41 செந்தில்குமரன், அ.சா.42 வைத்யலிங்கம், அ.சா.43 ஜனார்தனன் மற்றும் அ.சா.44 கேசவன் ஆகியோர் விற்பனையாளர்கள் என்ற முறையில் விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.45 தட்சிணாமூர்த்தி, மயிலாப்பூர் மாவட்ட பதிவாளர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் கிரய ஆவண எண் 99/2000 அ.சா.ஆ.44 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.46 சேகர், துணை வட்டாட்சியர் விசாரிக்கப்பட்டு அவரால் சோதனை வாரண்டில் உள்ள நீதித்துறை நடுவரின் கையொப்பம் அ.சா.ஆ.45 ஆகவும், சோதனை பட்டியலில் உள்ள இவரது கையொப்பம் அ.சா.ஆ.46 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.47 ரவிக்குமார், வட்டாட்சியர் விசாரிக்கப்பட்டு அவரால் சோதனை வாரண்டில் உள்ள நீதித்துறை நடுவரின் கையொப்பம் அ.சா.ஆ.47 ஆகவும், சோதனை பட்டியலில் உள்ள இவரது கையொப்பம் அ.சா.ஆ.48 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.48 மாடசாமி, கூட்டுறவு சார் பதிவாளர் விசாரிக்கப்பட்டு அவரால் செயல்முறை நடவடிக்கைகள் அ.சா.ஆ.49 ஆகவும், 16.03.2002 தேதியிட்ட சோதனை வாரண்ட் அ.சா.ஆ.50 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.51 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.49 சிங்காரவேலு, வட்டார போக்குவரத்து அலுவலர் விசாரிக்கப்பட்டு வாகனங்களின் பதிவுச் சான்று மற்றும் கடிதங்கள் அ.சா.ஆ.53 முதல் அ.சா.ஆ.64 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.50 பொன்முடி, நகர சர்வேயர் அவர்கள் விசாரிக்கப்பட்டு இன்வெண்ட்ரி மகஜர் அ.சா.ஆ.65 ஆகவும், சோதனை பட்டியல் அ.சா.ஆ.66 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.67 ஆகவும் செய்யப்பட்டுள்ளன.

அ.சா.51 சீனிவாசன், நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பாளர் விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

அ.சா.52 முருகேசன், துணை காவல் கண்காணிப்பாளர் விசாரிக்கப்பட்டு அவரால் கைப்பற்றுதல் விவரங்கள் அ.சா.ஆ.70 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.53 கலியபெருமாள், திருச்சி வீட்டு மேம்பாட்டு சங்கத்தின் செயலாளர் விசாரிக்கப்பட்டு அவரால் 2ம் எதிரியின் விண்ணப்பம் அ.சா.ஆ.71 ஆகவும், 2ம் எதிரியின் விண்ணப்பத்தின் சுருக்கம் அ.சா.ஆ.72 ஆகவும், ஒப்புதல் கடிதம் அ.சா.ஆ.73 ஆகவும், பணம் செலுத்திய ரசீது அ.சா.ஆ.74 ஆகவும், காசோலை

சலான் அ.சா.ஆ.75 ஆகவும், சங்கத்தின் ரசீது அ.சா.ஆ.76 ஆகவும், தீர்மான நகல் அ.சா.ஆ.77 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.54 குப்புசாமி காவல் துணை கண்காணிப்பாளர் விசாரிக்கப்பட்டு அவரால் கைப்பற்றுதல் தின பதிவேடு, சோதனை அறிவிப்பு, சோதனை வாரண்ட், இன்வெண்ட்ரி மகஜர் ஆகியவைகள் முறையே அ.சா.ஆ.78 முதல் அ.சா.ஆ.81 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.55 விஜயராகவன், சார் பதிவாளர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் ஆவண எண்கள் 1730/1998, 630/1999 முறையே அ.சா.ஆ.82 மற்றும் அ.சா.ஆ.83 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.56 ரங்கநாதப்பிள்ளை, அ.சா.57 நடராஜன் ஆகிய இருவரும் 4ம் எதிரியின் பணியாளர் மற்றும் விற்பனையாளராக விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

அ.சா.58 முருகசாமி, காவல் துணை கண்காணிப்பாளர் விசாரிக்கப்பட்டு அவரால் சோதனை வாரண்ட் அ.சா.ஆ84 ஆகவும், சோதனை ஜாபிதா அ.சா.ஆ.85 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.86 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.87 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.59 சிவானந்தம், துணை வட்டாட்சியர் விசாரிக்கப்பட்டு அவரால் பார்வை மகஜர் அ.சா.ஆ.88 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.60 கோவிந்த், வட்டாட்சியர் விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

அ.சா.61 பாலன், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் சோதனை வாரண்ட் அ.சா.ஆ.89 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர்

அ.சா.ஆ.90 ஆகவும், பணத்தின் விவரம் அ.சா.ஆ.91 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.62 சரவணன், கரூர் வைஸ்யா வங்கியின் கிளை மேலாளர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் சிகா டிரஸ்டின் வங்கி கணக்கு விவரம் அ.சா.ஆ.92 ஆகவும், நாராயணா என்பவரின் காசோலை அ.சா.ஆ.93 ஆகவும், ஜோசப் சேவியர் என்பவருக்கு வழங்கிய காசோலை அ.சா.ஆ.94 ஆகவும், முத்துக்குமாரசாமி என்பவருக்கு வழங்கிய காசோலை அ.சா.ஆ.95 ஆகவும், வெங்கடேசனுக்கு வழங்கிய காசோலை அ.சா.ஆ.96 ஆகவும், ஸ்ரீதருக்கு வழங்கிய காசோலை அ.சா.ஆ.97 ஆகவும், பிரேமலதா என்பவருக்கு வழங்கிய காசோலை அ.சா.ஆ.98 ஆகவும், சிகா மேல்நிலை பள்ளியின் வைப்பீட்டு ஆவணம் அ.சா.ஆ.99 ஆகவும், சிகா மேல்நிலை பள்ளியின் வைப்பீடு திரும்ப பெற்றதற்கான ஆவணம் அ.சா.ஆ.100 ஆகவும், சிகா மேல்நிலை பள்ளியின் வைப்பீட்டு ஆவணம் அ.சா.ஆ.101 ஆகவும், சிகா மேல்நிலை பள்ளியின் வைப்பீடு திரும்ப பெற்றதற்கான ஆவணம் அ.சா.ஆ.102 ஆகவும், வங்கி கணக்கு விவரம் அ.சா.ஆ.103 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.63 நடனம், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

அ.சா.64 ரிச்சர்ட், தலைமைச் செயலக செயலாளர்அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 1ம் எதிரியின் சம்பள விவரம் அ.சா.ஆ.104 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.65 சுந்தர ராஜன், வருவாய் துறை இணை ஆணையர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 1ம் எதிரியின் 1998-1999 முதல் 2002-2003 வரையிலான 5 ஆண்டுகள் வருவாய் வரி செலுத்திய ஆவணங்கள் அ.சா.ஆ.105 முதல் அ.சா.ஆ.109 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.66 செல்வராஜ், கோட்ட துணை வட்டாட்சியர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 1,2 எதிரிகள் பெயரில் மாதிரிமங்கலம் கிராமத்தில் உள்ள நிலத்தின் மூலம் 1996–1997 முதல் 2001–2002 வரையிலான 6 ஆண்டுகள் கிடைத்த வருவாய் விவரங்கள் குறித்த ஆவணங்கள் அ.சா.ஆ.110 முதல் அ.சா.ஆ.138 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.67 சீனிவாசன், மாவட்ட புள்ளியியல் அலுவலர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் பயிர்களின் விலை விவரங்கள் குறித்து சாட்சியம் அளித்து விலை விகித அறிக்கை அ.சா.ஆ.139 ஆகவும், வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.140 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.68 கியான்சந்த் போரா, தணிக்கையாளர் அவர்கள் விசாரிக்கப்பட்டு 1, 2 எதிரிகள் மற்றும் சிகா எஜுகேஷனல் டிரஸ்ட்டின் 1998–1999 முதல் 2002–2003 வரையிலான 5 ஆண்டுகள் வருவாய் வரி செலுத்திய ஆவணங்கள் மற்றும் படிவங்கள் அ.சா.ஆ.141 முதல் அ.சா.ஆ.152 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.69 தாமோதரன், விவசாய இணை இயக்குனர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் பயிர் மற்றும் விளை பொருட்களின் மதிப்பீட்டு அறிக்கைகள் அ.சா.ஆ.153 முதல் அ.சா.ஆ.162 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.70 லூர்துராஜ், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் வாழை விளைச்சலில் கிடைத்த வருவாய் அறிக்கை அ.சா.ஆ.163 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.71 இராமசாமி, இந்தியன் ஒவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் அவர்கள் விசாரிக்கப்பட்டு விஷால் எக்ஸ்போ நிறுவனத்தின் வங்கி கணக்கு அறிக்கைகள் அ.சா.ஆ.164 மற்றும் அ.சா.ஆ.165 ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.72 இளங்கோ, விஷால் எக்ஸ்போ நிறுவனத்திற்கு குழாய் சுருள் மற்றும்

டிரம்கள் வழங்கிய நபராக விசாரிக்கப்பட்டு அது குறித்த 3 விலைப்பட்டியல்கள் மற்றும் 3 ரசீதுகள் அ.சா.ஆ.166 முதல் அ.சா.ஆ.172 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.73 நாராணயன், வணிகவரித் துறை அலுவலர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 2ம் எதிரியின் பெயரில் விஷால் எக்ஸ்போ என்ற நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் அ.சா.ஆ.173 முதல் அ.சா.ஆ.203 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அ.சா.74 இரவிச்சந்திரன், லட்சுமி கார்கோ கம்பெனியின் நிர்வாகி அவர்கள் விஷால் எக்ஸ்போ கம்பெனியின் ஏற்றுமதி வணிகம் குறித்து சாட்சியம் அளித்து அவரால் மேற்படி நிறுவனத்தின் ஏற்றுமதி இறக்குமதி சான்றிதழ் நகல் அ.சா.ஆ.204 ஆகவும், 2ம் எதிரியின் போன் எண்ணின் புகைப்பட நகல் அ.சா.ஆ.205 ஆகவும், மேற்படி நிறுவனத்தின் டேட்டாபேஸ் நகல் அ.சா.ஆ.206 ஆகவும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சான்றிதழ் அ.சா.ஆ.207 ஆகவும், மேற்படி நிறுவனத்தில் ஏற்றுமதி இறக்குமதி செய்த பொருட்களின் விவரம் அ.சா.ஆ.208 ஆகவும், ஏற்றுமதி இறக்குமதி செய்த பொருட்களுக்கான ரசீதுகள் அ.சா.ஆ.209 ஆகவும், மேற்படி கணக்கு பேரேடு எக்ஸ்ட்ராக்ட் அ.சா.ஆ.210 ஆகவும், மேற்படி நிறுவனத்தால் வழங்கிய காசோலை ஒருங்கிணைந்த அறிக்கை அ.சா.ஆ.211 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.75 முஸ்தபா, ஏஜியன் சிண்டிகேட் ஹார்ட்வேர் நிறுவனத்தின் உரிமையாளர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் விஷால் எக்ஸ்போ நிறுவனத்திற்கு நட்டு, போல்ட்டுகள் சப்ளை செய்ததற்கான ரசீதுகள் அ.சா.ஆ.212 மற்றும் அ.சா.ஆ.213 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.76 ஹெக்டே, ராகவேந்திரா எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அவர்கள் விஷால் எக்ஸ்போ நிறுவனத்திற்கு பொருட்கள் வழங்கியது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.77 மணிவாசகம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பொது மேலாளர் அவர்கள் விஷால் எக்ஸ்போ நிறுவனத்தின் வங்கி கணக்கு விவரங்கள் குறித்து விசாரிக்கப்பட்டு அவர் ஆய்வாளருக்கு வழங்கிய கடிதம் அ.சா.ஆ.214 ஆகவும், வங்கி கணக்கின் சான்றிட்ட நகல்கள் அ.சா.ஆ.215 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.78 ராஜபாண்டியன், இந்தியன் வங்கியின் மூத்த மேலாளர் அவர்கள் விஷால் எக்ஸ்போ நிறுவனத்தின் வங்கி கடன் விவரங்கள் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் வங்கி கணக்கு விவரங்கள் அ.சா.ஆ.216, கடன் விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் அ.சா.ஆ.217 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.79 ஜனகராஜ், மாதவ் மார்பில்ஸ் மற்றும் கிரானைட் நிறுவனத்தின் நிதி மேலாளர் அவர்கள் விஷால் எக்ஸ்போ நிறுவனத்துடன் உள்ள வணிக விவரங்கள் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் பணம் பெற்றதற்கான ரசீதுகள், பொருட்களை அனுப்பியதற்கான ரசீதுகள் மற்றும் பொருட்களை பெற்றுக் கொண்டதற்கான ரசீதுகள், லெட்ஜர் நகல் ஆகியவைகள் அ.சா.ஆ.218 முதல் அ.சா.ஆ.288 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.80 செல்வராஜ், கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 2ம் எதிரியின் பெயரில் கிரானைட் குவாரி இல்லையென வழங்கிய சான்று அ.சா.ஆ.289 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.81 திருஞானம், கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 2ம் எதிரியின் பெயரில் கிரானைட் குவாரி இல்லையென வழங்கிய சான்று அ.சா.ஆ.290 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.82 செல்வம், கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 2ம் எதிரியின் பெயரில் கிரானைட் குவாரி இல்லையென வழங்கிய சான்று அ.சா.ஆ.291 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.83 மகேந்திரன், கிரேன் ஆப்பரேட்டர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.84 மோகன்தாஸ், ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்தின் மேலாளர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 2ம் எதிரியின் பெயரில் உள்ள சீட்டுகள் குறித்து சீட்டுகள் விவரம், பணம் செலுத்திய ரசீதுகள், கணக்கு விவரங்கள் ஆகியவைகள் அ.சா.ஆ.292 முதல் அ.சா.ஆ.298 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.85 நாராயணசாமி, அ.சா.86 ராஜரத்தினம், அ.சா.87 ஜெயச்சந்திரன், அ.சா.88 மூர்த்தி, அ.சா.89 ஆசைத்தம்பி, அ.சா.90 இராமநாதன், அ.சா.91 மனோகரன் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.92 மனோகரன், விழுப்புரம், மத்திய கூட்டுறவு வங்கியின் பொது மேலாளர் அவர்கள் 2ம் எதிரி லாரி வாங்கியது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் 2ம் எதிரியின் கடன் விண்ணப்பம், கடன் தொடர்பான ஆவணங்கள், ரசீதுகள் மற்றும் காசோலைகள் ஆகியவைகள் அ.சா.ஆ.299 முதல் அ.சா.ஆ.310 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.93 முரளி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பொது மேலாளர் அவர்கள் விஷால் எக்ஸ்போ நிறுவனத்தின் ஏற்றுமதி குறித்து விசாரிக்கப்பட்டு அவரால்

ஏற்றுமதி குறித்த கடிதங்கள் மற்றும் ரசீதுகள் ஆகியவைகள் அ.சா.ஆ.311 முதல் அ.சா.ஆ.326 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.94 சேஷாத்திரி, விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் உதவி மேலாளர் அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் நன்கொடை காசோலை அ.சா.ஆ.327 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.95 லலிதா பாய், விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாளர் அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் நன்கொடை காசோலை அ.சா.ஆ.328 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.96 ராஜாராமன், விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் உதவி பொது மேலாளர் அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் நன்கொடை காசோலை அ.சா.ஆ.329 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.97 ரகுபதி, விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாளர் அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் நன்கொடை காசோலை அ.சா.ஆ.330 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.98 ஹரிதாசன் தனிநபராக விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.99 சவிதா சங்கரன், விழுப்புரம் கூட்டுறவு வங்கியின் உதவி பொது மேலாளர் அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் நன்கொடை காசோலை அ.சா.ஆ.331 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.100 சுந்தரேசன், விழுப்புரம் கூட்டுறவு வங்கியின் உதவி மேலாளர் அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் நன்கொடை காசோலை அ.சா.ஆ.332 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.101 ஸ்ரீதர், அ.சா.102 நாராயணன், அ.சா.103 ஜோசப் ரெஜி சேவியர், அ.சா.104 ஆறுமுகம், அ.சா.105 வெங்கடேசன் ஆகியோர்கள் காசோலைகள் குறித்து விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.106 பாபு, வழக்கறிஞர் அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் நன்கொடை ரசீது அ.சா.ஆ.333 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.107 ஏழுமலை, அ.சா.108 சுகுமார் ஆகியோர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.109 ரமணன், அ.சா.110 கருணாநிதி, அ.சா.111 தண்டபாணி, அ.சா.112 கார்த்திகேயன், அ.சா.113 கோபு ஆகியோர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவர்களால் நன்கொடை ரசீதுகள் முறையே அ.சா.ஆ.334 முதல் அ.சா.ஆ.338 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.114 அருள்மொழி அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.115 ராஜகோபால், அ.சா.116 இராமநாதன், அ.சா.117 வெங்கடேசன், அ.சா.118 பார்த்திபன் ஆகியோர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவர்களால் நன்கொடை ரசீதுகள் முறையே அ.சா.ஆ.339 முதல் அ.சா.ஆ.342 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.119 குமரகுரு, அ.சா.120 குப்புசாமி, அ.சா.121 மணி, அ.சா.122 செந்தில் குமார், அ.சா.123 கருணாநிதி ஆகியோர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது

குறித்து விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.124 மனோகரன், ஆட்டோமேஷன் பொறியாளர், அரசு ஆட்டோமேஷன் டிப்போ, கடலூர் அவர்கள் 1, 2 எதிரிகளின் வாகனங்களின் பராமரிப்பு மற்றும் எரிபொருள் செலவுகள் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் அ.சா.ஆ.343 முதல் அ.சா.ஆ.345 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.125 முத்தையன் அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.126 தனசேகரன், விழுப்புரம், மத்திய கூட்டுறவு வங்கியின் உதவி பொது மேலாளர் அவர்கள் 2ம் எதிரி லாரி வாங்கியது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் வரைவோலை, கடன் சீட்டு, கடன் பேரேடு, தினசரி பதிவேடு ஆகிய ஆவணங்கள் அ.சா.ஆ.346 முதல் அ.சா.ஆ.350 வரையில் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.127 ராஜகண்ணு, விழுப்புரம், தமிழ்நாடு மின்வாரிய உதவி பொறியாளர் அவர்கள் 2ம் எதிரியின் வீட்டு மின் கட்டணம் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் அ.சா.ஆ.351 முதல் அ.சா.ஆ.353 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.128 முத்து, சென்னை, வட்டார போக்குவரத்து அலுவலக இணை ஆணையர் அவர்கள் கௌதம் சிகாமணி பெயரில் இருந்த லான்சர் கார் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் அ.சா.ஆ.299 மற்றும் அ.சா.ஆ.355 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.129 செல்வம், விழுப்புரம், வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் நிலை–1 மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் 2ம் எதிரியின் பெயரில் உள்ள இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை வழங்கியது தொடர்பாக

விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.356 மற்றும் அ.சா.ஆ.357 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.130 சேகர் அவர்கள் 1ம் எதிரியின் மகன்களின் திருமண சமையல் செலவு குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.131 குமரவேல் அவர்கள் 1ம் எதிரியின் மகன்களின் திருமணத்தில் பேண்டு மற்றும் மெல்லிசை நிகழ்ச்சிகளின் செலவு குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.132 விஸ்வநாதன், விழுப்புரம், மத்திய கூட்டுறவு வங்கியின் உதவி பொது மேலாளர் அவர்கள் சிகா டிரஸ்டிற்கு நன்கொடை அளித்தது குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் நன்கொடை காசோலைகள் முறையே அ.சா.ஆ.358 முதல் அ.சா.ஆ.359 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.133 ரத்தினசபாபதி, அண்ணாமலை பல்கலை கழகத்தின் பதிவாளர் அவர்கள் 1ம் எதிரியின் மகன்களின் மருத்துவ படிப்பிற்கு செலுத்திய கல்வி கட்டண விவரங்கள் குறித்து விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.360 மற்றும் அ.சா.ஆ.361 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.134 சிதம்பரநாதன், தொழிற்சாலை ஆய்வாளர், 2ம் எதிரியின் விஷால் ஆட்டோமொபைல் நிறுவனத்திற்கு உரிமம் வழங்கிய வகையில் விசாரிக்கப்பட்டு அந்த வகையிலான ஆவணங்கள் மற்றும் அறிக்கை அ.சா.ஆ.362 முதல் அ.சா.ஆ.367 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.135 இளவழகன், கடலூர், தமிழ்நாடு மின்சார வாரிய உதவி பொறியாளர் அவர்கள் 2ம் எதிரியின் வீட்டு மின் கட்டணம் தொடர்பாக விசாரிக்கப்பட்டு அவரால் தற்காலிக மின் கட்டண அட்டை, நிரந்தர மின் கட்டண அட்டை மற்றும் மின் கட்டண

ரசீதுகள் முறையே அ.சா.ஆ.368 முதல் அ.சா.ஆ.370 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.136 வைத்தியலிங்கம், தமிழ்நாடு தலைமை செயலக பொதுத்துறையின் உதவி செயலாளர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 1ம் எதிரிக்கு மந்திரி பதவி வழங்கிய கடிதம் அ.சா.ஆ.371 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.137 வாசுதேவன், முண்டியம்பாக்கம், சவுத் இண்டியன் சுகர் நிறுவனத்தின் இயக்குனர் அவர்கள் விசாரிக்கப்பட்டு அவரால் 1, 2 எதிரிகளிடமிருந்து பெறப்பட்ட கரும்பிற்காக வழங்கப்பட்ட பணம், போக்குவரத்து செலவு மற்றும் கடிதங்கள் குறித்த ஆவணங்கள் அ.சா.ஆ.372 முதல் அ.சா.ஆ.377 வரை குறியிடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.138 கிருஷ்ணமூர்த்தி, அ.சா.139 நாகராஜன் ஆகியோர்கள் அவர்களது மகன்களின் கல்வி கட்டணம் குறித்து விசாரிக்கப்பட்டு அவர்களால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.140 நந்தகுமார், வாணி சவுண்ட் சர்வீஸ் அவர்கள் அவர்கள் 1ம் எதிரியின் மகனின் திருமணத்தில் மின் விளக்குகள் செலவு விவரம் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.141 கதிர்வேலு அவர்கள் சிகா எஜுகேஷனல் டிரஸ்டிற்கு நன்கொடை அளித்த நபராக விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.142 முத்துசாமி அவர்கள் சிகா எஜுகேஷனல் டிரஸ்டிற்கு நன்கொடை அளித்த நபராக விசாரிக்கப்பட்டு அவரால் நன்கொடை ரசீது அ.சா.ஆ.378 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.143 தரம்சந்த், தர்மேஷ் ஆட்டோ பைனான்ஸ் உரிமையாளர் அவர்கள் விஷால் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்திற்கு கடன் கொடுத்த நபராக விசாரிக்கப்பட்டு தர்மேஷ் ஆட்டோ பைனான்ஸ், சாந்தி இன்வெஸ்ட்மெண்ட் மற்றும் கௌதம்சந்த் ஆகியோரின் கணக்கு விவரங்களை அ.சா.ஆ.379 முதல் அ.சா.ஆ.381 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.144 கிருஷ்ணமூர்த்தி, ஆட்சியரின் தனி உதவியாளர் அவர்கள் தேர்தல் செலவு விவரம் குறித்து விசாரிக்கப்பட்டு 1ம் எதிரியின் தேர்தல் செலவின விவர அறிக்கை அ.சா.ஆ.382 ஆகவும், தேர்தல் செலவின விவரம் குறித்து காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.383 ஆகவும், 1ம் எதிரி வழங்கிய ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் அ.சா.ஆ.384 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.145 ஆறுமுகம் அவர்கள் சிகா எஜுகேஷனல் டிரஸ்டிற்கு நன்கொடை அளித்த நபராக விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.146 யோகலிங்கம், விழுப்புரம், வருவாய் வரி அலுவலர் அவர்கள் 2ம் எதிரி மற்றும் விஷால் எக்ஸ்போ நிறுவனத்தின் வருவாய் வரி குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் அ.சா.ஆ.385 மற்றும் அ.சா.ஆ.386 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.147 அசோக்குமார், குருதேவ் மோட்டார்ஸ், பொது மேலாளர் அவர்கள் டாடா சுமோ வாகனத்தின் கடன் விவரம் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் அ.சா.ஆ.387 முதல் அ.சா.ஆ.391 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.148 பாலசுந்தரம், விழுப்புரம் விவசாய கூட்டுறவு வங்கியின் செயலாளர் அவர்கள் டிஎன்=32=1285 என்ற டிராக்டர் மற்றும் டிரெயிலர் வாகனத்தின் கடன் விவரம் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் கடன் பேரேடுகள் மற்றும் ரசீதுகள் அ.சா.ஆ.392 முதல் அ.சா.ஆ.397 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.149 லட்சுமிநாராயணன், இராமச்சந்திரா மருத்துவ கல்லூரியின் கணக்காளர் அவர்கள் 2ம் எதிரியின் மகன் அசோக் சிகாமணியின் கட்டண விவரம் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் கட்டண ரசீது அ.சா.ஆ.398 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.150 முருகன், தமிழ்நாடு மின்வாரிய பணியாளர் அவர்கள் 3ம் எதிரியின் மின் கட்டண விவரம் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் 15.05.2003 தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.399 ஆகவும், 3ம் எதிரியின் மின் இணைப்பு விண்ணப்பம் அ.சா.ஆ.400 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.151 சண்முகசுந்தரம், பிஎஸ்சி மோட்டார்ஸ், உதவி பொது மேலாளர் அவர்கள் 2ம் எதிரிக்கு இரண்டு டிப்பர் லாரி விற்ற நபராக விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.152 திரு.ஏ.எஸ்.ரவி, சிறப்பு நீதிபதி, கோயம்பத்தூர் அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 164ன் கீழான வாக்குமூலம் பதிவு செய்த சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவரால் தலைமை நீதித்துறை நடுவரின் 18.06.2003 தேதியிட்ட உத்தரவு அ.சா.ஆ.401 ஆகவும், புலன் விசாரணை அதிகாரியின் வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.402 ஆகவும், 11 அழைப்பாணைகள் அ.சா.ஆ.403 ஆகவும், மனோகரன், வரதராமானுஜம், சத்தியாசங்கர், சுந்தரேசன், பார்த்தசாரதி, ரகுபதி, ராஜாராமன், பார்த்திபன், சேஷாத்திரி, விஸ்வநாதன், லலிதாபாய் ஆகியோரின் வாக்குமூலங்கள்

அ.சா.ஆ.404 முதல் அ.சா.ஆ.414 ஆகவும், தலைமை நீதித்துறை நடுவருக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.415 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.153 சுப்ரமணியன், கணக்காளர், பி.எஸ்.என்.எல். அவர்கள் 1ம் எதிரயின் பெயரில் தொலைபேசி கட்டணம் செலுத்திய விவரம் குறித்து சாட்சியம் அளித்து அ.சா.ஆ.416 மற்றும் அ.சா.ஆ.417 அவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.154 பத்மநாபன், விழுப்புரம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் செயலாளர் அவர்கள் 2ம் எதிரியின் பெயரில் வீடு ஒதுக்கீடு செய்து ஒப்படைத்தது குறித்து விசாரிக்கப்பட்டு வீடு ஒதுக்கீடு செய்து ஒப்படைத்த கோப்பு அ.சா.ஆ.418 ஆக குறியீட செய்யப்பட்டுள்ளது.

அ.சா.155 வடிவேலு என்பவர் டிராக்டர் வாங்கிய நபராக விசாரிக்கப்பட்டு அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.156 சாம்பசிவம், இந்தியா சிமெண்ட்ஸ் கம்பெனியின் ரீஜினல் மேனேஜர் கௌதம் டிரேடர்ஸ் நிறுவனத்துடனான வணிகம் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் அ.சா.ஆ.419 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.157 சந்தோஷ்குமார், விழுப்புரம், கரூர் வைஸ்யா வங்கியின் கிளை மேலாளர் அவர்கள் 4ம் எதிரி சிகா எஜுகேஷனல் டிரஸ்டியாக இருந்து சிகா மேல்நிலை பள்ளியில் கட்டிடம் கட்ட பெற்ற கடன் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் கடன் விண்ணப்பம் அ.சா.ஆ.420 ஆகவும், வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.421 ஆகவும், வங்கி கணக்கு விவரம் அ.சா.ஆ.422 ஆகவும், 3ம் எதிரி மேற்படி கடனுக்காக கொடுத்த ஆவணங்கள் அ.சா.ஆ.423 ஆகவும், சிகா எஜுகேஷனல் டிரஸ்டின் வங்கி கணக்கு விவரங்கள் அ.சா.ஆ.424 மற்றும் அ.சா.ஆ.425 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.158 வெங்கடேஷ், சார் பதிவாளர் அவர்கள் 3ம் எதிரியின் பெயரில் உள்ள சொத்துக்கள் குறித்து சாட்சியம் அளித்து அவரால் அ.சா.ஆ.426 முதல் அ.சா.429 வரையிலும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.159 ஆறுமுகம், இணை சார் பதிவாளர் அவர்கள் 3,5ம் எதிரிகளின் பெயரில் கப்பியாம்புலியூர் கிராமத்தில் உள்ள சொத்துக்களை விற்பனை செய்தது குறித்து சாட்சியம் அளித்து அவரால் அ.சா.ஆ.430 மற்றும் அ.சா.431 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.160 விஸ்வநாதன், புள்ளியியல் ஆய்வாளர் அவர்கள் 1ம் எதிரியின் குடும்ப செலவின விவரங்கள் குறித்து சாட்சியம் அளித்து அவரால் அ.சா.ஆ.432 மற்றும் அ.சா.433 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.161 ரவிச்சந்திரன், கடலூர், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்கள் விஷால் ஆட்டோமொபைல்ஸ், 2ம் எதிரியின் வீடு மற்றும் சிகா மேல்நிலைப் பள்ளியின் விடுதி ஆகியவற்றின் மதிப்பீட்டு அறிக்கை குறித்து ராமன் என்பவர் சார்பாக விசாரிக்கப்பட்டு அவரால் மதிப்பீட்டு அறிக்கைகள் அ.சா.ஆ434 முதல் அ.சா.ஆ.441 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.162 செந்தில்நாதன், விழுப்புரம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் கிளை மேலாளர் அவர்கள் 1ம் எதிரியின் பெயரில் டாடா சுமோ வாகனம் வாங்கிய கடன் கணக்கு விவரம் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் கடன் கணக்கு விவரம் அ.சா.ஆ.442 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.163 வெங்கடேசன், விழுப்புரம், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அவர்கள் 1ம் எதிரியின் பெயரில் கடனில் வாங்கப்பட்ட வாகனங்களின் கடன் கணக்கு விவரங்கள் குறித்து கனகராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர் சார்பாக விசாரிக்கப்பட்டு அவரால் அ.சா.ஆ.443 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.164 சரவணன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்கள் சிகா மேல்நிலைப் பள்ளியின் மதிப்பீட்டு அறிக்கை குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் மதிப்பீட்டு அறிக்கைகள் அ.சா.ஆ444 மற்றும் அ.சா.ஆ.445 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.165 சங்கீதா, விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாளர் அவர்கள் சிகா எஜுகேஷனல் டிரஸ்டின் வைப்பீடு குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் வரதராமானுஜம், பார்த்திபன், சுந்தரேசன், ராஜாராம் ஆகியோரின் வங்கி கணக்கு விவரங்கள் அ.சா.ஆ.446 முதல் அ.சா.ஆ.449 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.166 செல்வம், விழுப்புரம், வணிகவரி அலுவலக உதவி ஆணையாளர் அவர்கள் விஷால் எக்ஸ்போ மற்றும் கௌதம் டிரேடர்ஸ் நிறுவனங்களின் வணிக வரி குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் அழைப்பாணைகள் மற்றும் அஞ்சலக ஒப்புகை அட்டைகள் ஆகியவற்றை அ.சா.ஆ.450 முதல் அ.சா.ஆ.455 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.167 பார்த்திபன், கரூர் வைஸ்யா வங்கியின் நிர்வாகி அவர்கள் சிகா மேல்நிலைப் பள்ளியின் வைப்பீடுகள் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் அ.சா.ஆ.456 முதல் அ.சா.ஆ.481 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.168 சுபிதா, விழுப்புரம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிளை மேலாளர் அவர்கள் விஷால் எக்ஸ்போ நிறுவனத்தின் வங்கி கணக்கு விவரங்கள் குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் அ.சா.ஆ.482 ஆகிய ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.169 பன்னீர்செல்வம், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் இவ்வழக்கில் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்து விசாரிக்கப்பட்டு அவரை விசாரணை அதிகாரியாக நியமித்த நியமன ஆணை அ.சா.ஆ.483 ஆகவும், வங்கி கணக்குகள் விசாரணை குறித்த செயல்முறை அ.சா.ஆ.484 ஆகவும், 2ம் எதிரியின் பெயரில் உள்ள சொத்தின் மதிப்பீட்டு அறிக்கை அ.சா.ஆ.485 ஆகவும், கரும்பு விலை நிர்ணயம் செய்த ஆவணம் அ.சா.ஆ.486 ஆகவும், 1ம் எதிரியின் மகனின் திருமணத்தில் பூ அலங்காரம் செய்த செலவின கோப்பு அ.சா.ஆ.487 ஆகவும், வரதராமானுஜம், பார்த்தசாரதி ஆகியோர் வழங்கிய காசோலைகள் அ.சா.ஆ.488 முதல் அ.சா.ஆ.491 ஆகவும், மத்திய கூட்டுறவு வங்கியின் கடிதம் அ.சா.ஆ.492 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.170 சரவணன், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் இவ்வழக்கில் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்து விசாரிக்கப்பட்டு அவரால் 3ம் எதிரியின் வருமான வரி விவரம் குறித்த சான்றிட்ட நகல்கள் அ.சா.ஆ.493 ஆகவும், பி.ஜி.ரமேஷ் என்பவர் வழங்கிய கடிதம் அ.சா.494 ஆகவும், நவீன் மாலிக் என்பவருடனான வணிக ஆவணம் அ.சா.ஆ.495 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.171 ஆதிலட்சுமி, தலைமை எழுத்தர், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விழுப்புரம் அவர்கள் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை பெற்றது குறித்து சாட்சியம் அளித்து அவரால் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

அ.சா.172 பி.வி.தாமஸ், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் இவ்வழக்கில் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்து விசாரிக்கப்பட்டு அ.சா.172ன் ஆதார் அட்டையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.496 ஆகவும், வழக்கின் முதல்

தகவல் அறிக்கை அ.சா.ஆ.497 ஆகவும், இவரை புலன் விசாரணை அதிகாரியாக நியமித்த செயல்முறை உத்தரவு அ.சா.ஆ.498 ஆகவும், வங்கி கணக்குகளை தணிக்கை செய்ய பிறப்பித்த செயல்முறை உத்தரவு அ.சா.ஆ.499 ஆகவும், ரூ.57,500/க்கான படிவம் 95 அ.சா.ஆ.500 ஆகவும், ரூ.21,650/க்கான படிவம் 95 அ.சா.ஆ.501 ஆகவும், 2ம் எதிரியின் பெயரில் உள்ள கட்டிட ஒப்பந்தம் அ.சா.ஆ.502 ஆகவும், ஜி.ஐ.சி. ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனியின் வீட்டு கடன் விண்ணப்பம் அ.சா.ஆ.503 ஆகவும், சென்னை ரமணியம் டவர்ஸ், கிரீன்வேஸ் ரோடு, சென்னை-28ல் வாங்கப்பட்ட சொத்து விவரங்களின் நகல் அ.சா.ஆ.504 ஆகவும், முன்னாள் முனிசிபல் சேர்மன் திருச்சிராப்பள்ளி திரு.பாலகிருஷ்ணன் அவர்களிடம் இருந்து 1ம் எதிரிக்கு 14.06.2000 அன்று அனுப்பப்பட்ட தந்தி அ.சா.ஆ.505ஆகவும், ரூ,2,56,250/ கைப்பற்றிய படிவம் 95 அ.சா.ஆ.506 ஆகவும், 1ம் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 91ன் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணை அ.சா.ஆ.507 ஆகவும், பிராபர்டி ஸ்டேட்மெண்ட் 1 முதல் 6 வரையில் குறிப்பிட்டுள்ளபடி அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பற்றிய விவரங்களை வழங்க 1ம் எதிரிக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.508 ஆகவும், வருமான வரி விவரங்களை வழங்க 2ம் எதிரிக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.509 ஆகவும், 2ம் எதிரிக்கு அனுப்பிய நினைவூட்டல் கடிதம் அ.சா.ஆ.510 ஆகவும், 2ம் எதிரியின் பதில் கடிதம் அ.சா.ஆ.511 ஆகவும், 2ம் எதிரி அனுப்பிய ஸ்பார்க் பிளக்குகள் விற்பனைக்கான விலைப்பட்டியல் அ.சா.ஆ.512 ஆகவும், கால அவகாசம் கோறும் தணிக்கையாளர் கியான்சந்த் போராவின் கடிதம் அ.சா.ஆ.513 ஆகவும், தணிக்கையாளர் கியான்சந்த் போராவின் பதில் கடிதம் அ.சா.ஆ.514 ஆகவும், 1,2ம் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 91ன் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணை அ.சா.ஆ.515 ஆகவும், விஷால் எக்ஸ்போ நிறுவனத்தின் வருமான வரி

விவரங்களை வழங்க 2ம் எதிரிக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.516 ஆகவும், 4ம் எதிரியால் சிகா மேல்நிலை பள்ளியின் மதிப்பீடு நடவடிக்கைகளில் கலந்துகொள்ள 5ம் எதிரிக்கு அளித்த அதிகார கடிதம் அ.சா.ஆ.517 ஆகவும், 4ம் எதிரியால் சிகா ஹாஸ்டலின் மதிப்பீடு நடவடிக்கைகளில் கலந்துகொள்ள 5ம் எதிரிக்கு அளித்த அதிகார கடிதம் அ.சா.ஆ.518 ஆகவும், ஹோண்டா மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு விஷால் எக்போ நிறுவனம் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.519 ஆகவும், 2ம் எதிரியின் சகோதரர்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு 91ன் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணை அ.சா.ஆ.520 ஆகவும், 2ம் எதிரியின் சகோதரர்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு 91ன் கீழ் அனுப்பப்பட்ட நினைவூட்டல் அழைப்பாணை அ.சா.ஆ.521 ஆகவும், சிகா கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்த நபர்களின் பட்டியல் அ.சா.ஆ.522 ஆகவும், 1ம் எதிரியின் மகன்களின் திருமணத்தில் பெறப்பட்ட நன்கொடைகளின் விவரம் அடங்கிய கணக்கு புத்தகம் அ.சா.ஆ.523 ஆகவும், டி-என்-09-பி-1123 என்ற டாடா சுமோ வாகனத்தின் ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட்டின் உண்மை நகல் அ.சா.ஆ.524 ஆகவும், டி-என்-09-பி-1123 என்ற டாடா சுமோ வாகனத்தை விழுப்புரம், ஏ.ரத்தினசாமி நாடார் அண்டு சன்ஸ் நிறுவனத்திற்கு 1ம் எதிரி விற்றதற்கான விற்பனை ரசீது அ.சா.ஆ.525 ஆகவும், விஷால் எக்ஸ்போ நிறுவனத்தின் வருமான விவரங்களை சமர்ப்பிக்குமாறு 2ம் எதிரிக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் அ.சா.ஆ.526 ஆகவும், 1,2ம் எதிரிகளுடைய செல்போல் செலவுகள் விவரம் அ.சா.ஆ.527 ஆகவும், 1ம் எதிரி வீட்டிலுள்ள பர்னீச்சர்களின் விலைப்பட்டியல் அ.சா.ஆ.528 ஆகவும், 1ம் எதிரி வீட்டிலுள்ள எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் குறித்த விலைப்பட்டியல் கடிதம் அ.சா.ஆ.529 ஆகவும், 2ம் எதிரி மற்றும் அவரது சகோதரர்கள் பெயரில் உள்ள விவசாய நிலங்களிலிருந்து பெறப்பட்ட வருவாய் விவரங்கள் அடங்கிய பட்டியல் அ.சா.ஆ.530 ஆகவும், 1ம் எதிரி டி-என்-32-ஏ-

2878 நெம்பர் உள்ள டிராக்டரை வாங்கியதற்கான டெலிவரி நோட் மற்றும் விலைப்பட்டியலின் சான்றளிக்கப்பட்ட நகல் அ.சா.ஆ.531 ஆகவும், கடலூர், விஷால் ஆட்டோ மொபைல்ஸ், ஹீரோ ஹோண்டா ஷோரூம் மதிப்பிடுவதற்கான நடவடிக்கை அ.சா.ஆ.532 மற்றும் அ.சா.ஆ.533 ஆகவும், திரு. சுரேஷ். வி.நாதன், ஜெனரல் மேனேஜர், விற்பனை, ரமணியம் ரியல் எஸ்டேட் லிமிடெட், காந்திநகர், சென்னை-20, அவர்களால் வழங்கப்பட்ட ஆவணங்களின் உண்மை நகல் அ.சா.ஆ.534 ஆகவும், சிகா மேல்நிலை பள்ளி கட்டிடத்தை மதிப்பீட்டு செய்வதற்கான நடவடிக்கை அ.சா.ஆ.535 ஆகவும், சிகா மேல்நிலைப் பள்ளியுடன் இணைந்த ஹாஸ்டல் கட்டிடம் மதிப்பிடுவதற்கான நடவடிக்கை அ.சா.ஆ. 536 ஆகவும், திரு.கிளமெண்ட் அவர்கள் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.537 ஆகவும், துபாயிலுள்ள அல்மாஜிடி ஜெனரல் டிரேடிங் இ.எஸ்.டி கம்பெனியிலிருந்து 40000 ஸ்பார்க் பிளக்குகளை வாங்குவதற்கு விலைப்பட்டியலின் ஜெராக்ஸ் நகல் அ.சா.ஆ.538 ஆகவும், 2ம் எதிரியால் பெறப்பட்ட சென்னை-2, கத்திட்றல் பிரான்ச் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் 03.11.1998 தேதியிட்ட டி.டி.எண். 006377 ஜெராக்ஸ் நகல் அ.சா.ஆ.539 ஆகவும், ஐ.ஏ.எல். கண்டெய்னர் லிமிடெட், சென்னை வழங்கிய லேடிங் பில் கஸ்டம்ஸ் பில்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களின் கோப்பு அ.சா.ஆ. 540 ஆகவும், 1ம் எதிரியால் எழுதி வெளியிடப்பட்ட The Dravidian Movement and The Black Movement புத்தகம் அ.சா.ஆ. 541 ஆகவும், சென்னை ஊழல் தடுப்பு காவல் கண்காணிப்பாளர் சென்னை சிறப்பு புலனாய்வு பிரிவு காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை அ.சா.ஆ.542 ஆகவும், காவல் கண்காணிப்பாளரின் 04.07.2003 தேதியிட்ட நடவடிக்கை கடிதம் அ.சா.ஆ.543 ஆகவும், 1,2 எதிரிகளின் பெயரில் உள்ள அசையும் அசையா சொத்துக்களின் பட்டியல் அறிக்கை அ.சா.ஆ.544

ஆகவும், 1ம் எதிரியால் வாங்கப்பட்ட அசையும் சொத்துக்களின் அறிக்கை அ.சா.ஆ. 545 ஆகவும், தணிக்கை காலத்தில் 1ம் எதிரியின் வருமான அறிக்கை அ.சா.ஆ.546 ஆகவும், தணிக்கை காலத்தில் 1ம் எதிரியின் செலவின அறிக்கை அ.சா.ஆ.547 ஆகவும், தணிக்கை காலத்தில் 1ம் எதிரி மற்றும் இதர நபர்களால் பெறப்பட்ட சொத்துக்களின் அறிக்கை அ.சா.ஆ.548 ஆகவும், சோதனை காலத்தின் இறுதியில் 1ம் எதிரியின் சேமிப்பு அறிக்கை அ.சா.ஆ.549 ஆகவும், 1ம் எதிரியின் விகிதாசாரமற்ற வருவாய் அறிக்கை அ.சா.ஆ.550 ஆகவும், 1ம் எதிரிக்கு புலன் விசாரணை அதிகாரி அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.551 ஆகவும், 1ம் எதிரியால் புலன் விசாரணை அதிகாரிக்கு அனுப்பப்பட்ட கடிதம் அ.சா.ஆ.552 ஆகவும், 1ம் எதிரிக்கு புலன் விசாரணை அதிகாரி அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.553 ஆகவும், 1ம் எதிரியால் புலன் விசாரணை அதிகாரிக்கு அனுப்பப்பட்ட கால அவகாசம் கோறும் கடிதம் அ.சா.ஆ.554 ஆகவும், 1ம் எதிரிக்கு புலன் விசாரணை அதிகாரி அனுப்பிய நினைவூட்டல் கடிதம் அ.சா.ஆ.555 ஆகவும், 1ம் எதிரியால் புலன் விசாரணை அதிகாரிக்கு அனுப்பப்பட்ட பதில் கடிதம் அ.சா.ஆ.556 ஆகவும், ஆவணங்களின் பட்டியல் மற்றும் சாட்சிகளின் பட்டியல் அ.சா.ஆ.557 ஆகவும், 2ம் எதிரி சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், கிரீன்வேஸ் ரோடு, எண் 20/எல், அடுக்குமாடி குடியிருப்பு வாங்குவதற்கான கடன் பெற்றதற்கான கோப்பின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.558 ஆகவும், புலன் விசாரணை அதிகாரியால் 1 முதல் 5 எதிரிகளிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் முறையே அ.சா.ஆ.559 முதல் அ.சா.ஆ.563 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் அ.சா.1 முதல் அ.சா.172 வரையில் கண்ட சாட்சியங்களில் 1, 2 எதிரிகளுக்கு பாதகமான சூழ்நிலை குறித்து

எழுத்துமூலம் கேட்கப்பட்டதற்கு ஒவ்வொரு கேள்விக்கும் எதிரிகள் தரப்பில் மறுத்தளித்து விளக்கம் அளித்துள்ளார். அதன்படி 1, 2 எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும் எழுத்து மூலம் விளக்கினார்கள். அரசு தரப்பு சாட்சியம் முடிந்த பின்னர், எதிரிகள் தரப்பில் ஒரே ஒரு சாட்சியம் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்து. அவரது சாட்சிய சுருக்கம் பின்வருமாறு:-

எ.சா.1 ஆனந்த், சென்னை, தலைமை செயலகத்தில் பொதுத்துறை (பணப்பிரிவு) பிரிவு அலுவலராக பணிபுரிபவர் எதிரிகள் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவரால் மே 1996 முதல் ஏப்ரல் 2001 வரை ஆன காலக்கட்டத்திற்கு 1ம் எதிரி திரு.கே.பொன்முடி அவர்கள் அமைச்சராக பொறுப்பில் இருந்தபோது அவருக்கு ஒதுக்கப்பட்ட அலுவலக வாகனத்திற்கு வழங்கப்பட்ட எரிபொருள் செலவினத் தொகை ரூ.5,74,986/-ஐ பணமாக வழங்கியது குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியல் எ.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின்படி அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-

மே 1996 முதல் மே 2001 வரையில் அ.சா.1 திரு. கே. பொன்முடி, தமிழக போக்குவரத்து துறை அமைச்சராக பணியில் இருந்தார். 13.05.1996 லிருந்து அவர் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக இருந்து வந்தார். அவ்வாறு 13.05.1996 லிருந்து தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக இருந்ததாலும், தமிழக போக்குவரத்து துறை அமைச்சராக பணியாற்றியதாலும் அவர் ஒரு பொது ஊழியராக (Public Servant) கருதப்படுவார். சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனர் அலுவலகத்திற்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் பணியாற்றும் ஒரு காவல் துறை அதிகாரி ஒரு விழிப்பு(Vigilance) அறிக்கை

அனுப்பினார். அந்த அறிக்கையில் 10.05.1996 லிருந்து 30.09.2001 வரை மேலே சொன்ன வகையில் பொது ஊழியராக இருந்த காலத்தில் அவரது பதவியை துஷ்பிரயோகம் செய்து அவரது பெயரிலும் அவரின் மனைவி 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரிலும் அவர்கள் மகன்கள் திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு.அஷோக் சிகாமணி மற்றும் உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் பெயர்களில் அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் சேர்த்ததாக குறித்து அந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த அறிக்கையை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் பரிசீலனை செய்தார். அவ்வாறு அனுப்பப்பட்ட விழிப்பு அறிக்கையின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அனுமதி கேட்டு இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்கள் தமிழக அரசுக்கு ஒரு அனுமதி கடிதம் அனுப்பி அனுமதி பெற்றார். இயக்குனர் கடித எண். RC 70/20/2002/Pub/HQ. Dated 14/03/2002-ன் படி எனக்கு திரு.கே.பொன்முடி அவரது மனைவி திருமதி.விசாலாட்சி மகன்கள் திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு.அஷோக் சிகாமணி அவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய உத்திரவிட்டார். அதன்படி அ.சா.172 ரகசிய விசாரணை செய்து திரு.கே.பொன்முடி அவரது மனைவி திருமதி.விசாலாட்சி மகன்கள் திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு.அஷோக் சிகாமணி அவர்கள் மீது கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கடலூர் பிரிவு, குற்ற எண். 4/2002/AC/CL, ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) மற்றும் இதச பிரிவு 109 படியும் 14.03.2002 18.00 மணிக்கு அன்று முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.497 பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கையின் படி 10.05.1996 மற்றும் 30.09.2001 கால கட்டத்தில் முதல் எதிரி திரு.பொன்முடி அவருடைய மனைவி திருமதி. விசாலாட்சி பெயரில் சொத்துக்கள் மற்றும் 2 டிப்பர் லாரி அவருடைய

மனைவி பெயரில் வாங்கியதாகவும், ஹீரோஹோண்டா டீலர்ஷிப் எடுத்து கடலூர் திருப்பாபுலியூரில் Hero Honda ஷோரூம் கட்டியதாகவும் மற்றும் அவரது மகன் திரு.கொளதம் சிகாமணி பெயரில் ஒரு லேண்சர் கார் TN 32 C 0007 -ஐ விலைக்கு வாங்கியதாகவும், மற்றும் அவருடைய மகன் திரு.கொளதம் சிகாமணி பெயரில் Hello Agency நிறுவனம் என்ற பெயரில் ஏர்செல் டீலர்ஷிப் எடுத்ததாகவும், அவர் மகன் கௌதம் சிகாமணி பெயரில் விழுப்புரம் சந்தர் ராஜ் நகரில் எண்.2 , பட்டரைத் தெருவில் 1,00,000/- மதிப்பில் ஒரு சிமெண்ட் வியாபாரம் செய்ததாகவும், அவரது இரண்டு மகன்கள் பெயரில் அண்ணாமலை பல்கலைகழகத்தில் எம்.பி.பி.எஸ். படிப்பிற்காக ஒரு பெரிய தொகையை கொடுத்ததாகவும் ஆக மொத்த 1ம் எதிரி மேற்படி சொத்துககள் வாங்குவதற்காக 71,00,000/- செலவு செய்ததாகவும் மேலும் தன்னுடைய பெயரில் ஒரு டிராக்டர் பதிவு எண் TN 32 A 2878, Rs.2,37,000/- க்கு வாங்கியதாகவும், பஜாஜ் ஸ்கூட்டர் பதிவெண் TN 32 A 3589, Rs.22,000/-வாங்கியதாகவும் மேற்படி சொத்துக்கள் மற்றும் வியாபாரங்கள் 10.05.1996 முதல் 30.09.2001 வரையில் அவர் பெயரிலும் அவர் மனைவி மற்றும் மகன்கள் பெயரிலும் வாங்கி சொத்து சேர்க்கப்பட்டதாக தெரியவந்தது. ஆகையால் முதல் எதிரி 30.09.2001 தேதியில் சுமார் 75,00,000/- மதிப்பிலான சொத்துக்களை அவருக்கு தெரிந்த வருமானத்திற்கு Disproportionate ஆக சொத்து சேர்த்தது தெரியவந்தது. அதனடிப்படையில் திரு. சி. ஈஸ்வர மூர்த்தி காவல் கண்காணப்பாளர், Vigilance and Anti Corruption, Western Range, Coimbatore Camp at Chennai அவர்கள் ஒரு RC 70/20/2002/Pub/HQ. Dated 14/03/2002 என்ற நடவடிக்கை குற்ற எண். 4/2002/AC/CL வழக்கை விசாரணை செய்ய ஆணை நடவடிக்கைகள் அ.சா.ஆ.498 RC 70/20/2002/Pub/HQ. Dated 14/03/2002 வங்கி கணக்குகளை தணிக்கை செய்ய நடவடிக்கை அ.சா.ஆ.499 வழங்கப்பட்டது.

அ.த.சா.172 புலன்விசாரணை அதிகாரி வழக்கு சம்மந்தமாக 15.03.2002 அன்று சிறப்பு நீதிபதி, சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவரிடம் சோதனை செய்ய Cr.M.P.No.425/2002, Dated 15.03.2002 ல் மனு செய்து அதற்குரிய சோதனை வாரண்ட் வழங்கப்பட்டது. 15.03.2002 ல் மாலை 6 மணிக்கு குழுவினர் மற்றும் அரசு சாட்சிகள் திரு.மாடசாமி மற்றும் திரு.சிவராமகிருஷ்ணன் ஆகியோருடன் முதல் எதிரியின் வீட்டை சோதனை செய்ய சென்றார். முதல் எதிரியின் வீடு பூட்டி காணப்பட்டது. விசாரணையின்போது முதல் எதிரி சென்னையில் இருப்பதாக தெரியவந்தது. முதல் எதிரி வராத காரணத்தினால் தரை தளத்தில் உள்ள முன் கதவு மற்றும் இடது பக்கம் கதவுகளில் பூட்டியிருந்த பூட்டுகளை சீல் செய்தும், அதே மாதிரி முதல் தளத்தில் உள்ள கதவுகளில் பூட்டப்பட்டிருந்த பூட்டுகளின் மீதும் சீல் செய்யப்பட்டது. இதற்கு உண்டான ஒரு நடவடிக்கை 15.03.2002 இரவு 11.00 மணிக்கு தயார் செய்யப்பட்டது. அது அ.சா.ஆ.49. மறுநாள் 16.03.2002 ல் காலை 9.30 மணிக்கு சோதணை அறிக்கை நடவடிக்கை அ.சா.ஆ.50 தயாரிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. அந்த வீட்டு சோதனையின்போது 64 ஆவணங்கள் பட்டியல் அ.சா.ஆ.51 தயார் செய்து சாட்சிகள் முன்னிலையில் ஒரு இன்வென்டிரி மகசர் தயார் அ.சா.ஆ.52 தயார் செய்து 18.03.2002 -ல் வீட்டு சோதனை வாரண்ட் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் வீட்டு சோதனைப் பட்டியல் மற்றும் 64 கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் இன்வென்டிரி மகசர் ஆகியவற்றை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதிபதி, சிறப்பு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ஊழல் தடுப்பு கூடுதல் காவல் கண்காணப்பாளர் திரு.சி.முருகேசன் 15.03.2002 மாலை 6 மணிக்கு அரசு சாட்சிகள் திரு.பொன்முடி, திரு.கே.ஸ்ரீனிவாசன்

முன்னிலையில் சோதனையிட்டார். சோதனையின்போது அவர் சோதனைப் பட்டியல் 0671801 தயார் செய்து ரொக்கப்பணம் ரூ.57,500/- கைப்பற்றினார். மேலும் வீட்டின் அமைப்பையும் வீட்டில் உள்ள அனைத்து பொருட்களையும் இன்வென்டிரி மகசரில் குறிப்பிட்டார். இரவு 12.30 மணிக்கு வீட்டு சோதனையை முடித்துக் கொண்டார். வீட்டு சோதனை வாரண்ட் நிறைவவேற்றப்பட்டபிறகு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.சி.முருகேசன், வீட்டு சோதனை வாரண்ட், கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் 57500/- வீட்டு சோதனைப் பட்டியல் மற்றும் இன்வென்டிரி மகசர் ஆகியவற்றை என்னிடம் ஒப்படைத்தார். வீட்டு சோதனை வாரண்ட், வீட்டு சோதனைப் பட்டியல், இன்வென்டிரி மகசர் ஆகியவற்றை சிறப்பு நீதிபதி, விழுப்புரம் நீதிமன்றத்தில் 18.03.2002 ம் தேதியில் சமர்ப்பித்தார். மேலும் ரூ.57,500/-க்கான படிவம் 95ஐ 05.04.2002ம் தேதியில் ரொக்கப்பபணம் ரூ.57,500/-ம் நீதிமன்றத்தில் ஒப்படைத்த படிவம் 95 அ.சா.ஆ.500.

ஊழல் தடுப்பு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.பாலன் அவர்கள் வீட்டு சோதனை வாரண்ட் உத்தரவு படி விழுப்புரம் கப்பியான்புலியூர் சிகா கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான சிகா மேல்நிலைப்பள்ளியில் 15.03.2002 ம் தேதி மாலை 6 மணியிலிருந்து இரவு 10.30 மணி வரையில் அரசு சாட்சிகள் திரு.நடனம் மற்றும் கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் சோதனையிட்டார். கைப்பற்றப்பட்ட 11 ஆவணங்கள் மற்றும் வீட்டு சோதனைப் பட்டியல் ஆகியவற்றை படிவம் 95ல் படிவம் 95 அ.சா.ஆ.501 சோதனை வாரண்ட்டின் போது கைப்பற்றப்பட்ட 11 ஆவணங்கள் வீட்டு சோதனைப் பட்டியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்.

ஊழல் தடுப்பு டி.எஸ்.பி. திரு. முருகசாமி அவர்கள் வீட்டு சோதனையின் உத்தரவு படி எண்.2, கோர்ட்டு ரோடு, விழுப்புரம், இறந்துபோன 4வது எதிரி திரு.மணிவண்ணன் வீட்டை 15.03.2002ம் தேதி மாலை 6.00 மணியிலிருந்து

இரவு 11.45 மணி வரை சாட்சிகள் முன்னிலையில் மற்றும் திரு.மணிவண்ணன் அவர்கள் முன்னிலையில் சோதனையிட்டார்.

டி.எஸ்.பி. திரு. முருகசாமி அவர்கள் வீட்டு சோதனை வாரண்ட், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், வீட்டு சோதனைப் பட்டியல் கைப்பற்றப்பட்ட மகசர் மற்றும் இரண்டு பார்வை மகசர்கள் இது அ.சா.ஆ.502 ஆவணம்-2 (பட்டியல் ஆவண எண்.140) ஜி.ஐ.சி. Housing Finance வீட்டு லோன் விண்ணப்பம் நகல், அ.சா.ஆ.503 (பட்டியல் ஆவண எண்.141) சென்னை ரமணியம் டவர்ஸ், கிரீன்வேஸ் ரோடு, சென்னை -28 ல் வாங்கப்பட்ட சொத்து விவரங்கள் நகல். இது அ.சா.ஆ.504 ஆக (பட்டியல் ஆவண எண்.142) விஷால் எக்ஸ்போர்ட் பெயரில் உள்ள 7.3.1998 தேதியிட்ட அசல் இன்வாய்ஸ் எண்.99,.98,.104, அ.சா.ஆ.170 முதல் 172 முன்னாள் முனிசிபல் சேர்மன் திருச்சிராப்பள்ளி திரு.பாலகிருஷ்ணன் அவர்களிடம் இருந்து திரு.டாக்டர். கே. பொன்முடி, போக்குவரத்து அமைச்சர், சிகா மேல்நிலை பள்ளி, எண் 2, கோர்ட்டு ரோடு, விழுப்புரம் அவர்களுக்கு 14.06.2000 தேதியில் அனுப்பப்பட்ட தந்தி. இது அ.சா.ஆ.505. ஊழல் தடுப்பு ஆய்வாளர் திரு.குப்புசாமி அவர்கள் வீட்டு சோதனை வாரண்ட் உத்தரவு படி எண்.13 மற்றும் 14, ராமகிருஷ்ணா அவென்யூ, கடலூர் டூ சிதம்பரம் மெயின்ரோடு, செல்லான்குப்பம், கடலூர்-2ல் உள்ள விஷால் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனம் உள்ள ஹீரோஹோண்டா ஷோரூம் அரசு சாட்சிகள் சேகர் மற்றும் ரவிக்குமார் மற்றும் ஷோரூம் மேனேஜர் திரு.விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் 15.03.2002 மாலை 6 மணியிலிருந்து இரவு 10.30 மணி வரை சோதனையிட்டார். வீட்டு சோதனைப்பட்டியல் 971003 தயார் செய்தார். சோதனையின்போது ரொக்கப்பணம் ரூ.2,56,250/- கைப்பற்றினார். மேலும் 4 ஆவணங்கள் கைப்பற்றினார். மேலும்

ஹீரோஹோண்டா ஷோரூமில் உள்ள மோட்டார் சைக்கிள்கள் மற்ற பொருட்களை மகசரில் குறிப்பிட்டார். வீட்டு சோதனை வாரண்ட் நிறைவேற்றப்பட்டபிறகு ஆய்வாளர் திரு.குப்புசாமி அவர்கள் வீட்டு சோதனை வாரண்ட், ரொக்கப்பணம் ரூ.2,56,250/- வீட்டு சோதனைப்பட்டியல் மற்றும் மகசர் ஆகியவற்றை என்னிடம் ஒப்படைத்தார். படிவம் 95ல் ரொக்கப்பணம் ரூ.2,56,250/-ஐ நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்தப் படிவம் 95 அ.சா.ஆ.506.

வழக்கு விசாரணையின்போது முதல் எதிரி அவர்களுக்கு அம்பாசிடர் கார் நெம்பர் டி.என்.எப். 3679 ரெக்கார்டுகளை தருமாறு கு.வி.மு.ச. பிரிவு 91ன் படி ஒரு நோட்டீஸ் அ.சா.ஆ.507 வழங்கினார். பிராபர்டி ஸ்டேட்மெண்ட் 1 முதல் 6 வரையில் குறிப்பிட்டுள்ளபடி அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பற்றிய விவரங்களை வழங்க முதல் எதிரி அவர்களுக்கு 15.05.2002 ம் தேதி ஒரு கடிதம் அ.சா.ஆ.508 அனுப்பினார். அஸெஸ்மெண்ட் ஆண்டு 2001 -2002 மற்றும் 2002 - 2003 க்கு இரண்டாவது எதிரி திருமதி.விசாலாட்சி தாக்கல் செய்த வருமானவரி கணக்குகள் நகல்களை வழங்குமாறு 06.02.2003 ல் அவர்களுக்கு ஒரு கடிதம் அ.சா.ஆ. 509 அனுப்பினார். 26.05.2003ல் ஒரு நினைவூட்டல் கடிதம் அ.சா.ஆ.510 அனுப்பினார். இரண்டாம் எதிரி திருமதி.விசாலாட்சி 04.06.2003 தேதியிட்ட ஒரு பதில் கடிதம் அ.சா.ஆ.511 அனுப்பினார். ரெக்லம் இந்தியா இன்ஜினியர்ஸ், பெங்களூர்-5 க்கு 16255 ஸ்பார்க் பிளக்குகள் 2,68,207.50/- ரூபாய்க்கு இரண்டாம் எதிரி விற்றதிற்கான இன்வாய்ஸ் எண்.VSE001, Dated 28.10.1998 (சுய சான்றிடப்பட்டது) அ.சா.ஆ.512 வழங்கினார். 31.03.2001 மற்றும் 31.03.2002 முடிவடைந்த ஆண்டுகளில் இரண்டாவது எதிரி திருமதி.விசாலாட்சி பெற்ற வருமானத்தின் விவரங்களை அனுப்ப இரண்டாவது எதிரியின் சார்டட் அக்கௌன்டன்ட்.திரு.கியான்சன் போரா அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப, திரு.

கியான்சன்போரா அவர்கள் 29.05.2003 தேதியிட்ட கால அவகாசம் கேட்டு பதில் கடிதம் அ.சா.ஆ.513 அனுப்பினார். நோட்டீஸ் வாங்கியபடி இரண்டாம் எதிரியின் நிதியாண்டு 2001-2002 மற்றும் 2002-2003 வருமான விவரங்களை 30 நாட்களுக்குள் சமர்ப்பிப்பதாக 02.06.2003 தேதியிட்ட பதில் கடிதம் அ.சா.ஆ.514 அனுப்பினார். முதல் எதிரி திரு.கே.பொன்முடி மற்றும் இரண்டாம் எதிரி திருமதி விசாலாட்சி அவர்களுக்கு 06.08.2003 தேதியிட்ட பிரிவு கு.வி.மு.ச. 91 ன் படி ஒரு அறிவிப்பு அ.சா.ஆ.515 அனுப்பினார். 17.01.2003 தேதியிட்ட சிகா கல்வி அறக்கட்டளையின் தலைவர் இறந்து போன 4ம் எதிரி திரு.மணிவண்ணன் ஜனவரி 18 மற்றும் ஜனவரி 19ம் தேதி 2003 ஆகிய தேதிகளில் சிகா மேல்நிலை பள்ளி, மதிப்பீடு நடவடிக்கைகளில் கலந்துகொள்ள இறந்துபோன 5ம் எதிரி திரு.நந்தகோபாலுக்கு அதிகாரம் அளித்த 17.01.2003 தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.517 அனுப்பினார். 24.01.2003 தேதியிட்ட சிகா கல்வி அறக்கட்டளையின் தலைவர் இறந்து போன 4ம் எதிரி திரு.மணிவண்ணன் 25.01.2003-ல் சிகா மேல்நிலைப்பள்ளி (ஹாஸ்டல் கட்டிடம்) மதிப்பீடு நடவடிக்கைகளில் கலந்து கொள்ள இறந்து போன 5ம் எதிரி திரு. நந்தகோபாலுக்கு அதிகாரம் அளித்த 24.01.2003 தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.518. ஹோன்டா மோட்டார்ஸ் நிறுவனத்தினர் ஹோன்டா மோட்டார்ஸ் கம்பெனியிலிருந்து விஷால் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்திற்கு எவ்வளவு ஹோன்டா மோட்டார் சைக்கிள்கள் கொடுத்தனர் என்பதிற்கான விவரம் 21.07.2003 தேதியிட்ட கடிதம் மூலம் என்னிடம் கொடுத்தனர். இது அ.சா.ஆ.519. திரு. சுவாமி நாதன், திரு. நடராஜன் மற்றும் திரு.கனகராஜன் அவர்களால் தாக்கல் செய்த வருமானவரி கணக்குகள் படி தங்கள் வருமானத்தை நிரூபிக்க ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு 01.06.2003 தேதியிட்ட குவிமுச பிரிவு 91ன் படி தனித்தனியாக அனுப்பப்பட்ட அறிவிப்பு (3

தாள்கள்) இது அ.சா.ஆ.520. திரு. சுவாமி நாதன், திரு. நடராஜன் மற்றும் திரு.கனகராஜன் அவர்களால் தாக்கல் செய்த வருமானவரி கணக்குகள் படி தங்கள் வருமானத்தை நிரூபிக்க ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு 12.06.2003 தேதியிட்ட குவிமுச பிரிவு 91ன் படி தனித்தனியாக அனுப்பப்பட்ட நினைவூட்டல் அறிவிப்புகள் (3 தாள்கள்) இது அ.சா.ஆ.521. சிகா கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடைகள் கொடுத்த நபர்களுடைய லிஸ்ட் இறந்து போன 4வது எதிரி மணிவண்ணன் அவர்களால் சுய சான்றிடப்பட்டது. (28 தாள்கள்) இது அ.சா.ஆ.522. முதல் எதிரி திரு.கே.பொன்முடி, விழுப்புரத்தில் உள்ள எண்.6, திருப்பாணாழ்வார் தெரு, கிழக்கு சண்முகாபுரம் காலனி, என்ற முகவரியில் உள்ள வீட்டில் 16.03.2002 வீட்டு சோதனை செய்தபோது திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு.அசோக் சிகாமணி அவர்களின் திருமண வரவேற்பின்போது பரிசாகப் பெறப்பட்ட ரொக்கப்பணம் பட்டியல் அ.சா.ஆ.523 வரிசை (3 நோட்டுப்புத்தகங்கள்). ரீஜினல் போக்குவரத்து அலுவலகம் சென்னை-78, அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட் டாடா சுமோ வண்டி எண். டி-என்-09-பி-1123 ன் உண்மை நகல் அ.சா.ஆ.524. டாடா சுமோ வண்டி எண்.டி-என்-09-பி-1123-ஐ விழுப்புரம், ஏ.ரத்தினசாமி நாடார் அண்டு சன்ஸ் நிறுவனத்திற்கு ரூ.4,50,000/-க்கு முதல் எதிரி திரு. கே.பொன்முடி அவர்களால் விற்றதிற்கான விற்பனை ரசீது அ.சா.ஆ.525.

விஷால் எக்ஸ்போ கணக்குப் புத்தகங்கள் மற்றும் விவசாயம் வருமானம் 1997-1998, 1998-1999, 1999-2000 ஆண்டுகளுக்கான கணக்குகளை சமர்ப்பிக்குமாறு இரண்டாம் எதிரி திருமதி. விசாலாட்சிக்கு 17.05.2002 அன்று அனுப்பிய கடிதத்தின் நகல். அந்தக் கடிதத்தை 18.05.2002ம்தேதி இரண்டாம் எதிரி பெற்றுக்கொண்டு கையெழுத்திட்டார். மேற்படி 17.05.2002 தேதியிட்ட கடிதத்தின் நகல் அ.சா.ஆ.526.

ஏர்செல் லிமிடெட், கோயம்புத்தூர், அதன் மேலாளர் திரு.ராஜேஷ் அவர்களால் கொடுக்கப்பட்ட முதல் மற்றும் இரண்டாம் எதிரியுடைய செல்போல் செலவுகள் விவரம் அ.சா.ஆ.527. முதல் எதிரி வீட்டிலுள்ள பரனீச்சர்களின் ரீடெயில் விலை குறித்து, ஜெயபாரதம் பர்னீச்சர்ஸ், சென்னை 14, அதன் மேலாளர் திரு. ஜெ.குமாரிடமிருந்து 11.10.2003 அன்று பெறப்பட்ட விலைப்பட்டியல் அ.சா.ஆ.528.

முதல் எதிரி வீட்டிலுள்ள எலக்ட்ராணிக்ஸ் அயிட்டம் குறித்து எஸ்.சி.ஷா. கம்பெனி பிரைவேட் லிமிடெட், அண்ணா சாலை, சென்னை 18 என்பவர்கள் 03.09.2003 அன்று கொடுத்த விலைப்பட்டியல் கடிதம் அ.சா.ஆ.529.

திரு.சுவாமிநாதன், திரு.நடராஜன், திரு.கனகராஜன் மற்றும் இரண்டாவது எதிரி திருமதி. விசாலாட்சி ஆகியோர் பெயரில் பாகாலா, ஆந்திரபிரதேசத்திலுள்ள பூர்வீக விவசாய நிலங்களின் விவரங்கள் மற்றும் அந்த விவசாய நிலங்களிலிருந்து 1999 - 2000 மற்றும் 2001 வருடங்களில் பெறப்பட்ட வருமானம் திரு.ரெட்டி பிரசாத், மண்டல வருவாய் துறை அலுவலர், பாகாலா, ஆந்திரபிரதேசம் அவர்கள் வழங்கினார். இந்த விவரங்கள் அடங்கிய பட்டியல் அ.சா.ஆ.530 ( 12-தாள்கள்). பாகாலாவில் உள்ள மூதாதையர் சொத்துக்கள் அதாவது வீடுகள், இறந்து போன 3ம் எதிரி திருமதி சரஸ்வதியின் மகன்களான சுவாமிநாதனுக்கும் நடராஜனுக்கும் மற்றும் கனகராஜனுக்கும் மற்றும் இறந்துபோன மூன்றாவது எதிரி திருமதி.சரஸ்வதிக்கும் இடையே பாகப்பிரிவினை செய்யப்பட்டதற்கான ஆவணம் 100/- ரூபாய் முத்திரைத் தாளில் எழுதப்பட்ட 03.10.1997 தேதியிட்ட பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணத்தை திரு.சாமுவேல் விஜயன், சார்பதிவாளர், பாகாலா அவர்கள் கொடுத்தார்கள். அது தெலுங்கு மொழியில் உள்ளது. தமிழ்நாடு ஆக்ரோ இன்டஸ்டிரி கார்ப்பொரேஷன், கிண்டி, சென்னையிலிருந்து முதல் எதிரி திரு.கே.பொன்முடி டி-என்-32-ஏ-2878 நெம்பர் உள்ள டிராக்டரை

வாங்கியதற்கான டெலிவரி நோட்டுடன் 03.06.1999 தேதியிட்ட விலைப்பட்டியலின் சான்றளிக்கப்பட்ட நகல். இது அ.சா.ஆ.531 (3 தாள்கள்). கடலூர், செல்லான்-குப்பத்திலுள்ள விஷால் ஆட்டோ மொபைல்ஸ், ஹீரோ ஹோண்டா ஷோரூம் மதிப்பிடுவதற்கான 05.12.2002 தேதியிட்ட என்னால் தயார் செய்யப்பட்ட நடவடிக்கை அ.சா.ஆ.532. கடலூர், செல்லான்குப்பத்திலுள்ள விஷால் ஆட்டோ மொபைல்ஸ், ஹீரோ ஹோண்டா ஷோரூம் மின்சார பணிகள் மதிப்பிடுவதற்கான 14.02.2003 தேதியிட்ட என்னால் தயார் செய்யப்பட்ட நடவடிக்கை அ.சா.ஆ.533. திரு. சுரேஷ். வி.நாதன், ஜெனரல் மேனேஜர், விற்பனை, ரமணியம் ரியல் எஸ்டேட் லிமிடெட், காந்திநகர், சென்னை-20, அவர்களால் வழங்கப்பட்ட கீழ்கண்ட ஆவணங்களின் உண்மை நகல் அ.சா.ஆ.534 வரிசை (5 ஆவணங்கள்) விழுப்புரம் கப்பியான்புலியூரில் உள்ள சிகா மேல்நிலைப்பள்ளி கட்டிடம் மதிப்பிடுவதற்கான 18.01.2003 ம் தேதியிட்ட நடவடிக்கை அ.சா.ஆ. 535. விழுப்புரம் கப்பியான்-புலியூரில் உள்ள சிகா மேல்நிலைப்பள்ளியுடன் இணைந்த ஹாஸ்டல் கட்டிடம் மதிப்பிடுவதற்கான 25.01.2003 ம் தேதியிட்ட நடவடிக்கை அ.சா.ஆ. 536. ரெக்லம் இன்ஜினியர்ஸ், பெங்களூர், உரிமையாளர் திரு.கிளமெண்ட் வழங்கிய கடிதம். இந்தக் கடிதத்தில் திரு.கிளமெண்ட் அவர்கள் விஷால் எக்ஸ்போ தாக்கல் செய்த வருமான வரி கணக்குகள் மற்றும் அவருடைய கம்பெனி லோன் கிரெடிட்டராக வருமான வரி கணக்கு ஸ்டேட்மெண்ட் காணப்பட்டது அவருக்கு சம்மந்தமில்லை என்று தெரிவித்தார். இன்வாய்ஸ் நெம்பர் 001, நாள் 28.10.1988 இந்த இன்வாய்ஸ் அவர் பெறவில்லை என்றும் அதனுடைய தொகையான பணம் கட்டவில்லை என்று தெரிவித்தார். திரு.கிளமெண்ட் அவர்கள் அனுப்பிய கடிதம் (அஞ்சலக கவர் மற்றும் அஞ்சலக ரசீதுடன் ) அ.சா.ஆ. 537. ரூபாய்.3,04,000/-க்கு துபாயிலுள்ள அல்மாஜிடி ஜெனரல் டிரேடிங் இ.எஸ்.டி கம்பெனியிலிருந்து

40000 ஸ்பார்க் பிளக்குகளை வாங்குவதற்கு 10.12.1997 தேதியிட்ட விலைப்பட்டியல் எண்.23899 ஜெராக்ஸ் நகல் அ.சா.ஆ.538 (3 தாள்கள்). சென்னை-2, கத்திட்றல் பிரான்ச் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் 03.11.1998 தேதியிட்ட டி.டி.எண். 006377 ஜெராக்ஸ் நகல் இரண்டாவது எதிரி திருமதி. விசாலாட்சி மூலம் பெற்றார். இரண்டாம் எதிரியால் சுய சான்றிட்டார். அ.சா.ஆ.539. ஐ.ஏ.எல். கண்டெய்னர் லிமிடெட், சென்னை வழங்கிய லேடிங் பில் கஸ்டம்ஸ் பில்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களின் கோப்பு அ.சா.ஆ. 540. முதல் எதிரி டாக்டர் கே.பொன்முடி அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட புத்தகம். The Dravidian Movement and The Black Movement அ.சா.ஆ. 541.

சென்னை ஊழல் தடுப்பு காவல் கண்காணிப்பாளர் சென்னை சிறப்பு புலனாய்வு பிரிவு காவல் கண்காணிப்பாளர் அவர்கள் 04.07.2003 தேதியிட்ட செயல்முறை படி இந்த வழக்கு தொடர்ந்து விசாரணை செய்ய Reference R.C/2002/Pub/HQ படி ஆணையிட்டார். இந்த நடவடிக்கை அ.சா.ஆ.542. மேலும் காவல் கண்காணிப்பாளர் 04.07.2003 தேதியிட்ட R.C/2002/Pub/HQ நடவடிக்கையின் பேரில் வங்கிகளின் கணக்குகளையும் பார்வையிட உத்தரவிடப்பட்டதன்பேரில் அந்த நடவடிக்கையின் பேரில் இந்த வழக்கின் விசாரணையை தொடர்ந்தார். இந்த நடவடிக்கை கடிதம் அ.சா.ஆ.543.

இவ்வழக்கின் விசாரணையின்போது முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களை 10.06.2003ம் தேதி விசாரணை செய்து அவருடைய வாக்குமூலம் பதிவு செய்தார். 2ம் எதிரி திருமதி. விசாலாட்சி அவர்களை 05.06.2003ம் தேதி விசாரணை செய்து அவருடைய வாக்குமூலம் பதிவு செய்தார். 3ம் எதிரி திருமதி. சரஸ்வதி அவர்களை 05.06.2003ம் தேதி விசாரணை செய்து அவருடைய வாக்குமூலம் பதிவு செய்தார். 4ம் எதிரி திரு. மணிவண்ணன் அவர்களை 08.08.2002

ம் தேதி விசாரணை செய்து அவருடைய வாக்குமூலம் பதிவு செய்தார். 5ம் எதிரி திரு. நந்தகோபால் அவர்களை 18.01.2003 ம் தேதி விசாரணை செய்து அவருடைய வாக்குமூலம் பதிவு செய்தார்.

விசாரணையின்போது தணிக்கைக் காலம் மாற்றியமைத்தார். முதல் எதிரி திரு.கே.பொன்முடி பொது ஊழியராக இருந்து 2ம் எதிரி அவருடைய மனைவி திருமதி.விசாலாட்சி பெயரில் சொத்துக்கள், வணிக வியாபாரம் மற்றும் கட்டிடங்கள் கட்டி உள்ளார். மேலும் முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்கள் அவருடைய மாமியார் இறந்துபோன 3ம் எதிரி திருமதி. சரஸ்வதி மற்றும் அவருடன் பணியாற்றிய கல்லூரி விரிவுரையாளர் இறந்துபோன 4ம் எதிரி திரு.மணிவண்ணன், மற்றும் அவருடைய உறவினர் இறந்து போன 5ம் எதிரி திரு. நந்தகோபால் இவர்களுடைய பெயரில் சிகா கல்வி அறக்கட்டளை ஆரம்பித்தார். சிகா கல்வி அறக்கட்டளை பேரில் நிலங்களை வாங்கி பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் விடுதி கட்டி உள்ளார். இந்த சொத்துக்கள் 10.05.1996 முதல் 30.09.2001 வரையிலான தணிக்கைக் காலத்திற்கு பிறகும் முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்கள் கையகப்படுத்தியதாக கண்டறிந்தார். இந்த சொத்துக்கள் அவருடைய அறியப்பட்ட வருமான விகிதசாரத்திற்கு மாறாக இருப்பதாக சந்தேகம் ஏற்பட்டது. எனவே தணிக்கைக் காலம் 10.05.1996 முதல் 30.09.2001 வரை அதற்கடுத்து தணிக்கைக் காலம் 13.05.1996 முதல் 31.03.2002 வரை மாற்றி அமைக்கப்பட்டது. மேலும் விசாரணை யின்போது ஸ்டேட்மெண்ட் 1 லிருந்து 7 வரை பின்வருமாறு தயாரித்தேன். ஸ்டேட்மெண்ட் 1 தணிக்கைக் காலம் தொடக்கத்தில் 13.05.1996 முதல் முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களுடைய பெயரிலும் அவரது மனைவி 2ம் எதிரி திருமதி. விசாலாட்சி பெயரிலும் உள்ள சொத்துக்கள் சேர்க்கப்பட்டது.

1. 14.05.1985 ம் தேதி விழுப்புரம் நகராட்சி, விழுப்புரம் நகரில் முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்கள் சர்வே நெம்பர் 337 B, 339 B மற்றும் 334 ல் உள்ள காலிமனை எண் 2ல் அமைந்த 2400 சதுரடி தனது பெயரில் திரு.கே.தெய்வசிகாமணி

த/பெ.ரங்கசாமி பெயரில் சுமார் ரூ.3480/- க்கு வாங்கினார் . இது விழுப்புரம் இணை 1 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 1497 /1985 பதிவு செய்யப்பட்டது. முத்திரைத் தாள் மற்றும் பதிவு கட்டணம், பட்டா கட்டணம், ஆக மொத்தம் 6445 ரூபாய்

செலவு செய்தார்.

2. 09.06.1987 ல் விழுப்புரம் தாலுக்கா அய்யம் கோயில் பட்டு கிராமத்தில் முதல் எதிரி திரு.கே.பொன்முடி சர்வே எண் 82 ல் 2085 சதுரடி காலிமனை தனது பெயர் தெய்வசிகாமணி த/பெ ரங்கசாமி பெயரில் ரூ.5000/-க்கு வாங்கினார். விழுப்புரம் இணை2 சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1904/1997 ஆக பதிவு செய்யப்பட்டது. முத்திரைத் தாள் கட்டணம், பதிவு கட்டணம் , பட்டா கட்டணம் சேர்ந்து ஆக மொத்தம் ரூ.6146/- செலவு செய்தார்.

3. 01.09.1991 ம் தேதியில் விழுப்புரம் தாலுக்கா வி மருதூர் கிராமத்தில் முதல் எதிரி திரு.கே.பொன்முடி சர்வே எண் 140/2 ல் அமைந்த 2400 சதுரடி காலி மனை தனது பெயர் தெய்வசிகாமணி த/பெ ரங்கசாமி பெயரில் ரூ.1,00,000/-க்கு வாங்கியுள்ளார். இதுவிழுப்புரம் இணை2 சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2133/1991 ஆக 01.091991ம் தேதியில் பதிவு செய்யப்பட்டது. முத்திரைத் தாள் கட்டணம், பதிவு கட்டணம், பட்டா கட்டணம் சேர்ந்து ஆக மொத்தம் ரூ.1,14,146/-க்கு வாங்கினார்.

4. 01.09.1991 ம் தேதியில் விழுப்புரம் தாலுக்கா வி மருதூர் கிராமத்தில் முதல் எதிரி திரு.கே.பொன்முடி சர்வே எண் 140/2 ல் அமைந்த 2400 சதுரடி காலி மனை தனது பெயர் தெய்வசிகாமணி த/பெ ரங்கசாமி பெயரில் ரூ.1,00,000/-க்கு வாங்கியுள்ளார். இது விழுப்புரம் இணை2 சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2538/1991 ஆக 01.091991ம் தேதியில் பதிவு செய்யப்பட்டது. முத்திரைத் தாள் கட்டணம், பதிவு கட்டணம், பட்டா கட்டணம் சேர்ந்து ஆக மொத்தம் ரூ.1,14,146/- க்கு வாங்கினார்.

5. 21.01.1992ம் தேதியில் விழுப்புரம் தாலுக்கா மாதிரி மங்கலம் கிராமத்தில் முதல் எதிரி திரு.கே. பொன்முடி சர்வே எண் 40 ல் 60 செண்ட் விவசாய நிலத்தை தனது பெயர் தெய்வசிகாமணி த/பெ ரங்கசாமி பெயரில் ரூ.15,000/-க்கு வாங்கியுள்ளார். இது விழுப்புரம் தாலுக்கா வளவனூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 21.01.1992 ம் தேதியில் ஆவண எண் 81/1992 பதிவு செய்யப்பட்டது. முத்திரைத் தாள் கட்டணம், பதிவு கட்டணம், பட்டா கட்டணம் சேர்ந்து ஆக மொத்தம் ரூ.17285/- க்கு வாங்கினார்.

6. 21.01.1992ம் தேதியில் விழுப்புரம் தாலுக்கா மாதிரி மங்கலம் கிராமத்தில் முதல் எதிரி திரு.கே. பொன்முடி சர்வே எண் 39/1 ல் 3.25 ஏக்கர் சர்வே நெம்பர் 41ல் 1.62 ஏக்கர் ஆக மொத்தம் 4.87 ஏக்கர் விவசாய நிலங்களை தனது பெயர் தெய்வசிகாமணி த/பெ ரங்கசாமி பெயரில் ரூ.1,00,000/-க்கு வாங்கியுள்ளார். இது விழுப்புரம் தாலுக்கா வளவனூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 21.01.1992 ம் தேதியில் ஆவண எண் 82/1992 பதிவு செய்தார். முத்திரைத் தாள் கட்டணம், பதிவு கட்டணம், பட்டா கட்டணம் சேர்ந்து ஆக மொத்தம் ரூ.1,16,012/- க்கு வாங்கினார்.

7. 28.05.1993 ம் தேதியில் ரிஜிஸ்ட்ரேஷன் நெம்பர் டி என் 32 -1285 டிராக்டர் மற்றும் டிரெய்லர் ரூ.2,30,000/- க்கு முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்கள் பெயரில் வாங்கினார்.

8. 29.07.1988 ம் தேதி திரு கே.பொன்முடி அவர்கள் தனது பெயர் தெய்வசிகாமணி த/பெ ரங்கசாமி பெயரில் பஜாஜ் மோட்டார் சைக்கிள் பி ஓய் க்யு 9095 ரூ.25,500/- வாங்கினார்.

9. 12.04.1987ம் தேதி விழுப்புரம் தாலுக்கா சாலமேடு கிராமம் , சர்வே நெம்பர் 278/4 அமைந்துள்ள 4770 சதுரடி காலிமனை முதல் எதிரி திரு.கேபொன்முடி அவருடய மனைவி 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் ரூ.18,000/-க்கு வாங்கியுள்ளார். இது விழுப்புரம் இணை 1 சார் பதிவாளர் அலுவலகத்தில் 12.04.1987 ம் தேதியில் ஆவண எண்.959/1987 ஆக பதிவு செய்தார். மொத்த செலவு ரூ.22,398.50 ஆகும்.

10. 07.03.1990 ம் தேதியில் விழுப்புரம் தாலுக்கா வி மருதூர் கிராமத்தில் கிழக்கு சண்முகாபுரம் காலனி சர்வே நெம்பர் 130 , 1200 சதுரடி காலி மனை முதல் எதிரி திரு.கேபொன்முடி அவருடய மனைவி 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் ரூ.25,000/- க்கு வாங்கினார். இது விழுப்புரம் இணை 1 சார் பதிவாளர் அலுவலகத்தில் 07.03.1990 ம் தேதியில் ஆவண எண்.433/1990 ஆக பதிவு செய்தார். மொத்த செலவு ரூ. 30566/-ஆகும்.

11. 1993 - 1994 வருடத்தில் முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்கள் மேற்கூரிய காலிமனை 2400 சதுரடி பரப்பளவில் ஒரு கட்டிடத்தை கட்டினார். அதற்கு அவர் ரூ.11,28,000/- செலவு செய்தார்.

எனவே தணிக்கை காலத்தின் தொடக்கத்தில் 13.05.1996 அன்று ஸ்டேட்மெண்ட் I படி முதல் எதிரி திரு.கே.பொன்முடி தனது பெயரிலும்

தனது மனைவி 2ம் எதிரி விசாலாட்சி பெயரிலும் ரூ.18,10,644.50 அளவுக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கியுள்ளதாக தெரியவந்தது.

அ.சா.172 ஸ்டேட்மெண்ட் I அ.சா.ஆ.544 ஸ்டேட்மெண்ட் II தணிக்கைக் காலம் முடிவடைந்த 31.03.2002 அன்று முதல் எதிரி திரு.கே.பொன்முடி தனது பெயரிலும் தனது மனைவி 2ம் எதிரி திருமதி. விசாலாட்சி பெயரிலும் 3ம் எதிரி திருமதி. சரஸ்வதி பெயரிலும் மற்றும் விஷால் எக்ஸ்போ விஷால் ஆட்டோ மொபைல்ஸ் பெயரிலும் சிகா கல்வி அறக்கட்டளை பெயரிலும் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கியதிற்கான ஸ்டேட்மெண்ட் II ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்டேட்மெண்ட் II ல் வரிசை எண் 1 முதல் 8 வரை, 11 முதல் 13 வரை ஸ்டேட்மெண்ட் I ல் குறிப்பிட்டது போலவே உள்ளது.

வரிசை எண்.9

முதல் எதிரி திரு.கே.பொன்முடி 14.05.1999ம் தேதி டிராக்டர் நெம்பர் டி-என்-32-எ-2878, ரூ.239000/-க்கு அவருடைய பெயரில் வாங்கினார்.

வரிசை எண்.10

15.03.2002ம் தேதி சென்னை-15, சைதாப்பேட்டை, எண் 13 நார்த் அவெண்யூ, ஸ்ரீநகர் காலனி, முதல் எதிரி திரு.கே.பொன்முடியின் வீட்டை சோதனை செய்தபோது ரூ.57500/- கைப்பற்றினார்.

வரிசை எண்.14

விழுப்புரம் தாலுக்கா, மாதிரி மங்கலம் கிராமத்தில் 33 செண்ட் விவசாய நிலம் சர்வே நெம்பர் 34/சி ல் உள்ள விவசாய நிலம் மற்றும் சர்வே நெம்பர் 39/1 ல் உள்ள 4.25 ஏக்கர்கள் விவசாய நிலம் 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி, 2ம் எதிரி திருமதி.விசாலாட்சியின் சகோதரி திருமதி.பெரியநாயகி மற்றும் சகோதரர்கள் திரு.சுவாமிநாதன், திரு.நடராஜன் மற்றும் திரு.கனகராஜன் இவர்கள் விடுதலைப்

பத்திரமாக 2ம் எதிரி திருமதி விசாலாட்சிக்கு எழுதிக் கொடுத்தார். அதற்காக 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி அவர்களுக்கு தலா ரூ.5,000/- கொடுத்தார். இந்த ஆவணம் விழுப்புரம் தாலுக்கா, வளவனூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 28.05.1997ம் தேதி பதிவு செய்தார். இதற்கு முத்திரைத் தாள் கட்டணம், பதிவு கட்டணம், பட்டா கட்டணம் சேர்ந்து ஆக மொத்தம செலவு ரூ.27,600/- செலவு செய்தார்.

வரிசை எண்.15

விழுப்புரம் தாலுக்கா மாதிரி மங்கலம் கிராமத்தில் சர்வே நெம்பர் 39/1 ல் 3.05.33 ஏக்கர்கள் விவசாய நிலம் 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் வாங்கினாார். இது வளவனூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 28.05.1997 அன்று டாக்மெண் எண் 632/ 1997, ஆக பதிவு செய்தார். மதிப்பு ரூ.91,500/- ஆகும் .இதற்கு முத்திரைத் தாள் கட்டணம், பதிவு கட்டணம், பட்டா கட்டணம் சேர்ந்து ஆக மொத்தம் செலவு ரூ.1,07,426/- செலவு செய்தார்.

வரிசை எண்.16

விழுப்புரம் தாலுக்கா மாதிரி மங்கலம் கிராமத்தில் சர்வே நெம்பர் 44/1 ல் 95 செணட்டுகள், சர்வே நெம்பர் 39/1ல் 5 செண்ட்டுகள் சர்வே நெம்பர் 92/4ல் 4 ஏக்கர்கள் சர்வே நெம்பர் 94/4 ல் 59 ஏக்கர்கள் ஆக மொத்தம் 5.59 ஏக்கர்கள் 2ம் எதிரி திருமதி . விசாலாட்சி பெயரில் வாங்கினார். இது வளவனூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 28.05.1997 அன்று டாக்மெண் எண் 633/1997, ஆக பதிவு செய்தார். மதிப்பு ரூ.167500/- ஆகும். இதற்கு முத்திரைத் தாள் கட்டணம், பதிவு கட்டணம், பட்டா கட்டணம் சேர்ந்து ஆக மொத்தம செலவு ரூ.1,98,762/- செலவு செய்தார்.

வரிசை எண்.17

விழுப்புரம் தாலுக்கா, மாதிரி மங்கலம் கிராமத்தில் சர்வே நெம்பர் 39/1 ல் 95 செண்டும் சர்வே நெம்பர் 91ல் 8.82 ஏக்கர்கள் சர்வே நெம்பர் 121ல் 1.12 ஏக்கர்கள், சர்வே நெம்பர் 94/5ல்59 செண்டுகள் சர்வே நெம்பர் 92ல் 49 செண்டுகள், ஆக மொத்தம் 5.97 ஏக்கர்கள். 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி, 2ம் எதிரி திருமதி.விசாலாட்சியின் சகோதரி திருமதி. பெரியநாயகி மற்றும் சகோதரர்கள் திரு.சுவாமிநாதன், திரு.நடராஜன் மற்றும் திரு.கனகராஜன் இவர்கள் விடுதலைப் பத்திரமாக 2ம் எதிரி திருமதி விசாலாட்சிக்கு எழுதிக் கொடுத்தார். அதற்காக 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி அவர்களுக்கு தலா ரூ.5,000/- கொடுத்தார். இந்த ஆவணம் விழுப்புரம் தாலுக்கா, வளவனூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 28.05.1997ம் தேதி பதிவு செய்தார். இதற்கு முத்திரைத் தாள் கட்டணம், பதிவு கட்டணம், பட்டா கட்டணம் சேர்ந்து ஆக மொத்தம செலவு ரூ.33,445/- செலவு செய்தார்.

வரிசை எண்.18

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தாலுக்கா, கஸ்பாகரணை கிராமத்தில் சர்வே நெம்பர் 203/3எ1 , 30 செண்ட், விஷால் எக்ஸ்போ பெயரில் மதிப்பு ரூ.10500/-க்கு 29.09.2000ம் தேதியில் வாங்கப்பட்டது. இது விக்கிரவாண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் 29.09.2000தேதியில் ஆவண எண் 1543/2000 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.12,063/- ஆகும்.

வரிசை எண்.19

விக்கிரவாண்டி தாலுக்கா, கஸ்பாகரணை கிராமத்தில் சர்வே நெம்பர் 17ல் 3.93 ஏக்கர்கள், விவசாய நிலம் ரூ.1,38,450/-க்கு 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் 29.09.2000 தேதியில் வாங்கினார். இது விக்கிரவாண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் 29.09.2000 தேதியில் ஆவண எண் 1544/2000 ஆக

பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.1,55,045/- ஆகும்.

வரிசை எண்.20

கடலூர்-2, திருப்பாபுலியூரில் இராமகிருஷ்ணா அவெண்யூ 5925சதுரடி கொண்ட காலிமனை டவுன் சர்வே நெம்பர் 1898 மற்றும் டவுன் சர்வே நெம்பர் 1909/4 16.09.2000 தேதியில் ரூ.358200/- க்கு 2ம் எதிரி திருமதி வசாலாட்சி பெயரில் வாங்கினார். இது கடலூர் இணை-2 திருப்பாபுலியூர் சார் பதிவாளர் அலுவலகத்தல் 16.09.2000 அன்று ஆவண எண் 2641/2000 ஆக பதிவு செய்தார். அதற்கு மொத்த செலவு ரூ.408326/- ஆகும்.

வரிசை எண்.21

கடலூர்-2, திருப்பாபுலியூரில் இராமகிருஷ்ணா அவெண்யூ 6030 சதுரடி கொண்ட காலிமனை டவுன் சர்வே நெம்பர் 1898 மற்றும் டவுன் சர்வே நெம்பர் 1904/4 16.09.2000 தேதியில் ரூ.365400/- க்கு 2ம் எதிரி திருமதி வசாலாட்சி பெயரில் வாங்கினார். இது கடலூர் இணை-2 திருப்பாபுலியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 16.09.2000 அன்று ஆவண எண் 2642/2000 ஆக பதிவு செய்தார். அதற்கு மொத்த செலவு ரூ.416408/- ஆகும்.

வரிசை எண்.22

வரிசை எண் 20 மற்றும் 21 ல் கண்டுள்ள காலிமனையில் கட்டப்பட்ட ஹீரோ ஹோண்டோ ஷோரூம் சதுரடி 5760/- 2ம் எதிரி திருமதி .விசாலாட்சி பெயரில் கட்டினார். இதன் கட்டுமான செலவு 23,90,945/-ஆகும்.

வரிசை எண்.23

சென்னை - 28 ராஜா அண்ணாமலை புரம் நெம்பர் 20 எல், கிரீன்வேஸ் ரோடு, கட்டப்பட்ட அப்பார்ட்மெண்ட் 1897/70000 சதுரடி பிரிக்கப்படாத பாகம் 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் ரூ.445795/-க்கு சென்னை மைலாப்பூர் சார் பதிவாளர்

அலுவலகத்தில் 31.12.1999 ம் தேதியில் ஆவண எண் 99/2000 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு 6,00,812/- ஆகும்.

வரிசை எண்.24

சென்னை - 28 ராஜா அண்ணாமலை புரம் நெம்பர் 20 எல், கிரீன்வேஸ் ரோடு, விலாசத்தில் தரைதளத்தில் உள்ள பிளாட் நெம்பர் ஜிடி பரப்பளவு 1897/70000 சதுரடி ரூ.1554205/-க்கு 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் வாங்கினார்.

வரிசை எண்.25

திருச்சிராப்பள்ளி கோப்பரேடிவ் ஹவுசிங் லிமிடெட், 05.09.1998 ம் தேதியில் 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் திருச்சி 17, தென்னூர், அண்ணா நகரில் , தென்னூர் சௌத் ஸ்கீம் -ல் கடை எண் 12, ரூ.370000/-க்கு ஒதுக்கினார்.

வரிசை எண் 26.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, விழுப்புரம் கிளை , 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் உள்ள எஸ் பி ஐ அக்கவுண்ட் நெம்பர் 1298, 31.03.2002 அன்று ரொக்க நிலுவை விவரம் 6402.42 .

வரிசை எண்.27.

15.03.2002ம் தேதி கடலூர் செல்லான் குப்பம் சிதம்பரம் மெயின் ரோடு, எண் 13 மற்றும் 14 ராமகிருஷ்ணா அவெண்யூவில் உள்ள விஷால் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனம் சோதனை செய்யும்போது 256250/- ரொக்கப்பணம் கைப்பற்றினார்.

வரிசை எண்.28.

சென்னை-15, சைதாப்பேட்டை நெம்பர் 13/part நார்த் அவெண்யூ ஸ்ரீநகர் காலனியில் உள்ள 1807/1/2 சதுரடி குடிசை உட்பட அடையாறு சார் பதிவாளர் அலுவலகத்தில் 29.12.1998 ம் தேதியில் ஆவண எண் 1730/1998 ஆக 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி பெயரில் ரூ.375000/- க்கு கிரயம் செய்தார். மொத்த செலவு ரூ.538904/- ஆகும்.

வரிசை எண்.29.

சென்னை-15, சைதாப்பேட்டை நெம்பர் 13/part நார்த் அவெண்யூ ஸ்ரீநகர் காலனியில் உள்ள 1822/1/2 சதுரடி குடிசை உட்பட அடையாறு சார் பதிவாளர் அலுவலகத்தில் 15.04.1999 ம் தேதியில் ஆவண எண் 630/1999 ஆக 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி பெயரில் ரூ.361500/- க்கு கிரயம் செய்தார். மொத்த செலவு ரூ.524827/- ஆகும்.

வரிசை எண்.30

வரிசை எண் 28 மற்றும் 29ல் கண்டுள்ள காலிமனைகளில் தரைதளம், முதல் மற்றும் இரண்டாம் தளம் கட்டிடம் சுமார் 5183 சதுரடி 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி பெயரில் 2001-2002 வருடங்களில் கட்டினார். கட்டிடம் மதிப்பு ரூ.2371579/- ஆகும். மின்சார பணிகள் 244350/- மொத்த செலவு ரூ.2615929/-ஆகும்.

வரிசை எண்.31

திண்டிவனம் தாலுக்கா, விட்டலாபுரம் கிராமத்தில் , பழைய சர்வே நெம்பர் 34/1, (புதிய சர்வே எண் 29) 3.24 எக்கர்கள் மற்றும் பழைய சர்வே நெம்பர் 34/2, (புதிய சர்வே எண் 29) 1.29 ஏக்கர்கள் ஆக மொத்தம் 4.53 ஏக்கர்கள் ரூ.115000/- 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி பெயரில் கிரயம் செய்தார். அது திண்டிவனம் தாலுக்கா, எண்டியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 23.01.1998 ம் தேதி ஆவண எண் 28/1998ஆக பதிவு செய்தார். மொத்த செலவு ரூ124468/- ஆகும்.

வரிசை எண்.32

திண்டிவனம் தாலுக்கா, விட்டலாபுரம் கிராமத்தில் , பழைய சர்வே நெம்பர் 3/1இ, (புதிய சர்வே எண் 29) 5.49 ஏக்கர்கள், 05.02.1998 ல் ரூ.140000/-க்கு 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி பெயரில் கிரயம் செய்தார். அது திண்டிவனம் தாலுக்கா, எண்டியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 05.02.1998 ம் தேதி ஆவண எண் 54/1998ஆக பதிவு செய்தார். மொத்த செலவு ரூ.163463/- ஆகும்.

வரிசை எண்.33

திண்டிவனம் தாலுக்கா, விட்டலாபுரம் கிராமத்தில் , பழைய சர்வே நெம்பர் 33/2பி, (புதிய சர்வே எண் 29) 1.16 ஏக்கர்கள், மற்றும் கிணறு பழைய சர்வே எண் 35/1இ, 16.02.1998 ல் ரூ.50000/-க்கு 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி பெயரில் கிரயம் செய்தார். அது திண்டிவனம் தாலுக்கா, எண்டியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 16.02.1998 ம் தேதி ஆவண எண் 79/1998ஆக பதிவு செய்தார். மொத்த செலவு ரூ.58740/- ஆகும்.

வரிசை எண்.34

திண்டிவனம் தாலுக்கா, விட்டலாபுரம் கிராமத்தில் , பழைய சர்வே நெம்பர் 35/1டி, 1.29 ஏக்கர்கள் பழைய சர்வே நெம்பர் 33/1சி 7 செண்டுகள் பழைய சர்வே நெம்பர் 48/4சி (புதிய சர்வே நெம்பர் 29) 2.11 ஏக்கர்கள் பழைய சர்வே நெம்பர் 32/1சி (புதிய சர்வே நெம்பர் 30/1) 70 செண்டுகள் ஆக மொத்தம் 4.80ஏக்கர்கள் 02.03.1998ல் ரூ.125000/-க்கு 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி பெயரில் கிரயம் செய்தார். அது திண்டிவனம் தாலுக்கா, எண்டியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 02.03.1998 ம் தேதி ஆவண எண் 91/1998ஆக பதிவு செய்தார். மொத்த செலவு ரூ.147730/- ஆகும்.

வரிசை எண்.35.

சிகா கல்வி அறக்கட்டளை பவுண்டர் சேர்மேன் மற்றும் டிரஸ்டி 4ம் எதிரி திரு.மணிவண்ணன் மற்றும் 2வது டிரஸ்டி 3ம் எதிரி திருமதி. சரஸ்வதி மற்றும் 3வது டிரஸ்டி 5ம் எதிரி திரு.நந்தகோபால் ஆகும். சிகா கல்வி அறக்கட்டளை பேரில் விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 214/1, 29 செண்டுகள் சர்வே நெம்பர் 214/3, 83 செண்டுகள் மொத்தம் 1.11 ஏக்கர்கள் 15.11.1999ல் ரூ.18204/-க்கு கிரயம் செய்தார். இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் 15.11.1999 தேதியில் ஆவண எண்.3392/1999 ஆக

பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.20601/- ஆகும்.

வரிசை எண்.36

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 214/4பி, 0.80 செண்டுகள் நிலத்தை சிகா கல்வி அறக்கட்டளை பேரில் 15.11.1999ம் தேதியில் ரூ.13120/-க்கு கிரயம் செய்தார். இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் 15.11.1999 தேதியில் ஆவண எண்.3391/1999 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.14835/- ஆகும்.

வரிசை எண்.37

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 242/5பி1, 2.54 ஏக்கர்கள் நிலத்தை 5ம் எதிரி நந்தகோபால் பெயரில் 14.12.1998ம் தேதியில் ரூ.40000/-க்கு கிரயம் செய்தார். இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் 14.12.1998 தேதியில் ஆவண எண்.3329/1998 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.45372/- ஆகும்.

வரிசை எண்.38

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 243/3, 4.61 ஏக்கர்கள் மற்றும் சர்வே நெம்பர் 242/6, 1.15 ஏக்கர்கள் மொத்தம் 5.76 ஏக்கர்கள் நிலத்தை 5ம் எதிரி நந்தகோபால் பெயரில் 15.12.1998ம் தேதியில் ரூ.115200/-க்கு கிரயம் செய்தார். இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் 15.12.1998 தேதியில் ஆவண எண்.3368/1999 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.130129/- ஆகும்.

வரிசை எண்.39

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 242/5எ, 1.76 ஏக்கர்கள் மற்றும் சர்வே நெம்பர் 242/5பி1, 2.54 ஏக்கர்கள் , சர்வே நெம்பர் 242/6,

1.15 ஏக்கர்கள், சர்வே நெம்பர் 242/3, 4.61 ஏக்கர்கள் மொத்தம் 10.06 ஏக்கர்கள் நிலத்தை சிகா கல்வி அறக்கட்டளை பேரில் நன்கொடையாக 5ம் எதிரி திரு.நந்தகோபால் அவர்கள் கொடுத்தார். 21.11.1999ம் தேதியில் ரூ.195048/-க்கு கிரயம் செய்தார். இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3482/1999 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.220503/- ஆகும்.

வரிசை எண்.40

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 214/2, 37 செண்டுகள் சிகா கல்வி அறக்கட்டளை பேரில் 15.12.1999ம் தேதியில் ரூ.6000/-க்கு கிரயம் செய்தார். இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3709/1999 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.6816/- ஆகும்.

வரிசை எண்.41

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 234/11, 0.46 செண்டுகள் சிகா கல்வி அறக்கட்டளை பேரில் 15.12.1999ம் தேதியில் ரூ.15900/-க்கு கிரயம் செய்தார். இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3714/99 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.17976/- ஆகும்.

வரிசை எண்.42

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 234/10, 0.82 செண்டுகள் சிகா கல்வி அறக்கட்டளை பேரில் 12.01.2000 ம் தேதியில் ரூ.24600/-க்கு கிரயம் செய்தார். இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.162/2000 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.28292/- ஆகும்.

வரிசை எண்.43

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 214/4இ, 0.79 செண்டுகள் சிகா கல்வி அறக்கட்டளை பேரில் 18.01.2000 ம் தேதியில் ரூ.15800/-க்கு கிரயம் செய்தார். இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.78/2000 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.17856/- ஆகும்.

வரிசை எண்.44

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 215, 49 செண்டுகள் சிகா கல்வி அறக்கட்டளை பேரில் 26.06.2000 ம் தேதியில் ரூ.8700/-க்கு கிரயம் செய்யப்பட்டது. இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2134/2000 ஆக பதிவு செய்யப்பட்டது. இதற்கு மொத்த செலவு ரூ.9845/- ஆகும்.

வரிசை எண்.45

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 214/4எ, 0.80 செண்டுகள் சிகா கல்வி அறக்கட்டளை பேரில் 02.08.2000 ம் தேதியில் ரூ.14000/-க்கு கிரயம் செய்தார். இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2598/2000 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.15909/- ஆகும்.

வரிசை எண்.46

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 214/3, 0.37 செண்டுகள் சிகா கல்வி அறக்கட்டளை பேரில் 09.08.2000 ம் தேதியில் ரூ.6000/-க்கு கிரயம் செய்தார். இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2668/2000 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.6891/-

ஆகும்.

வரிசை எண்.47

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 242/1, 0.83 செண்டுகள் சர்வே நெம்பர் 242/2, 0.78 செண்டுகள், சர்வே நெம்பர் 242/3, 0.59 செண்டுகள், சர்வே நெம்பர் 242/4எ, 0.32 செண்டுகள் மொத்தம் 2.52 ஏக்கர்கள் 3ம் எதிரி திருமதி. சரஸ்வதி பேரில் 17.06.1999 ம் தேதியில் ரூ.69120/-க்கு கிரயம் செய்தார். இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1899/99 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.79471/- ஆகும்.

வரிசை எண்.48

விழுப்புரம் தாலுக்கா கப்பியான்புலியூர் கிராமத்தில் சர்வே நெம்பர் 242/1, 0.83 செண்டுகள் சர்வே நெம்பர் 242/2, 0.78 செண்டுகள், சர்வே நெம்பர் 242/3, 0.59 செண்டுகள், சர்வே நெம்பர் 242/4எ, 32 செண்டுகள் , சர்வே நெம்பர் 242/4பி, 79 செண்டுகள் மொத்தம் 3.31 ஏக்கர்கள் 3ம் எதிரி திருமதி சரஸ்வதி அவர்களால் சிகா கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடையாக் 15.12.1999 ம் தேதியில் ரூ.107700/-க்கு கிரயம் செய்தார்.. இது இது விழுப்புரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3705/99 ஆக பதிவு செய்தார். இதற்கு மொத்த செலவு ரூ.121740/- ஆகும்.

வரிசை எண்.49

மேற்குறிப்பிட்ட சிகா கல்வி அறக்கட்டளை பேரில் வாங்கப்பட்ட நிலங்களில் சிகா மேல்நிலைப்பள்ளி கட்டிடம் 1999-2000 வருடத்தில் கட்டப்பட்டுள்ளது. அந்தக் கட்டிடம் மதிப்பு 87,42,409/- மின்சாரப் பணி மதிப்பு ரூ.1476113/- ஆக மொத்தம் 1,02,18,522/- ஆகும்.

வரிசை எண்.50

மேற்குறிப்பிட்ட சிகா கல்வி அறக்கட்டளை பேரில் வாங்கப்பட்ட நிலங்களில் சிகா மேல்நிலைப்பள்ளி விடுதிக் கட்டிடம் 1999-2000 வருடத்தில் கட்டப்பட்டுள்ளது. அந்தக் ஆண்கள் விடுதிக் கட்டிடம் மதிப்பு 6848691/- பெண்கள் விடுதிக் கட்டிடம் 2293490/- சமையல் கட்டிடம் 1694813/- மின்சாரப் பணி மதிப்பு ரூ.638814/- ஆக மொத்தம் 1,14,75,808/- ஆகும்.

வரிசை எண்.51

15.03.2002ம் தேதி 4வது எதிரி திரு மணிவண்ணன், எண்-2 , கோர்ட்டு ரோடு விலாசத்தில் உள்ள வீட்டு சோதனையின்போது நீண்ட கால வைப்பீடு ரசீது TTT No.319945, dated 11.12.2000 ரூ 150000/- கைப்பற்றப்பட்டது. மாவட்ட கல்வி அலுவலர் விழுப்புரம், மற்றும் முதல்வர் சிகா கல்வி அறக்கட்டளை கப்பியான்புலியூர், ஆகியோர் பெயரில் உள்ள கரூர் வைஸ்யா வங்கி, விழுப்புரம் கிளை, நீண்ட கால வைப்பீடு ரசீது.

வரிசை எண்.52

15.03.2002ம் தேதி 4வது எதிரி திரு மணிவண்ணன் , எண்-2 , கோர்ட்டு ரோடு விலாசத்தில் உள்ள வீட்டு சோதனையின்போது நீண்ட கால வைப்பீடு எண் TTT No.599141 லிருந்து 599165 வரை dated 10/07/2001 மொத்தம் 25 ரசீதுகள் . தலா ரூ.100000/-வீதம் மொத்தம் 25 ரசீதுகள் மொத்தம் ரூ.25,00,000/- சிகா மேல்நிலைப் பள்ளி பெயரில் கைப்பற்றினார்.

வரிசை எண்.53

15.03.2002ம் தேதி 4வது எதிரி திரு மணிவண்ணன் , எண்-2 , கோர்ட்டு ரோடு விலாசத்தில் உள்ள வீட்டு சோதனையின்போது நீண்ட கால வைப்பீடு TTT No.17435,17436 and 17347 and 18198, 18199, 18190 வரை dated

03/11/2001 மொத்தம் 6 ரசீதுகள் தலா ரூ. 100000/-வீதம் மொத்தம் 6,00,000/- சிகா மேல்நிலைப் பள்ளி பெயரில் கைப்பற்றினார்.

வரிசை எண்.54

15.03.2002ம் தேதி விழுப்புரம் கப்பியான் புலியூர் கிராமத்தில் சிகா மேல்நிலைப் பள்ளி வீட்டு சோதனையின்போது ரொக்கப்பணம் 21,650/- கைப்பற்றினார்.

வரிசை எண்.55

4ம் எதிரி திரு.மணிவண்ணன் , சேர்மேண் மற்றும் டிரஸ்டி சிகா கல்வி அறக்கட்டளை பெயரில் 1999ம் வருடம் ரூ.25000/- நிரந்தர வைப்பீடு செய்தார்.

வரிசை எண்.56

31.03.2002 தேதியன்று சிகா கல்வி அறக்கட்டளை பேரில் பாண்டிச்சேரி கார்ப்பொரேஷன் வங்கி கணக்கில் இருந்த இருப்பு 17619/-

வரிசை எண்.57

31.03.2002 தேதியன்று சிகா கல்வி அறக்கட்டளை பேரில் பாண்டிச்சேரி இந்தியன் வங்கி கணக்கில் இருந்த இருப்பு 39213/-

வரிசை எண்.58

31.03.2002 தேதியன்று சிகா கல்வி அறக்கட்டளை பேரில் விழுப்புரம், கரூர் வைஸ்யா வங்கி கணக்கில் இருந்த இருப்பு 20800.43/-

வரிசை எண்.59

31.03.2002 தேதியன்று சிகா கல்வி மேல்நிலைப்பள்ளி பேரில் விழுப்புரம், கரூர் வைஸ்யா வங்கி கணக்கில் இருந்த இருப்பு 379931.60

வரிசை எண்.60

31.03.2002 முடிவடைந்த வருடத்தில் வருமான வரி ரிட்டன்ஸ் படி சிகா கல்வி அறக்கட்டளை விழுப்புரம் நிலையான சொத்துக்கள் ரூ.1985858/-

வரிசை எண்.61

15.03.2002ம் தேதி சென்னை 15, சைதாப்பேட்டை, பிளாட் எண் 13, ஸ்ரீநகர் காலனி, வீட்டு சோதனையின்போது 1ம் எதிரி திரு.கே. பொன்முடி அவர்களால் வாங்கப்பட்ட அசையும் சொத்துக்களுடைய விலை ரூ.187275/- ஸ்டேட்மெண்ட் II படி மொத்த சொத்துக்களுடைய மெதிப்பு 4,10,04,307.95. இந்த ஸ்டேட்மெண்ட் என்னால் தாக்கல் செய்யப்பட்டு அ.சா.ஆ. 545

ஸ்டேட்மெண்ட் III

தணிக்கைக் காலக் கட்டத்தில் 15.03.1996 லிருந்து 31.03.2002 வரையிலான தணிக்கைக் காலத்தில் முதல் எதிரி திரு.கே.பொன்முடி மற்றும் 2 முதல் 5 வரையிலான மற்ற எதிரிகளுக்கான வருமான விவரங்கள்.

1. முதல் எதிரி திரு.கே.பொன்முடி போக்குவரத்து துறை அமைச்சராகவும் மற்றும் சட்ட மன்ற உறுப்பினராகவும் 13.05.1996 லிருந்து 31.03.2002 வரை பதவியிலிருந்த காலத்தில் அவருக்கு வழங்கினார் சம்பளம் மற்றும் அலவன்சஸ் ரூ.6,25,527/-

2. 1996-1997 லிருந்து 2001-2002 வரையிலான 1ம் எதிரிக்கு விவசாய நிலங்களிலிருந்து கிடைத்த வருமானம் ரூ249510/-

3. 1996-1997 லிருந்து 2001-2002 வரையிலான காலத்தில் 1ம் எதிரிக்கு சொந்தமான டிரெய்லர் டிஎன்32 1285 என்ற வாகனத்தை வாடகைக்கு விட்டதன் மூலம் கிடைக்கப்பட்ட வாடகை வருமானம் ரூ.90691/-

4. 1996-1997 லிருந்து 2001-2002 வரையிலான காலத்தில் 2ம் எதிரி திருமதி.விசாலாட்சிக்கு விவசாய நிலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ.620633/-

5. 1997-1998 லிருந்து 2001-2002 வரையிலான காலத்தில் 2ம் எதிரி திருமதி.விசாலாட்சிக்கு விஷால் எக்ஸ்போ வியாபார நிறுவனத்திடம் இருந்து

கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ.1082751/-

6. 2001ம் ஆண்டில் விழுப்புரம் கடலூரில் ஹீரோஹோண்டோ ஷோரூம் கட்டுவதற்காக விழுப்புரம் இந்தியன் வங்கியிலிருந்து 2ம் எதிரி திருமதி விசாலாட்சி பெற்பட்ட கடன்தொகை ரூ.15,00,000/-

7. 2000ம் ஆண்டில் சென்னை 28, நெம்பர்20/எல் கிரீன்வேஸ் ரோடு, அடுக்குமாடி குடியிருப்பு வாங்குவதற்காக GIC Housing Finance Limited லிருந்து 2ம் எதிரி திருமதி விசாலாட்சி பெற்பட்ட கடன்தொகை ரூ.14,00,000/-

8. 2000-2001ல் மற்றும் 2001-2002ல் மாதவ் மார்பல்ஸ் மற்றும் கிராணைட் லிமிடெட் சேலம் கம்பெணியிலிருந்து வியாபார ரீதியாக கிடைக்கப்பட்ட வருமானம் 2ம் எதிரி திருமதி. விசாலாட்சிக்கு கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ.2,28,365.45

9. 07.12.1997 லிருந்து 31.03.2002 வரை 2ம் எதிரி திருமதி. விசாலாட்சிக்கு ஸ்ரீராம்சிட்ஸ் பிரைவேட் லிமிடெட், விழுப்புரத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சீட்டுத் தொகை ரூ.17,737/-

10. 17.08.2001 முதல் 31.03.2002 வரை கடலூரில் உள்ள விஷால் ஆட்டோ மொபைல்ஸ் மூலமாக 2ம் எதிரி திருமதி. விசாலாட்சிக்கு கிடைக்கப்பெற்ற வருமானம் 175235/-

11. 3ம் எதிரி திருமதி சரஸ்வதிக்கு மே 1996 முதல் மார்ச் 2002 வரையிலான காலங்களில் இறந்துபோன அவரது கணவரின் பென்சன் மற்றும் சம்பள அரியர்ஸ் தொகை 3,13,551/-

12. 1996-1997 லிருந்து 1997-1998 வரை காலக்கட்டத்தில் 3ம் எதிரி திருமதி சரஸ்வதிக்கு விவசாய நிலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ.2,60,000/-

13. சிகா கல்விஅறக்கட்டளை உடைய பவுண்டர் சேர்மென் மற்றும் டிரஸ்டி 4ம் எதிரி திரு. மணிவண்ணன் மற்றும் டிரஸ்டி 3ம் எதிரி திருமதி சரஸ்வதி மற்றும் டிரஸ்டி 5ம் எதிரி திரு.நந்தகோபால் ஆவார்கள். சிகா கல்வி அறக்கட்டளையில் உள்ள சிகா மேல்நிலைப்பள்ளி, 31.03.2001 மற்றும் 31.03.2002 முடிவடைந்த வருடங்களுக்கு வசூலிக்கப்பட்ட பள்ளிக் கட்டணம் ரூ.11077530/-

14. சிகா மேல்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டுவதற்காக விழுப்புரம் கரூர் வைஸ்யா வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் தொகை ரூ.40,00,000/-

15. 20.01.2002ம் தேதி நடைப்பெற்ற 1ம் எதிரி திரு.கே.பொன்முடியின் மகன்கள் திரு.அசோக் சிகாமணி திரு.கௌதம் சிகாமணி திருமண வரவேற்புக்கு கிடைக்கப்பெற்ற அன்பளிப்பு மொழிப்பணம் ரொக்கம் ரூ.519861/- ஆக மொத்தம் 1ம் எதிரி முதல் 5ம் எதிரி வரை கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ.2,21,61,391.45 இந்த ஸ்டேட்மெண்ட் III என்னால் தாக்கல் செய்தார். இது அ.சா.ஆ. 546.

ஸ்டேட்மெண்ட் IV

தணிக்கைக் காலம் 13.05.1996 முதல் 31.03.2002 வரையிலான காலக்கட்டத்தில் முதல் எதிரி திரு.கே.பொன்முடி மற்றும் 2 முதல் 5 வரையிலான எதிரிகள் செலவுகள் குறித்த விவரங்கள்.

| | |
|---|---|
| 1 | மே 1996 முதல் மார்ச் 2002 வரை முதல் எதிரி மற்றும் அவர் குடும்பத்துடைய குடும்ப செலவு ரூ.223136/- |
| 2 | டாட்டா சுமோ டி-என்-32-பி-1123 என்ற வாகனத்தை வாங்கி விற்ற வகையில் ஏற்பட்ட நஷ்டம் ரூ.57633/- |
| 3 | விழுப்புரம் தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கியிலிருந்து 1ம் எதிரி வாங்கிய டிராக்டர் டிரைய்லர் டி-என்-32-1285 கடனுக்கு திருப்பி செலுத்திய கடன்தொகை ரூ.361350/- |

| | |
|---|---|
| 4 | மே 2001ம் வருடத்தில் முதல் எதிரி திரு.கே.பொன்முடி விழுப்புரம் தொகுதி சட்ட மன்ற தேர்தலில் வேட்பாளராக போட்டியிட்ட போது செய்த தேர்தல் செலவுகள் ரூ.362027/- |
| 5 | முதல் எதிரி திரு.கே.பொன்முடி பெயரில் உள்ள பஜாஜ் மோட்டார் சைக்கில் வாகனம் டி-என்-32-எ-3589 சாலை வரி மற்றும் மறு பதிவுக் கட்டணம் ரூ.760/- |
| 6 | முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவருடைய பெயரில் உள்ள டிராக்டர் டி-என்-32-எ-2878 க்கு 18.05.1999ம் தேதியில் பதிவுக் கட்டணம் ரூ.100/- |
| 7 | டிராக்டர் டி-என்-32-எ-1204 13.05.1996 லிருந்து 31.05.1999 காலக்கட்டத்தில் எரிபொருள் செலவு ரூ.122700/- |
| 8 | 13.05.1996 முதல் 31.03.2002 வரையிலான காலக்கட்டத்தில் டிரெய்லர் டி-என்-32- 1285 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு ரூ.51500/- |
| 9 | 14.05.1999 முதல் 31.03.2002 வரை டிராக்டர் டி-என்-32-எ-2878 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு ரூ.106810/- |
| 10 | 13.05.1996 முதல் 31.03.2002 வரையிலான காலக்கட்டத்தில் பஜாஜ் இருசக்கர வாகனத்தின் டி-என்-32-எ-3589 வாகனத்திற்கான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு ரூ.73838/- |
| 11 | 1999 ம் வருடத்தில் டிராக்டர் டி-என்-32-1204 விற்பனை செய்தபோது ஏற்பட்ட நஷ்டம் ரூ.57600/- |
| 12 | 1997-1998 வருடத்தில் விஷால் எக்ஸ்போ கம்பெனி ஆரம்பிக்க முதல் எதிரி திரு.கே.பொன்முடி 2ம் எதிரி திருமதி. விசாலாட்சிக்கு கொடுத்த ரொக்கப்பணம் ரூ.190000/- |
| 13 | ஹலோ ஏஜன்சி என்ற பெயரில் வியாபாரம் ஆரம்பிப்பதற்காக முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவருடைய மகன் திரு.அஷோக் சிகாமணிக்கு கொடுத்த ரொக்கப்பணம் ரூ.150000/- |
| 14 | முதல் எதிரியின் வீடு எண் 6, எ- திருப்பாணாழ்வார் தெரு, கிழக்கு சண்முகாபுரம் காலனி, விழுப்புரம் மார்ச் 1997 லிருந்து மார்ச் 2002 வரை டெலிபோன் நெம்பர் 240364 என்ற எண்ணை உபயோகித்ததற்கான செலவு ரூ.37703/- |

| | |
|---|---|
| 15 | 28.07.2000 முதல் 31.03.2002 வரையிலான காலத்தில் முதல் எதிரி திரு.பொன்முடியின் கைப்பேசி செலவு ரூ.33038/- |
| 16 | திரு.கௌதம் சிகாமணி 1996-1997 லிருந்து 1999-2000 வரை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் எம்.பி.பி.எஸ். படிப்பிற்காக முதல் எதிரி திரு.கே.பொன்முடி செலுத்திய கல்விக்கட்டணம் மற்றும் விடுதிக்கட்டணம் ரூ.48664/- |
| 17 | திரு.அஷோக் சிகாமணி 1996-1997 லிருந்து 1999-2000வரை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் எம்பிபிஎஸ் படிப்பிற்கான முதல் எதிரி திரு.கே.பொன்முடி செலுத்திய கல்விக்கட்டணம் மற்றும் விடுதிக்கட்டணம் ரூ.94092/- |
| 18 | 2ம் எதிரி திருமதி. விசாலாட்சி பெயரில் உள்ள டிப்பர் லாரிகள் டி-என்-32-எ-3787 மற்றும் டி-என்-32-எ-3789 1999 வருடத்தில் வாங்கி விற்றதில் ஏற்பட்ட நஷ்டம் ரூ.1015724/- |
| 19 | 2000 மற்றும் 2002 வரையிலான காலக்கட்டத்தில் 2ம் எதிரி திருமதி விசாலாட்சி பெயரில் உள்ள் அடுக்குமாடி குடியிருப்பு எண்.20/எல்/கிரீன்வேஸ் ரோடு, சென்னை -28 GIC Housing கம்பெனிக்கு திருப்பிய செலுத்திய கடன்தொகை ரூ.709260/- |
| 20 | தணிக்கைக் காலக்கட்டத்தில் எண்.6எ, திருப்பாணாழ்வார் தெரு, கிழக்கு சண்முகாபுரம் காலனி , விழுப்புரம் என்ற முகவரியில் 2ம் எதிரி வீடுகட்டுவதற்காக விழுப்புரம் பில்டிங் சொசைட்டி லிமிடெட்-ல் பெற்ற கடன் தொகையை திருப்பி செலுத்திய தொகை ரூ.250434.75 |
| 21 | தணிக்கைக் காலக் கட்டத்தில் எண்.6எ, திருப்பாணாழ்வார் தெரு, கிழக்கு சண்முகாபுரம் காலனி , விழுப்புரம் என்ற முகவரியில் உள்ள வீட்டிற்கு மின்சாரக் கட்டணம் 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி செலுத்தியது ரூ.88988/- |
| 22 | 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் உள்ள டிப்பர் லாரி டி-என்-32-எ-3787க்காக பதிவுக் கட்டணம் மற்றும் சாலை வரி மொத்த செலவு ரூ.28930/- |
| 23 | 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரில் உள்ள டிப்பர் லாரி டி-என்-32-எ-3789க்காக பதிவுக் கட்டணம் மற்றும் சாலை வரி மொத்த செலவு ரூ.28930/- |
| 24 | 06.08.1999 முதல் 25.07.2001 வரை காலக்கட்டத்தில் லாரி டி-என்-32-எ-3787 எரிபொருள் மற்றும் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு ரூ.278320/- |

| | |
|---|---|
| 25 | 06.08.1999 முதல் 23.07.2001 வரை காலக்கட்டத்தில் லாரி டி-என்-32-எ-3789 எரிபொருள் மற்றும் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு ரூ.278320/- |
| 26 | 28.07.2000 முதல் 31.03.2002 வரை 2ம் எதிரி திருமதி விசாலாட்சி கைப்பேசி நெம்பர் 9842340030 க்கு உண்டான செலவு ரூ.22815/- |
| 27 | 31.03.2001 முடிவடைந்த வருடத்திற்கு வருமான வரி கணக்கு படி சிகா கல்வி அறக்கட்டளையால் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி கணக்கு படி விளம்பரத்திற்காக ஆய்வக உபகரணங்களுக்காகவும், பள்ளி சீருடைகள், எழுதுப்பொருட்கள் உள்ளிட்ட செலவுகளுக்கான தொகை ரூ.1928885/- |
| 28 | 31.03.2002 முடிவடைந்த வருடத்திற்கு வருமான வரி கணக்கு படி சிகா கல்வி அறக்கட்டளையால் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி கணக்கு படி விளம்பரத்திற்காக ஆய்வக உபகரணங்களுக்காகவும், பள்ளி சீருடைகள், எழுதுப்பொருட்கள் உள்ளிட்ட செலவுகளுக்கான தொகை ரூ.4280856/- |
| 29 | 13.03.2001 முதல் 31.03.2002 வரை கரூர் வைஸ்யா வங்கியிலிருந்து பெறப்பட்ட 40,00,000/-த்தை திருப்பி செலுத்திய தொகை ரூ.11,52,929.72 |
| 30 | ஜூன் 2001 முதல் மார்ச் 2002 வரை முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவருடைய மகன் திரு.அஷோக் சிகாமணியின் மருத்துவ மேற்படிப்பிற்காக (எம்.டி.குழந்தை மருத்துவம் ) ராமச்சந்திரா மெடிக்கல் கல்லூரி, போரூர், சென்னை-114 க்கு செலுத்திய தொகை ரூ151900/- |
| 31 | 05.10.2001 முதல் 31.03.2002 வரை விஷால் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்திற்காக பெறப்பட்ட கடன் தொகை ரூ.15,00,000/-ல் திருப்பி செலுத்தப்பட்ட தொகை ரூ.288000/- |
| 32 | தணிக்கைக் காலம் 2000-2001ல் கார்கில் நிதிக்காக முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களால் செலுத்தப்பட்ட தொகை ரூ.10000/- |
| 33 | தணிக்கைக் காலம் 2000-2001 ல் ஒரிஸ்ஸா நிவாரண நிதிக்காக முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களால் செலுத்தப்பட்ட தொகை ரூ.5000/- |
| 34 | தணிக்கைக் காலம் 2000-2001 ல் குஜராத் நிவாரண நிதிக்காக முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களால் செலுத்தப்பட்ட தொகை ரூ.10000/- |
| 35 | தணிக்கைக் காலம் 1998-1999 லிருந்து 2002-2003 வரை முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களால் வருமான வரி செலுத்திய வகையில் ரூ.88,910/- |
| 36 | தணிக்கைக் காலம் 2000-2001 வரை 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி அவர்களால் வருமான வரி செலுத்திய வகையில் ரூ.31440/- |

| | |
|---|---|
| 37 | தணிக்கைக் காலம் 1998-999 லிருந்து 2002-2003 வரை 3ம் எதிரி திருமதி. சரஸ்வதி அவர்களால் வருமான வரி செலுத்திய வகையில் ரூ.42260/- |
| 38 | 31.03.2000 முடிவடைந்த ஆண்டு சிகா கல்வி அறக்கட்டளைக்காக நிர்வாக செலவு ரூ.6763.50 |
| 39 | 1998-1999 ஆண்டு விஷால் எக்ஸ்போ உரிமையாளர் 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி கடன்தாரர்களுக்கு திருப்பிய செலுத்திய கடன் தொகை ரூ.700000/- |
| 40 | சென்னை - 15, சைதாப்பேட்டை, எண் 13, ஸ்ரீநகர் காலனி, 3ம் எதிரி திருமதி சரஸ்வதி பெயரில் உள்ள 08.03.1999 லிருந்து 31.03.2003 வரையிலான காலக்கட்டத்திற்கு மின்சாரக்கட்டணம் செலுத்தியது ரூ.19672/- |
| 41 | 28.02.1997 லிருந்து 12.10.1998 வரை டாட்டா சுமோ டி-என்-32-பி-1123 வாகனத்தின் எரிபொருள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு 1ம் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களால் செய்யப்பட்ட செலவு ரூ.103606/- |
| 42 | 20.01.2002 திரு கௌதம் சிகாமணி மற்றும் திரு.அஷோக்சிகாமணி ஆகியோரின் திருமண வரவேற்பு செலவு ரூ.3,00,000/- |

ஆக மொத்தம் செலவுகள் ரூ.1,38,02,794.97. இந்த ஸ்டேட்மெண்ட் IV அ.சா.ஆ.547.

ஸ்டேட்மெண்ட் V

| | |
|---|---|
| தணிக்கைக்காலம் முடிவடைந்த 31.03.2002 அன்று 1 முதல் 5 எதிரிகள் மீதான சொத்துக்களுடைய மதிப்பு (Vide Statement II) வாயிலாக | ரூ.4,10,04,307.95 |
| தணிக்கைக் காலம் 13.05.1996 முதல் 1 முதல் 5 எதிரிகள் மீதான பெயரிலிருந்த சொத்துக்கள் மதிப்பு (Vide Statement I) வாயிலாக | ரூ.18,10,644.50 |
| தணிக்கைக் காலத்தில் 1 முதல் 5 எதிரிகள் வாங்கிய சொத்துக்கள் | ரூ.3,91,93,663.45 |

இந்த ஸ்டேட்மெண்ட் V அ.சா.ஆ.548.

ஸ்டேட்மெண்ட் VI

| | |
|---|---|
| தணிக்கைக் காலத்தில் 1 முதல் 5 எதிரிகள் வரை கணிக்கப்பட்ட வருமானம் (Vide Statement III) வாயிலாக | ரூ.2,21,61,391.45 |
| தணிக்கைக் காலத்தில் 1 முதல் 5 எதிரிகள் அவர்களுடைய செலவுகள் (Vide Statement IV) வாயிலாக | ரூ.1,38,02,794.97 |
| தணிக்கைக் காலத்தில் 1 முதல் 5 எதிரிகள் தோராயமான சேமிப்பு தொகை | ரூ.83,58,596.48 |

இந்த ஸ்டேட்மெண்ட் VI அ.சா.ஆ.549.

ஸ்டேட்மெண்ட் VII

| | |
|---|---|
| தணிக்கைக் காலத்தில் 1 முதல் 5 எதிரிகள் வாங்கியுள்ள சொத்துக்களின் மதிப்பு (Vide Statement IV) | ரூ.39193663.45 |
| தணிக்கைக் காலத்தில் 1 முதல் 5 எதிரிகள் தோராயமான சேமிப்பு தொகை (Vide Statement VI) வாயிலாக | ரூ.83,58,596.48 |
| ஆகையால் 1 முதல் 5 எதிரிகள் அவர்களுடைய அறியப்பட்ட வருமான விகிதாச்சாரத்திற்கு முரணான சொத்துக்களின் மதிப்பு | ரூ.3,08,35,066.97 |

இந்த சொத்துக்கள் அறியப்பட்ட வருமானத்தின் விகிதாச்சாரத்திற்கு ஒப்பிட்டுப் பார்க்க முரணான சதவீதம் 139.13%

இந்த ஸ்டேட்மெண்ட் VII அ.சா.ஆ.550.

மேற்கண்டவாறு ஸ்டேட்மெண்ட் I to VII கணக்கிடப்பட்ட விவரங்களின்படி 1ம் எதிரி திரு.கே.பொன்முடி அவர் பொது ஊழியராக இருந்து 13.05.1996 முதல் 31.03.2002 வரை தணிக்கைக் காலத்தில் அவருடைய அறியப்பட்ட வருமானத்திற்கு

பொருந்தாத வகையில் சொத்துக்களை அவருயை பெயரிலும் அவருயை பினாமிகள் 2ம் எதிரி அவருடைய மனைவி திருமதி.விசாலாட்சி பெயரிலும், 3ம் எதிரி அவருடைய மாமியார் திருமதி.சரஸ்வதி பெயரிலும் , விஷால் எக்ஸ்போ நிறுவனம் பெயரிலும் , சிகா கல்வி அறக்கட்டளை பெயரிலும், சிகா கல்வி அறக்கட்டளையினுடைய பவுண்டர் சேர்மென் மற்றும் டிரஸ்டி 4ம் எதிரி திரு.மணிவண்ணன் பெயரிலும், டிரஸ்டி 3ம் எதிரி திருமதி.சரஸ்வதி பெயரிலும், டிரஸ்டி 5ம் எதிரி திரு.நந்தகோபால் பெயரிலும் ரூ.3,08,35,066.97 சேர்த்திருப்பதாக தெரியவந்தது. மேலும் இது அவருடைய மொத்த வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க 139.13 % ஆகும். 23.08.2003ம் தேதியிட்ட கடிதம் அத்துடன் ஸ்டேட்மெண்ட் I to VII இணைந்து முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களுக்கு மேற்கூறிய கணக்கிடப்பட்ட விவரங்கள் படி முதல் எதிரி திரு.கே.பொன்முடி 31.03.2002 அன்று ரூ.3,08,35,066.97 க்கு அவருடைய வருமானத்திற்கு பொருந்தாத வகையில் சேர்த்திருப்பதாக கணக்கிடார். முதல் எதிரி திரு.கே.பொன்முடியிடம் மேற்படி பொருந்தாத சொத்துக்கள் வைத்திருப்பது குறித்து திருப்திகரமான கணக்கு அளிக்குமாறு அந்தக் கடிதத்தில் கோரினார். அ.சா.172 புலன்விசாரணை அனுப்பிய கடிதத்தின் நகல் அ.சா.ஆ.551. இந்தக் கடிதத்திற்கு பதில் 08.09.2003க்குள் தெரிவிக்குமாறு கோரினார். அந்தக் கடிதத்தை முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்கள் 26.08.2003ம் தேதி பெற்றுக்கொண்டதாக கையொப்பம் இட்டுள்ளார்.

முதல் எதிரி திரு.கே.பொன்முடி 07.09.2003ம் தேதி ஒரு கடிதம் எனக்கு அனுப்பி உள்ளார். அதில் அவர் என்னுடைய 23.08.2003 தேதியிட்ட கடிதத்திற்கு பதில் அனுப்ப 2003 நவம்பர் முதல் வாரம் வரை கால அவகாசம் கேட்டுக் கோரியுள்ளார். இந்தக் கடிதம் அ.சா.ஆ.552. மீண்டும் 10.09.2003 ம் தேதியிட்ட முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினார் அது அவர்

11.09.2003 ம் தேதி பெற்றுக்கொண்டதாக கையொப்பம் இட்டுள்ளார். அ.சா.172 அனுப்பிய கடிதத்தின் நகல் அ.சா.ஆ.553. அந்தக் கடிதத்தில் முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களிடம் பதில் 26.09.2003ம் தேதிக்குள் அனுப்புமாறு கோரினார். மீண்டும் முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்களுடைய 25.09.2003ம் தேதியிட்ட கடிதத்தில் பதில் அனுப்ப 2 வாரம் கால அவகாசம் கேட்டுக்கொண்டுள்ளார். 1ம் எதிரி அனுப்பிய பதில கடிதம் அ.சா.ஆ.554.

26.09.2003ம் தேதியிட்ட கடிதத்தில் 1ம் எதிரி திரு.கே.பொன்முடி அவருடைய பதில் 03.10.2003ம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக்கொண்டுள்ளேன். இந்த நினைவூட்டல் கடிதம் அ.சா.ஆ.555ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. அந்தக் கடிதத்தில் 1ம் எதிரி திரு.கே.பொன்முடி 26.09.2003ம் தேதி பெற்றுக்கொண்டார். அதே கடிதத்தில் அவர் அவருடைய பதில் 10.10.2003ம் தேதியில் அளிக்கிறேன் என்று தெரிவித்தார்,. அதன்படி 1ம் எதிரி திரு.கே.பொன்முடி 10.10.2003 ம் தேதியிட்ட கடிதத்தை அவருடைய பதில் அனுப்பினார். 1ம் எதிரி அனுப்பிய விளக்கங்களுடன் கூடிய பதில் கடிதம் அ.சா.ஆ.556. அதில் அவர் 4ம் எதிரி சிகா கல்வி அறக்கட்டளை சேர்மேன் மற்றும் 5ம் எதிரி திரு.நந்தகோபால் , டிரஸ்டி, அவருடைய பினாமி இல்லை என்றும் 2ம் எதிரி அவருடைய மனைவி திருமதி.விசாலாட்சி ஒரு (Independent Tax Assessee) என்றும் அவருக்கு தனிநபர் வருமானம் உள்ளதாகவும், அவருடைய சொத்துக்களில் 1ம் எதிரிக்கு எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் 3ம் எதிரி அவருடைய மாமியார் திருமதி.சரஸ்வதி Independent Tax Assessee என்றும் தனியாக வருமானவரி செலுத்துபவர் (Independent Tax Assessee) என்றும் அவருடைய சொத்துக்களுக்கும் முதல் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும் முதல் எதிரியுடைய சொத்துக்கள் அவருடைய வருமானத்திற்கு பொருந்தும் என்றும் பதில் அளித்தார்.

முதல் எதிரி திரு.கே.பொன்முடி அளித்த பதிலை பரிசீலனை செய்தார். அவர், தணிக்கைக் காலத்தில் 13.05.1996 முதல் 31.03.2002 வரை ரூ.3,08,35,066.97க்கு அவருடைய பெயரிலும் எதிரிகள் 2 முதல் 5 வரை உள்ளவர்கள் பெயரிலும், விஷால் எக்ஸ்போ பெயரிலும், சிகா கல்வி அறக்கட்டளை பெயரிலும், அவருடைய அறியப்பட்ட வருமானத்திற்கு பொருந்தாத வகையில் சொத்துக்களை பெற்றதற்கு திருப்திகரமாக கணக்கு காட்ட முடியவில்லை. எனவே பொது ஊழியராக இருந்த முதல் எதிரி.திரு.கே.பொன்முடி ஊழல் தடுப்பு சட்டம் 1988 13 (2) உ/இ 13 1 (இ) பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை புரிந்துள்ளார். மேற்சொன்ன சம்பவங்களின் தொடர்ச்சியாக மேலே சொன்ன தணிக்கைக் காலத்தில் 2 முதல் 5 எதிரிகள் 1 வது எதிரி திரு.பொன்முடி ஒரு பொது ஊழியராக இருந்து அவரது பதவியை துஷ்பிரயோகம் செய்ய குற்றம் புரிவதற்கு உடந்தையாக இருந்துள்ளார்கள்.

மேற்சொன்ன சம்பவங்களின் தொடர்ச்சியாக 2வது எதிரி முதல் எதிரியின் மனைவியான திருமதி.விசாலாட்சி அவர் பெயரிலும் மற்றும் M/s. Vishal Expo என்ற நிறுவனத்தின் தனிப்பட்ட உரிமையாளர் என்ற அடிப்படையில் 1ம் எதிரி வாங்கிய சொத்துக்களின் பெரும்பகுதி சொத்துக்களில் இருந்து வந்த பணப்பலன்களில் பெரும் பகுதியைப் பெற்றும், 1ம் எதிரி ஒரு பொது ஊழியர் என்ற பொறுப்பிலிருந்தும் அவருடைய பதவியை துஷ்பிரயோகம் செய்யும் உள்நோக்கத்துடன் 1ம் எதிரியை குற்றம் செய்ய தூண்டியுள்ளதின் விளைவாக 2ம் எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்றும்,

மேற்சொன்ன சம்பவங்களின் தொடர்ச்சியாக 3வது எதிரி, முதல் எதிரியின் மாமியார், திருமதி.சரஸ்வதி, 4 மற்றும் 5 ம் எதிரிகள் விழுப்புரம் சிகா கல்வி அறக்கட்டளையில் டிரஸ்டிகளாகவும் இருந்து 1ம் எதிரி வாங்கிய சொத்துக்களின் இருந்து கிடைத்த பணப்பலன்களில் பெரும் பகுதியைப் பெற்றும், 1ம்

எதிரி ஒரு பொது ஊழியர் என்ற பொறுப்பிலிருந்தும் அவருடைய பதவியை துஷ்பிரயோகம் செய்யும் உள்நோக்கத்துடன் குற்றம் செய்ய தூண்டியுள்ளதின் விளைவாக 2 முதல் 5 எதிரிகள் இதச பிரிவு 109 IPC r/w Prevention of Corruption Act U/s.13(2) r/w 13 (1)(e) படி குற்றம் புரிந்துள்ளார்கள் என்றும்,

மேலும் என்னுடைய விசாரணையில் முதல் தகவல் அறிக்கையில் 3 மற்றும் 4ம் எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ள திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு. அஷோக் சிகாமணி ஆகிய இருவர் மீதும் போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை கைவிடப்பட்டது. மேலும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மனோகரன், வரதராமானுஜம், ராஜாராம், சேஷாத்திரி, ரகுபதி, சத்தியசங்கரன், சுந்தரேசன், லலிதாபாய், பார்த்தசாரதி மற்றும் பார்த்தீபன் இவர்களை நீதித்துறை நடுவர் எண்2, உளுந்தூர்பேட்டை அவர்கள் முன்பு குவிமுச பிரிவு 164 ன் கீழ் அவர்களை ஆஜர் செய்து நீதித்துறை நடுவர் அவர்களால் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது.

அ.சா.172 தன்னுடைய விசாரணையை முடித்துக்கொண்டு ஊழல் தடுப்பு இயக்குநர் அவர்களுக்கு இறுதி அறிக்கை அனுப்பினார். அந்த அறிக்கையில் முதல் எதிரி மீது U/s.13(2) r/w 13 (1)(e) Prevention of Corruption Act 1988 மற்றும் 2 முதல் 5 எதிரிகள் மீது 109 IPC r/w U/s.13(2) r/w 13 (1)(e) Prevention of Corruption Act ன் கீழ் வழக்கு தொடர பரிந்துரை செய்தார்.

முதல் எதிரி சட்டமன்ற உறுப்பினராக இருந்ததால் அவர் ஏற்கெனவே அவர் மீது வழக்கு தொடர சட்டமன்ற சபாநாயகர் அவர்களிடம் அனுமதி பெற்று பின்பு அரசுக்கு அறிக்கை அனுப்பி முதல் எதிரி அவர்கள் மீது வழக்கு தொடர அனுமதி பெற்றார். மேலும் இயக்குநர் அவர்கள், நீதிமன்றத்தை 1 முதல் 5 எதிரிகள் மீது வழக்கு தொடரலாம் என்று உத்தரவு எனக்கு வழங்கினார். அந்த உத்தரவின் படி

அ.சா.172 புலன்விசாரணை அதிகாரி சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதிபதி முதல் எதிரி திரு.கே.பொன்முடி அவர்கள் மீது U/s.13(2) r/w 13 (1)(e) Prevention of Corruption Act 1988 மற்றும் 2 முதல் 5 எதிரிகள் மீது 109 IPC r/w U/s.13(2) r/w 13 (1)(e) Prevention of Corruption Act ன் கீழ் குற்றப்பத்திரிக்கை 09.11.2003ம் தேதியில் தாக்கல் செய்தேன். அந்தக் குற்றப்பத்திரிக்கைகளுடன் ஆவணங்களின் பட்டியலையும் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் சாட்சிகளின் பட்டியலையும் சமர்ப்பித்தார் மேற்சொன்ன ஆவணங்களின் பட்டியல் மற்றும் சாட்சிகளின் பட்டியல் அ.சா.ஆ.557 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் பத்ரிநாராயணன், முனிரத்தினம், வைத்தியலிங்கம், ஜனார்தனன், கேசவன், ரங்கநாதப்பிள்ளை, லலிதாபாய், ராஜாராமன், ரகுபதி, சத்தியசங்கரன், சுந்தரேசன், நாராயணன், ஜோசப் ரெஜ்ஜி சேவியர், வெங்கடேசன், கோபு, அருள்மொழி, முத்தையன், சேகர், குமரவேல், விஸ்வநாதன், நாகராஜன், நந்தகுமார், ஆறுமுகம் ஆகியோர் நீதிமன்றத்தில் பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அ.சா.172 எஸ்.ஆர்.ரவி, சீனியர் மேனேஜர், GIC Housing Finance Limited, Chennai-28 அவர்களை விசாரித்தபோது அவர் 2ம் எதிரி திருமதி.விசாலாட்சிக்கு சென்னை-28, ராஜா அண்ணாமலை புரம், கிரீன்வேஸ் ரோடு, எண் 20/எல், அடுக்குமாடி குடியிருப்பு வாங்குவதற்கான ரூபாய் 14 லட்சத்திற்கு கடன் தொகை கொடுத்ததற்கான கோப்பின் சான்றிட்ட நகல் சமர்ப்பித்தார். இது அ.சா.ஆ.558, புலன்விசாரணை அதிகாரி அ.ா.172 எதிரிகளை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்கள் பதிவு செய்தார். அதை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த வாக்குமூலங்கள் முறையே அ.சா.ஆ.559, 560, 561, 562 மற்றும் 563.

7) வழக்கு நடவடிக்கைகள் சுருக்கம் --

இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கையானது புலன் விசாரணை அதிகாரியால் 14/03/2002 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் 1 முதல் 3 எதிரிகளும் மற்றும் 1,2 எதிரிகளின் மகன்கள் திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு.அசோக்சிகாமணி ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனனர். முதல்தகவல்அறிக்கையானது முதலில் 1ம் எதிரி மீது Sections 13 (2) r/w 13 (1) (e) of the P.C.Act 1988 -ன்படியும் 1ம் எதிரியின் மனைவியான 2ம் எதிரி திருமதி.விசாலட்சி மற்றும் அவரது மகன்கள் திரு.அசோக் சிகாமணி மற்றும் கௌதம் சிகாமணி ஆகியோர்கள் மீது Section 13 (1) (e) of the P.C. Act 1988 r/w. 109 I.P.C. ன்படி குற்றம் சாட்டப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

8) முதல்தகவல்அறிக்கையை அனுசரித்து நடைபெற்ற விசாரணையின்பேரில் பின்னிட்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 223 வரையான சாட்சிகள் வாக்குமூலங்கள் மற்றும் 500-க்கும் மேற்படி ஆவணங்களுடன் கடந்த 09.11.2003ல் இறுதி அறிக்கை விழுப்புரம் முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு சிறப்பு அமர்வு வழக்கு எண்.07-2003 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்போது மேற்படி திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு.அசோக்சிகாமணி ஆகியோர் பெயர்கள் நீக்கறவு செய்யப்பட்டு, இறுதி அறிக்கையின்படி 3ம் எதிரியாக 1ம் எதிரியின் மாமியார் திருமதி.சரஸ்வதியும் 4ம் எதிரியாக சிகா அறக்கட்டளையின் நிர்வாகிககளாக கூறப்படும் திரு.மணிவண்ணன் மற்றும் நந்தகோபால் ஆகியோர் 4 மற்றும் 5 எதிரிகளாக வழக்கில் சேர்க்கப்பட்டு இறுதி அறிக்கையானது விழுப்புரம் முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யப்பட்டு சிறப்பு அமர்வு வழக்கு எண்.07/2003 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

9) மேற்படி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் 1ம் எதிரி, 2ம் எதிரி, 3ம் எதிரி, 4 மற்றும் 5 எதிரிகள் ஆகியோர் தனிதனியாக தங்களை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கக்கோரி Cr.M.P.No. 374/2004, 375/2005, 383/2004 and 376/2004 முதன்மை குற்றவியல் நீதிமன்த்தில் தனித்தனியாக மனுக்கள் தாக்கல் செய்து, அம்மனுக்கள் கடந்த 21.07.2004 தேதியில் அனுமதிக்கப்பட்டு 1 முதல் 5 எதிரிகள் அனைவரும் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். மேற்படி உத்திரவினை எதிரித்து அரசு தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் குற்றவியல் சீராய்வு மனுக்கள் 1317 முதல் 1320 – 2004 தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி குற்றவியல் சீராய்வு மனுக்கள் கடந்த 11.08.2006 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டு விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதிமன்ற உத்திரவு உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்திரவிற்கு எதிராக செய்யப்பட்ட மேல்முறையீட்டில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் குற்றவியல் மேல்முறையீட்டு மனுக்கள் 26–38 – 2014 தாக்கல் செய்யப்பட்டு விழுப்புரம் முதன்மை குற்றவியல் நீதிமன்ற உத்திரவு ரத்து செய்யப்பட்டு, எதிரிகள் வழக்கு நடவடிக்கைகளை எதிர்கொள்ள அறிவுறுத்தி மேற்படி குற்றவியல் மேல்முறையீட்டு மனுக்கள் கடந்த 06.01.2014 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு மேற்படி வழக்கானது 2015ம் ஆண்டு ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு சிறப்பு வழக்கு 02–2015 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

10) அதனை தொடர்ந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வழக்குகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யப்படவேண்டும் என் அரசாணையின்படி மேற்படி வழக்கானது விழுப்புரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, Special S.C.No.02/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. குற்றச்சாட்டு வனைவதற்கு முன்பாகவே அதாவது 07/02/2013 தேதியில் 3ம் எதிரியும் 15.04.2008 தேதியில் 5ம் எதிரியும் இறந்துவிட்டார் எனவே 1,2 மற்றும் 4 எதிரிகளுக்கு எதிராக .குற்றச்சாட்டுக்கள் கடந்த 31.03.2015 அன்று வனையப்பட்டு எதிரிகளிடம் குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்ததால் சாட்சிய விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது. 3 மற்றும் 5 எதிரிகள் குற்றச்சாட்டு வனைவதற்கு முன்பாகவே இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய்விட்டதாக உத்திரவிடப்பட்டள்ளது. குற்றச்சாட்டு வனையப்பட்ட பின்னர் 4ம் எதிரி மணிவண்ணன் 15.08.2015 அன்று இறந்துவிட்டுள்ளார்.எனவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் அற்று போனதாக உத்திரவிடப்பட்டுள்ளது.

11) அதனை தொடர்ந்து மேற்படி விழுப்புரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.170 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நிலையில், மேற்படி வழக்கானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்திரவு. ROC. No.49596-A/22/B2, dated 12.07.2022 தேதியிட்ட உத்தரவின்படி **15.07.2022** அன்று இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு Special Case 03/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

12) இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட பின்னர், அரசு தரப்பில் அ.சா.171 மற்றும் அ.சா.172 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் மொத்தம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.563 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சிகளின் குறுக்கு விசாரணையின்போது எ.சா.ஆ.1 முதல் 6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் எ.சா.1 விசாரணை செய்யப்பட்டு எ.சா.ஆ.7 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**13) சிறப்பு அரசு வழக்கறிஞர் வாதம் ..**

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையின்போது முதல் எதிரி 13.05.1996 முதல் 14.05.2001 வரை விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு போக்குவரத்து துறையின் அமைச்சராகவும் பொறுப்பில் இருந்து பணியாற்றிய வகையில் அரசு பொது ஊழியர் என்றும் மேற்படி பொறுப்பிற்கு வருவதற்கு முன்பு விழுப்புரம் மாவட்டம் டி.எடையார் கிராமத்தில் தெய்வசிகாமணி என்ற பெயரில் நடுத்தர விவசாய குடும்பத்தில் வளர்ந்தவர் என்றும் வரலாற்று துறை உதவி பேராசிரியராக பல அரசு கல்லூரிகளில் 06.01.1972 முதல் 21.12.1988 வரை பணியாற்றி அப்பணியிலிருந்து விருப்பு ஓய்வு பெற்ற நிலையில் வழக்கின் 2வது எதிரியான அவரது மனைவி விசாலாட்சி என்பவர் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் பாகாலா கிராமத்தைச் சேர்ந்தவரான நடுத்தர விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவரை திருமணம் செய்து கொண்டு மாமியார் திருமதி.பி.சரஸ்வதி வழக்கின் 3வது எதிரி (பின்னிட்டு இறந்து விட்டவர்) குடும்ப இல்லத்தரசி அவரது கணவர் திரு.பழனி என்பவர் ரயில்வே துறையில கார்டாக பணியாற்றி ஓய்வு பெற்று இறந்துவிட்ட பின்னர் குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்த நிலையில் 4ம் எதிரி

மணிவண்ணன் முதலாவது எதிரியுடன் ஒரே கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றிய வகையிலும் மற்றும் நெருங்கிய நண்பர் என்றும் ஐந்தாவது எதிரி திரு. நந்தபோபால் (பின்னிட்டு இறந்துவிட்டவர்) முதல் எதிரியின் தூரத்து உறவினர் என்ற வகையிலும் இருந்து வந்த நிலையில், 1ம் எதிரி விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு போக்குவரத்து துறையின் அமைச்சராக 13.05.1996 முதல் 14.05.2001 வரை பணியாற்றினார் என்றும், 13.05.1996 முதல் 31.03.2002 வரை சட்ட மன்ற உறுப்பினராக பொது ஊழியராக இருந்த காலத்தில் இரண்டாவது எதிரியான திருமதி. விசாலட்சி என்பவரை உரிமையாளராக கொண்டு விழுப்புரத்தில் கிழக்கு சண்முகபுரம் காலனியில் திருப்பாணாழ்வார் தெருவில் ஏற்றுமதி, பிரசுரம் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் உதிரி பாகங்களை விற்பதற்கு என்று விஷால் எக்ஸ்போ என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டு சொத்துக்களை உருவாக்கியபோதும் 1ம் எதிரியே மேற்படி நிறுவனங்களின் நிழல் உரிமையாளர் என்றும் 1999ம் வருடம் நான்காம் எதிரியான திரு. மணிவண்ணன் என்பவரை நிறுவனர் மற்றும் தலைவர் என்றும் திருமதி. சரஸ்வதி மற்றும் திரு. நந்தகோபால் ஆகியோர்களை உறுப்பினர்காளாகவும் கொண்டு சிகா கல்வி அறக்கட்டளை, எண்.2, நீதிமன்ற சாலை, விழுப்புரம் என்ற பெயரில் மேற்கூறிய 3 முதல் 5 வரையிலான எதிரிகளின் பெயர்களை மட்டும் உபயோகித்துக் கொண்டு, முதலாவது எதிரியான மேற்கூறிய அறக்கட்டளையை நிறுவி அதனை தன்னிச்சையாக நடத்தியதாகவும் மேற்கூறிய M/S. விஷால் எக்ஸ்போ மற்றும் சிகா கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனங்கள் பெயரில் சேர்க்கப்பட்டுள்ள சொத்துக்கள் 1ம் எதிரியின் சொத்துக்கள் என்றும் தணிக்கை காலமாக கொள்ளப்பட்ட காலத்தின் ஆரம்ப தேதியான 13.05.1996 அன்று முதலாவது எதிரி பெயரிலும், முதலாவது எதிரியின் மனைவியும் இரண்டாவது எதிரியான திருமதி.விசாலாட்சி என்பவரது பெயரிலும் ரூ.18,10,644.50/- மதிப்புள்ள

நிதி வள வசதிகள் மற்றும் சொத்துக்கள் கொண்டிருந்தார்கள் என்றும் அவை அட்டவணை-1ல் அந்த விவரங்கள் விளக்கப்பட்டுள்ளது என்றும் தணிக்கை காலமாக கொள்ளப்பட்ட காலத்தின் இறுதி தேதியான 31.03.2002ந் தேதியன்று 1ம் எதிரி அவர் பெயரிலும் 2ம் எதிரியான தன் மனைவி பெயரிலும் 3ம் எதிரயான மாமியார் பெயரிலும் M/S. விஷால் எக்ஸ்போ மற்றும் சிகா கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனங்கள் பெயரில் ரூ.4,10,04,307.95/- மதிப்புள்ள நிதி வள வசதிகள் அட்டவணை-2ல் விளக்கப்பட்டுள்ளவாறு சேர்த்துள்ளதாகவும் எனவே 1ம் எதிரி தன் பெயரிலும், தன் மனைவியான இரண்டாவது எதிரி திருமதி.பி.விசாலாட்சி என்பவரது பெயரிலும், மாமியாரான மூன்றாவது எதிரி திருமதி.பி.சரஸ்வதி என்பவரது பெயரிலும் மேற்கூறிய M/S. விஷால் எக்ஸ்போ மற்றும் சிகா கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனங்கள் பெயரில் ரூ.3,91,93,663.45/- மதிப்புள்ள நிதிவள வசதிகள் மற்றும் சொத்துகள் அட்டவணை-5ல் விளக்கப்பட்டுள்ளவாறு சேர்த்துள்ளார் என்றும் தணிக்கை காலத்தில் முதலாவது எதிரி தெரிந்த வகையில் ரூ.2,21,61,391.45/- மதிப்புள்ள வருமானத்தை அட்டவணை-3ல் கூறியுள்ள விவரங்கள்படி ஈட்டியுள்ளதாகவும் மேற்கூறிய தணிக்கை காலத்தில் முதலாவது எதிரி அட்டவணை-4ல் கூறப்பட்டுள்ள விவரங்களின்படி ரூ.1,38,02,794.97/- அளவிற்கு செலவுகள் செய்துள்ளதாகவும் தணிக்கை காலத்தின் இறுதியில் 31.03.2002 அன்று முதலாவது எதிரி ரூ.83,58,596.48/- அளவிற்கு அட்டவணை-6ல் கண்டுள்ள விபரங்களின்படி சேமிப்பு செய்துள்ளதாகவும் (ரூ.2,21,61,391.45/- (Statement-III) ரூ.1,38,02,794.45/- (Statement-IV) ரூ.83,58,596.48/- என்றும் எனவே 1ம் எதிரி வருமானத்திற்கு அதிகமாக ரூ.3,08,35,066.97/- மதிப்புள்ள நிதி வளங்கள் மற்றும் சொத்துக்களை சேர்த்துளளதாகவும் அதுகுறித்து 23.08.2003ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் புலன் விசாரணை அதிகாரி 1 முதல் 7 வரையிலான

அட்டவணைகளில் உள்ள விவரங்கள் கொடுத்து, 1ம் எதிரியிடம் தகுந்த விளக்கம் கோரியபொழுது பலமுறை கால அவகாசம் கேட்டுப்பெற்று, இறுதியாக 10.10.2003 அன்று கொடுத்த விளக்கம் மற்றும் புலன்விசாரணை அதிகாரியிடம் 1 முதல் 5 வரையிலான எதிரிகள் கொடுத்த வாக்குமூலங்களையும் கவனமாக பரிசீலனை செய்தபொழுது 1ம் எதிரி கொடுத்த விளக்கம் திருப்தி அளிக்கவில்லை இரண்டாவது மற்றும் மூனறாவது எதிரிகளான திருமதி.விசாலாட்சி மற்றும் திருமதி. சரஸ்வதி குடும்பத்தலைவிகள் என்பதும், அவர்கள் பெயரில் உள்ள சொத்துக்களுக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு தனிப்பட்ட வருமானம் எதுவுமில்லை என்றும் மேற்கூறிய இரண்டு நிறுவனங்களுக்கும் அவைகள் பெயரில் உள்ள சொத்துகளுக்கு ஏற்ற வகையில் அவைகளுக்கு தனிப்பட்ட வருமானம் எதுவுமில்லை என்றும் எனவே, 13.05.1996 முதல் 31.03.2002 வரையில் உள்ள இடைப்பட்ட காலத்தில் மாதிரிமங்கலம், கஸ்பாகாரணை, கப்பியாம்புலியூர் போன்ற விழுப்புரம் வட்டத்திலுள்ள கிராமங்களிலும், விட்டலாபுரம் போன்ற திண்டிவனம் வட்டத்திற்குட்ட கிராமத்திலும், கடலூர், புதுச்சேரி, சென்னை மற்றும் திருச்சி போன்ற நகரங்களிலும் 1ம் எதிரி பெயரிலும், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் பெயரிலும், M/S. விஷால் எக்ஸ்போ மற்றும் சிகா கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனங்கள் பெயரிலும், திருப்திகரமான விளக்கம் அளிக்க இயலாத வகையில் தெரிந்த அளவிலான வருமானத்திற்கு அதிகமாக நிதிவள வசதிகள் மற்றும் சொத்துக்களை சேர்த்து வைத்து, வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்து வைத்துள்ளளதால் என்ற குற்றமுறு தவறான நடத்தை உடைய பொது ஊழியர் என்ற பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இதுகுறித்து அரசு தரப்பில் 1 முதல் 172 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர் என்றும் மேற்படி 1ம் எதிரி கிரையம் பெற்றுள்ளது குறித்த

ஆவணங்களும், 2ம் எதிரி தணிக்கை காலத்தில் ஏற்படுத்திக்கொண்ட ஆவணங்கள் குறித்தும் 3 முதல் 5 எதிரிகள் சிகா கல்வி அறக்கட்டளை குறித்து ஏற்படுத்திய ஆவணங்கள் குறித்தும் , 1ம் எதிரியின் வருமானம் மற்றும் செலவினங்கள் குறித்தும் அட்டவணை பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் முன்னிலைக்கு அ.சா.ஆ.544 முதல் அ.சா.ஆ.550 வரையான அட்டவணை பட்டியலில் 7வது பட்டியலில் கண்ட மிகை வருமானம் 1ம் எதிரியின் வருமானத்திற்கு அதிகமாக சேர்க்கப்பட்டது அதற்கு உடந்தையாக 2ம் எதிரி இருந்துள்ளார் என்றும் எனவே 1ம் எதிரி மீது ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன்படி –ன்படியும் 2ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 109 உடன் இணைந்த பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) ஊழல் உ தடுப்பு சட்டம் 1988 ன்படியும் குற்றம் புரிந்துள்ளது குறித்து அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி சட்டத்தின் கீழ 1,2 எதிரிகள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் வாதிட்டார்.

14) 1ம் எதிரியின் வழக்கறிஞர் வாதம்
---------------------------

கற்றறிந்த 1ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையின்போது அரசு தரப்பில் முதலில் 1ம் எதிரி மீதும், அவரது மனைவி, மாமியார் மற்றும் மகன்கள் மீது முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், 1ம் எதிரி அவரது மனைவி மகன்கள் ஆகியோர் கூட்டுக்குடும்பமாக உள்ளனர் என்றும், ஆனால் புலன்விசாரணைக்கு பின்னிட்டு தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் மகன்களை நீக்கிவிட்டு சிகா அறக்கட்டளையை ஒரு எதிரியாக சேர்க்காமல் அந்த அறக்கட்டளையின் நிர்வாகி மற்றும் உறுப்பினர்கள் இருவரை தனிப்பட்ட முறையில் சேர்த்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், முதல்தகவல்

அறிக்கை பதிவு செய்வதற்கு முகாந்திரமாக எந்த தனி நபரும் புகார் எதுவும் அளிக்காமல் அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அட்டவணை 1 முதல் 7 வரையிலான பட்டியல்களின்படி 1ம் எதிரி தமது வருமானத்திற்கு அதிகமாக **Rs.3,08,35,066.97** அளவிற்கு சொத்து சேர்த்துள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றும் முதல்தகவல்அறிக்கையில் எதிரிகளாக காட்டிய பின்னர் வேண்டுமென்றே 1ம் எதிரியின் மகன்களை அவர்களுக்கு அதிகப்படியான முறையில் சட்டப்படியான வருமானம் இருப்பதால் இறுதி அறிக்கையில் சேர்க்கவில்லை என்றும் சோதனை காலத்தில் 1ம் எதிரியின் மகன்கள் சம்பாதித்த ரூ.35,84,429/- வருமானத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் தவிர்க்கும் நோக்கில் அவர்களை தவிர்த்தும் மேலும் 1997-98 ஆண்டுக்கான வருமானத்தை கணக்கில் வேண்டுமென்றே எடுத்துக்கொள்ளாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சிகா கல்வி அறக்கட்டளை அதனுடைய பயனாளர்களின் பினாமியாக செயல்பட்டு வரும் நிலையிலும் சிகா கல்வி அறக்கட்டளை பெயரில் தனியாக வருமான வரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும் சிகா கல்வி அறக்கட்டளை 1ம் எதிரியின் பினாமி என்று கூறுவது ஏற்புடையதல்ல என்றும் 1,2 எதிரிகளுக்கும் மேற்படி அறக்கட்டளைக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்று சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர் என்றும் 3 மற்றும் 5 எதிரிகள் குற்றச்சாட்டு வனைவதற்கு முன்பாகவும், 4ம் எதிரி குற்றச்சாட்டு வனைந்த பின்னரும் இறந்துவிட்ட நிலையில் அவர்கள் வாங்கிய சொத்துக்கள் குறித்து 1ம் எதிரியால் விளக்கம் அளிக்க முடியாது என்றும், மேலும் 2 முதல் 5 எதிரிகள் அவர்கள் வருமானத்திற்கு எதிராக சொத்துக்கள் சேர்த்தார்கள் என்பது குறித்து 2 முதல் 5 எதிரிகளுக்கு அறிவிப்பு அனுப்பி அவர்களுடைய விளக்கத்தை பெற அரசு தரப்பு எவ்வித முயற்சியும் செய்யாமல் அவர்களுடைய விளக்கத்தை அளிக்க

வாய்ப்பளிக்காமல் நேரயடிாக அவர்கள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது குற்றவியல் நடைமுறைகளுக்கு எதிரானது என்றும் சிகா கல்வி அறக்கட்டளையை ஒரு தரப்பினராக வழக்கில் சேர்க்கப்படவில்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் 1ம் எதிரி தமது பதில் அ.சா.ஆ.551-ல் இதுகுறித்து தெளிவாக விளக்கம் அளித்துள்ளார் என்றும் 2 முதல் 5 எதிரிகளுக்கு அறிவிப்பு அனுப்பி அவர்களிடமிருந்து விளக்கம் பெற புலன்விசாரணை அதிகாரி முயற்சி செய்யவில்லை என்றும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கணக்கு பட்டியல்கள் 1 முதல் 7 தவறான முறையில் உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சிகா கல்வி அறக்கட்டளை சொத்துக்களுக்கும் 1 மற்றும் 2 எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் இதுகுறித்து புலன்விசாரணை அதிகாரி தமது குறுக்கு விசாரணையில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் 3ம் எதிரியின் சொத்துக்களுக்கும் 1ம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லாத நிலையில் அவைகளை 1ம் எதிரியின் வருமானம் கொண்டு பினாமி பெயரில் வாங்கப்பட்டதாக கூறுவது முற்றிலும் தவறானது என்றும் சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள வீடு 3ம் எதிரி பெயரில் வாங்கப்பட்ட நிலையில் அதுகுறித்து விளக்கம் பொது ஊழியரான 1ம் எதிரியிடம் கோரியிருப்பது சட்டப்படி தவறானது என்றும் அதேபோல் 3ம் எதிரியின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் 1ம் எதிரியின் கணக்கில் வரவு வைத்துள்ளது தவறானது என்றும் பட்டியல் 2-ல் 9வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ள இனத்தை தவிர வேறு சொத்துக்கள் 1ம் எதிரிக்கு இல்லை என்றும் 1ம் எதிரி சுமார் 16 வருடங்கள் அரசுக்கல்லூரியில் பேராசரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற நிலையில் அவரது வருமானம் குறித்து முறையாக கணக்கீட்டு பட்டியல் தயார் செய்யப்படவில்லை என்றும் அதுகுறித்து அ.சா.64 தன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் 1ம் எதிரி

குடும்பத்தின் ஆடிட்டர் அ.சா.68 கியான்சந்த் போரா 1ம் எதிரியின் சோதனை காலத்திற்கான ஆண்டுகளில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்தது குறித்தும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அதில் சம்பளம் மற்றும் விவசாய வருமானம் ரூ.12,47,226/- கணக்கில் எடுக்காமல் உள்ளது என்றும் தன் மகன்களுக்கான திருமண செலவுகள் தன் மகனின் மாமனார் வீட்டில் செய்த நிலையில் மேற்படி திருமணத்தில் வந்த மொய் பணம் மேற்படி 1வது எதிரியின் வருமானத்தில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் ஆனால் அவ்வாறு அரசு தரப்பில் செய்யவில்லை என்றும் 1ம் எதிரியின் மகன்களும் வருமான வரி செலுத்துபவர்கள் மேலும் ஆட்டோமொபைல் தொழில், சிமெண்ட் ஏஜென்ஸி, மாரபல் வியாபாரம் நடத்திய நிலையில் அவர்களை சேர்க்காமலும் அவர்களின் வருமானத்தை சேர்க்காமலும் உள்ளது உள்நோக்கம் கொண்ட செயல் என்றும் தேர்தல் செலவு, திருமண வரவேற்பு செலவு ஆகியவைகள் குறித்து உரிய முறையில் கணக்கீடு மதிப்பு செய்யவில்லை என்றும் வாதுரைத்தார்.

15) 1ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் மேலும் தன் வாதுரையில் 3ம் எதிரியின் வீட்டில் சோதனை செய்து கைப்பற்றப்பட்ட பணம் 3ம் எதிரியுடையது என்றும், 3ம் எதிரிக்கு சொந்தமான கட்டிடத்தில் இருந்து வாடகை வருமானம் வருவது குறித்து அ.சா.9 முதல் அ.சா.14 மற்றும் அ.சா.39 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர் என்றும் 3ம் எதிரியின் குடும்ப வருமானம் குறித்து அ.சா.8, 3ம் எதிரியின் மகன் உரிய சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அதன்படி 3ம் எதிரி குடும்பத்திற்கு 110 ஏக்கர் நஞ்சை விவசாய நிலங்கள், 4 வீடுகள், கடைகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவரது வருமான வரி கணக்கு அ.சா.ஆ.17 ஆகவும் அவரது சகோதரர்கள் வருமான வரி கணக்கு எ.சா.ஆ.1 மற்றும் 2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி அ.சா.8, தமது தாயாருக்கு ரூ.18,00,000/-

பாகமாக கொடுத்தது குறித்தும் சகோதரர்கள் ரூ.8,50,000/- கொடுத்தது குறித்தும் 80 சவரன் நகைகளை விற்று அவரது தாயாருக்கு ரூ.2,40,000/- கொடுத்தது குறித்தும் மேலும் 110 சவரன் நகைகளை விற்று ரூ.3,50,000/- ஆக மொத்தம் ரூ.45,90,000/- 3ம் எதிரியின் குடும்பத்தில் இருந்து மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் இதுகுறித்து அ.சா.170 புலன்விசாரணை அதிகாரி சாட்சியம் அளித்து மேற்படி சங்கதிகளை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், சென்னை சைதாப்பேட்டையில் உள்ள வீடு 3ம் எதிரிக்கு மட்டும் சொந்தமான நிலையில் அதுகுறித்து 1ம் எதிரியிடம் விளக்கம் கோருவது தவறானது என்றும் மேற்படி சங்கதிகளை மெய்பிக்கும் நிலையில் உள்ள 3ம் எதிரி இறந்துவிட்டதால் தற்போது 1ம் எதிரி அதுகுறித்து நிரூபணம் செய்ய இயலாத நிலை உள்ளது என்றும் 3ம் எதிரி 1ம் எதிரி மூலம் சொத்துக்களை சேர்த்தார் என்று கூறியிருப்பது தவறானது என்றும் சிகா கல்வி அறக்கட்டளைக்கும் 1,2 எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறிய நிலையில் மேற்படி சொத்துக்கள் வாங்கப்பட்டது 1ம் எதிரியின் சட்டவிரோத வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டதாக முடிவு செய்திருப்பது தவறானது என்றும் சிகா கல்வி அறக்கட்டளை அடிமனை 10 ஏக்கர் 5ம் எதிரியால் தானமாக கொடுக்கப்பட்டது குறித்து புலன்விசாரணை அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அறக்கட்டளைக்கும் பொது ஊழியரான 1ம் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அறக்கட்டளையின் வருமானம் அதிகமாக உள்ளது குறித்து அறக்கட்டளை சம்பந்தப்பட்ட வருமான வரி கணக்கு நிரூபணம் செய்யும் விதமாக அமைந்துள்ளது என்றும் அதுகுறித்த வாய்மொழி சாட்சியம், சான்றாவணங்களை கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் அ.சா.146 வருமான வரி அலுவலர் மற்றும் அ.சா.68 ஆடிட்டர் ஆகியோர் சாட்சியம் இவ்வழக்கில் மிக முக்கியமானது என்றும் வாதுரைத்தார். மேலும் சோதனை காலமான 13.05.1996

முதல் 31.03.2002 வரை 1ம் எதிரியின் சொத்து மதிப்பு ரூ.2,39,000/- மட்டும் என்றும் 1ம் எதிரியின் மொத்த வருமானம் ரூ.17,67,087/- என்றும் செலவினங்கள் ரூ.14,60,548/- சேமிப்பு ரூ.8,63,635/- எனவும் 1வது எதிரி தணிக்கை காலத்தில் கையகப்படுத்திய சொத்திற்கு பிறகும் ரூ.6,24,635/- எஞ்சியிருந்தது என்ம் நீதிமன்றத்தின் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்வாவணங்களின்படி நிரூபணம் ஆகும் என்றும் எனவே 1 மற்றும் 2 எதிரிகள் மேற்படி குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

16) -- 2ம் எதிரியின் வாதம்
-----------------

கற்றறிந்த 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையின்போது 2ம் எதிரி 1ம் எதிரியின் பினாமி அல்ல என்றும், 1ம் எதிரியின் வருமானத்திலிருந்து தான் 2ம் எதிரி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதற்கு எவ்வித சாட்சியங்ககளும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின்படி 2ம் எதிரி விஷால் எக்ஸ்போ, விஷால் ஆட்டோமொபைல்ஸ் ஆகியவற்றின் உரிமையாளர் என்றும், விவசாய நிலத்தில் கரும்பு பயிர் செய்து கரும்பு ஆலைகளுக்கு கரும்பு அனுப்பி அதன்மூலம் கனிசமான வருமானம் பெற்று வருகிறார் என்றும் 2ம் எதிரி வருமானவரி செலுத்துபவர் என்றும் இதுகுறித்து அ.சா.71 மற்றும் அ.சா.166 ஆக விசாரிக்கப்பட்ட வணிக வரி அலுவலர்கள் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மேலும் 2ம் எதிரி ஏற்றுமதி இறக்குமதி தொழில் செய்து வருவதை நிருபணம் செய்யும் வகையிலவ் அ.சா.74 மேனேஜர் லட்சுமி கார்கோ மற்றும் ராகவேந்திரா என்டர்பிரைசஸ் உரிமையாளர் அ.சா.76 ஆகியோர் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளனர் என்றும் விஷால் எக்ஸ்போ குறித்த கணக்கு வழக்குகள் பராமரிக்கப்பட்டு வருவது குறித்து அ.சா.77 பாரத ஸ்டேட் வங்கி மேலாளர்

சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மேலும் அ.சா.168 ஆக விசாரிக்கப்பட்ட வங்கி மேலாளர் 2ம் எதிரி வெளிநாடு தொடர்பான பரிவர்த்தனைகள் செய்து வருவதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மேலும் அ.சா.134 மற்றும் அ.சா.135 ஆகியோர் விஷால் ஆட்டோமொபைல்ஸ் பரிவர்த்தனைக்ள குறித்து சாட்சியம் அளித்துள்ளனர் என்றும் அ.சா.71 முதல் 79 வரையான சாட்சிகள் 2ம் எதிரி ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருவது குறித்தும் சாட்சியம் அளிததுள்ளனர் என்றும் அ.சா.37–ன் சாட்சியத்தின்படி ரு–15,45,000– ரமனியம் டவர்ஸ் கட்டிடம் கட்ட கடன் பெறப்பட்டுள்ளது குறித்தும் ஸ்ரீராம் சிட்ஸ் நடத்தி வருவது குறித்து அ.சா.84 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அ.சா.92 வங்கி மேலாளர் தன் சாட்சியத்தில் 2ம் எதிரி டிப்பர் லாரி வாங்குவதற்காக கடன் பெற்றது குறித்தும் திருப்பி செலுத்துவது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் வாதுரைத்தார்.

17) 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் மேலும் தமது வாதுரையின்போது அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ளபட்டியல் 1 -ல் கண்டுள்ளபடி விசாரணை காலத்தில் அயிட்டம் 14 முதல் 25 வரையான சொத்துக்கள் ரூ.62,75,037/-க்கு வாங்கப்பட்டது என்றும் ரொக்கம் ரூ.2,62,652/- என்றும் மொத்த சொத்துக்கள் மதிப்பு ரூ.65,37,689/- என்றும் கூறப்பட்டுள்ளது. 2ம் எதிரியின் வருமானம் அதாவது பட்டியல் 3-ன்படி ரூ.50,24,721.45 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆனால் அது உண்மையல்ல என்றும், இந்தியன் வங்கியில் பெற்ற கடன், தர்மேஷ் பைனான்சில் பெற்ற கடன், டிப்பர் லாரியில் கிடைக்கும் வருமானம், விவசாய வருமானம், பாகப்பிரிவினையில் கிடைத்த வருமானம், ஆட்டோமொபைல்ஸ், விஷால் பப்ளிகேஷன்ஸ் மற்றும் வங்கிக் கடன்கள் இவைகளை கருத்தில் கொள்ளவில்லை என்றம் அதேபோல் பட்டியல் 4 ஆன செலவினங்கள் ரூ.36,98,346/- என்றும், சேமிப்பு ரூ.13,26,374.70 என்றும் எனவே வருமானத்திற்கு

அதிகமாக விகிதாச்சாரமற்ற சொத்துக்கள் சேர்த்துள்ளதாகவும் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது தவறு என்றும் ஆனால் 2ம் எதிரி மிகுந்த செல்வாக்குமிக்க குடும்பத்தில் இருந்து பிறந்தவர் என்பதும் அவரது திருமணத்தின்போது அவருக்கு 150 சவரன் நகைகள் சீதனமாக கொடுக்கப்பட்டது என்பதும் இதுகுறித்து புலன்விசாரணை அதிகாரி தன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதையும் நீதிமன்றம் பரிசீலணை செய்திடவேண்டும் என்றும் அரசு தரப்பில் வேண்டுமென்றே பல வருமானங்கள் மறைத்தும் செலவுகள் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் பட்டியல் 3 முழுமையான ஆவணம் அல்ல என்றும் விசாரணை காலமான 1997 முதல் 2003 (மார்ச்) வரையான கால கட்டத்திற்கான முழுமையான வருமானத்தை அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும் 2ம் எதிரியின் வருமான வரிக்கணக்குகளை பரிசீலணையில் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் மேற்படி விசாரணை காலத்தில் 2ம் எதிரி தாக்கல் செய்த வருமான வரிக்கணக்கின்படியே ரூ,1,28,60,510.25 2ம் எதிரியின் சேமிப்பு என்றும் ஆனால் ரூ.65,37,689/- மதிப்புமிக்க சொத்துக்களே அவரால் வாங்கப்பட்டது என்றும் எனவே வருமானத்திற்கு அதிகமான சொத்து என்பது தவறானது என்றும் 1ம் எதிரியிடமிருந்து தான் 2ம் எதிரி பணம் பெற்றார் என்பது குறித்து அரசு தரப்பில் மெய்பிக்கப்படவில்லை என்றும் சொத்துக்கள் முழுவதும் 2ம் எதிரியின் சுயசம்பாத்தியத்தில் இருந்து வாங்கப்பட்டவைகள் என்றும் எக்காலத்திலும் 1ம் எதிரியின் பினாமியாக 2ம் எதிரி செயல்பட்டது இல்லை என்றும் 1ம் எதிரியிடமிருந்து சட்டவிரோத பணத்தை 2ம் எதிரி பெற்றார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்றும் ஆனால் அதற்கு மாறாக ரூ.63,22,821.25 உபரி வருமானமே 2ம் எதிரிக்கு உள்ளது என்றும் எனவே 2ம் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் ஆவணம் மற்றும் வாய்மொழி சாட்சியம்

முன்னிலைக்கு நிரூபணம் செய்யாததால் 2ம் எதிரியை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறு வாதிட்டார்.

18) அரசு தரப்பு வாதம், 1,2 எதிரிகள் தரப்பு வாதம், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள், வழக்கு கோப்புகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய வினாக்கள் பின்வருமாறு :-

(1) 1ம் எதிரி ஒரு பொது ஊழியர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(2) 1ம் எதிரி தரப்பில் வாதிடப்படுவது போல் தனி நபர் புகார் எதுவும் இல்லாததால் முதல்தகவல் அறிக்கை செல்லத்தக்கதல்ல என்பது சரியா?

(3) 1ம் எதிரி தரப்பில் வாதிடப்படுவது போல் 3 முதல் 5 எதிரிகள் 1ம் எதிரியின் பினாமியாக செயல்பட்டு வருகிறார்கள் என்பதும் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இறந்த 3ம் எதிரி தனி வருமானம் உள்ளவர் என்றும் 3ம் எதிரி வாங்கிய சொத்துக்களுக்கும் 1ம் எதிரிக்கும் தொடர்பு இல்லை என்பது சரியானதா?

(4) இறந்து போன 3 முதல் 5 எதிரிகளுக்கு எதிரான குற்றசாட்டு அற்றுப்போய்விட்டதாக தீர்மானிக்கப்பட்டு அவர்கள் பெயரில் உள்ள சொத்துக்கள் மீதான நடவடிக்கை கைவிடப்படவேண்டும் என்ற 1,2 எதிரிகளின் வாதம் சரியா?

(5) 1ம் எதிரி தரப்பில் வாதிடப்படுவது போல் சிகா கல்வி அறக்கட்டளை சொத்துக்களுக்கும் 1ம் எதிரிக்கும் உள்ள தொடர்பில்லை என்பதும் அறக்கட்டளையை தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறானது என்ற 1 மற்றும் 2 எதிரிகளின் வாதம் சரியானதா?

(6) 1ம் எதிரி பொது ஊழியர் என்ற வகையில் தனது அதிகார வரம்பை மீறி அட்டவணை பட்டியல் 7-ல் கண்டுள்ளபடி வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்துள்ளார் என்ற குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் முன்னிலைக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(7) 1ம் எதிரி தரப்பில் வாதிடப்படுவது போல் 1ம் எதிரியின் மகன்களின் தனி நபர் வருமானம் சேர்க்கப்படாமல் அவர்களின் வியாபார பரிவர்த்தனைகள் சேர்க்கப்படாமல் தாக்கல் செய்த கணக்குப்பட்டியல் தவறானது என்பது சரியா?

(8) 2ம் எதிரி தரப்பில் வாதிடப்படுவது போல் 2ம் எதிரி குடும்பத்தலைவி அல்ல என்றும் அவருக்கு பூர்வீக சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தின் அடிப்படையில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதும் 1ம் எதிரியின் வருமானத்தில் இருந்து தான் 2ம் எதிரி சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதும் சரியா?

(9) 2ம் எதிரி குறித்த வருமானம் மற்றும் செலவுகள் குறித்த கணக்கு பட்டியில் தவறாக கணக்கிடப்பட்டுள்ளது என்பதும் சரியா?

(10) அரசு தரப்பில் 1 ம் எதிரி மீது ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன்படி –ன்படியும் 2 ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 109 உடன் இணைந்த பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன்படி யும் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**<u>19) வினா 1 :-</u>**

இவ்வழக்கின் 1ம் எதிரி திரு.பொன்முடி அவர்கள் 13.05.1996 முதல் 14.05.2001 வரை விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு போக்குவரத்து

துறையின் அமைச்சராகவும் பொறுப்பில் இருந்து பணியாற்றிய வகையில் அரசு பொது ஊழியர் என்று அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து எதிரிகள் தரப்பில் எவ்வித மறுப்பும் இல்லை. அதேபோல் 2ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி என்பது குறித்தும் எவ்வித மறுப்பும் இல்லை. ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 2(சி)(3-ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

(c) "public servant" means—

(i) any person in the service or pay of the Government or remunerated by the Government by fees or commission for the performance of any public duty;

(ii) any person in the service or pay of a local authority;

(iii) any person in the service or pay of a corporation established by or under a Central, Provincial or State Act, or an authority or a body owned or controlled or aided by the Government or a Government company as defined in section 617 of the Companies Act, 1956 (1 of 1956);

மேற்படி பிரிவு 3-ல் கூறப்பட்டுள்ளபடி மாநில அல்லது மத்திய அரசிடம் இருந்து சம்பளம், ஊதியம் அல்லது அரசு வேலைக்கான கமிஷன் தொகைகள் பெறும் அரசு ஊழியர் உட்பட "பொது ஊழியர்" என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது. தணிக்கை காலத்தில் 1ம் எதிரி விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் என்பது குறித்து அ.சா.1 தெளிவாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், 1ம் எதிரி அரசு பொது ஊழியர் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றே வினா -1க்கு விடை காணப்படுகிறது.

**20) வினா 2:-**

அரசு தரப்பு சாட்சியத்தின்படியும் ஆவணங்களின்படியும், இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கையானது கடந்த 14.03.2002 தேதியில் புலன்விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் 1ம் எதிரி மீது எவ்வித தனி நபர் புகாரும் இல்லை என்றும் எனவே அவர் மீது அரசியல் காழ்ப்புணர்ச்சியின்பேரில் பழிவாங்கும் நோக்கில் முதல்தகவல் அறிக்கை எவ்வித புகாருமின்றி பதிவு செய்யப்பட்டதால் அந்த முதல்தகவல் அறிக்கை செல்லத்தக்கதல்ல என்ற வாதம் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.172 ஆக விசாரிக்கப்பட்ட புலன்விசாரணை அதிகாரி திரு.தாமஸ் அவர்களின் சாட்சியத்தின்படி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனர் அலுவலகத்திற்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் பணியாற்றும் ஒரு காவல் துறை அதிகாரி ஒரு விழிப்பு(Vigilance) அறிக்கை அனுப்பியதாகவும் 10.05.1996 லிருந்து 30.09.2001 வரை மேலே சொன்ன வகையில் பொது ஊழியராக இருந்த காலத்தில் அவரது பதவியை துஷ்பிரயோகம் செய்து அவரது பெயரிலும் அவரின் மனைவி 2ம் எதிரி திருமதி.விசாலாட்சி பெயரிலும் அவர்கள் மகன்கள் திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு.அஷோக் சிகாமணி மற்றும் உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் பெயர்களில் அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் சேர்த்ததாக குறித்து அந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றும் அந்த அறிக்கையை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் பரிசீலனை செய்து அனுப்பப்பட்ட விழிப்பு அறிக்கையின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அனுமதி கேட்டு இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்கள் தமிழக அரசுக்கு ஒரு அனுமதி கடிதம்

அனுப்பி அனுமதி பெற்றதாகவும் அந்த இயக்குனர் கடித எண். RC 70/20/2002/Pub/HQ. Dated 14/03/2002-ன் படி தனக்கு திரு.கே.பொன்முடி அவரது மனைவி திருமதி.விசாலாட்சி மகன்கள் திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு.அஷோக் சிகாமணி அவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய உத்திரவிடப்பட்டதாகவும் அதன்படி தாம் ஒரு ரகசிய விசாரணை செய்து அதனுடைய தகவலை சரிபார்த்து திரு.கே.பொன்முடி அவரது மனைவி திருமதி.விசாலாட்சி மகன்கள் திரு.கௌதம் சிகாமணி மற்றும் திரு.அஷோக் சிகாமணி அவர்கள் மீது கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கடலூர் பிரிவு, குற்ற எண். 4/2002/AC/CL, ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) மற்றும் இதச பிரிவு 109 படியும் 14.03.2002 18.00 மணிக்கு அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் கூறியுள்ளார். மேற்படி ரகசிய அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஒரே காரணத்தினால் மட்டுமே மேற்படி முதல்தகவல்அறிக்கை சரியான நடைமுறைகளை பின்பற்றி பதிவு செய்யப்படவில்லை என்ற எதிரிகளின் வாதம் ஏற்புடையதல்ல. மேலும் முதல்தகவல் அறிக்கையை அனுசரித்து நடைபெற்ற விசாரணையின்பேரில் காவல் கண்காணப்பாளர், Vigilance and Anti Corruption, Western Range, Coimbatore Camp at Chennai அவர்கள் ஒரு RC 70/20/2002/Pub/HQ. Dated 14/03/2002 என்ற நடவடிக்கை குற்ற எண். 4/2002/AC/CL வழக்கை விசாரணை செய்ய நடவடிக்கைகள் அ.சா.ஆ.498 வழங்கியதன் அடிப்படையில் மற்றொரு நடவடிக்கை அதே நாளில் RC 70/20/2002/Pub/HQ. Dated 14/03/2002 வங்கி கணக்குகளை தணிக்கை செய்ய நடவடிக்கை அ.சா.ஆ.499 ஆகவும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் முதல்தகவல் அறிக்கை என்பது முகநிலை விசாரரணை (Prima Facie Investigation) -ன்பேரில் பதிவு செய்யப்படுவதாகவும்.

விசாரணை அதிகாரி தான் ரகசிய தகவல்களின்பேரில் தான் மேற்கொண்ட முதல்கட்ட விசாரணையில் 1ம் எதிரி அவரது குடும்பத்தினர் பேரில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்க்கப்பட்டது குறித்து தெரியவந்ததன்பேரில் தன் மேல் அதிகாரிகளின் வழிகாட்டுதலின்படியே முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ததாக கூறியுள்ளார். மேலும் இதுகுறித்து விளக்கம் 1ம் எதிரியிடம் கேட்கப்பட்டு அவரும் விளக்கம் அளித்துள்ளார். மேற்படி 1ம் எதிரியின் விளக்கம் திருப்தி அடையாத காரணத்தினால் எனவே ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 19-ல் கூறியபடி, ஒரு பொது ஊழியரின் மேல் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் விசாரணை மேற்கொள்ள துறை அலுவலரின் முன்அனுமுதியுடன் தான் 1ம் எதிரி மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு தரப்பில் உரிய வழிமுறைகளை பின்பற்றியும் 1ம் எதிரியின் மேல் நடவடிக்கை எடுக்க அனுமதி கோரி தகுந்த விண்ணப்பம் அளிக்கப்பட்டு அந்த விண்ணத்தின் மேல் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டும் மேல் அதிகாரிகளின் வழிகாட்டுதலின்படி மேல்விசாரணை நடைபெற்றுள்ளது. மேலும் இறுதி எனவே மேற்படி சூழ்நிலையில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கை நிராகரிக்கப்படவேண்டும் என்ற 1,2 எதிரிகள் தரப்பு வாதம் நிராகரிக்கப்படுகிறது.

**<u>21) வினாக்கள் 3 முதல் 4 :-</u>**

அடுத்ததாக அரசு தரப்பில் 2வது எதிரி M/S.விஷால் எக்ஸ்போவின் பெயரளவு உரிமையாளர்களாகவும், 3 முதல் 5 எதிரிகள் சிகா கல்வி அறக்கட்டளையின் சொத்துக்களுக்கு பெரளவில் உரிமையாளராக 1ம் எதிரி சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்திலிருந்து பெறப்பட்ட நிதிவள சொத்துக்களுக்கு பினாமியாக செயல்பட்டு 1ம் எதிரியின் செயல்களுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

22) 1,2 எதிரிகள் தரப்பில் ஒரு நபர் பினாமியாக செயல்படுகிறார் என்று யார் ஒருவர் வாதத்தை முன்வைக்கிறாரோ, அவரே அது குறித்து நிரூபணம் செய்யப்படவேண்டும் என்றும், அதுகுறித்த ஆவண சாட்சியம் மற்றும் வாய்மொழி சாட்சியம் முன்னிலைப்படுத்தும் பட்சத்தில் தான் பினாமி குறித்த பொருண்மை தீர்மானிக்க இயலும் என வாதிட்டு மேற்படி தங்கள் வாதத்திற்கு ஆதரவாக பின்வரும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்முடிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

**AIR 1974 Supreme Court 171 (V 61 C 29) Jaydayal Poddar (Deceased) through L.Rs. And another /versus / Mst. Bibi Hazra and others**

*It is well settled that the burden of proving that a particular sale is benami and the apparent purchaser is not the real owner, always rests on the person asserting it to be so. This burden has to be strictly discharged by adducing legal evidence of a definite character which would either directly prove the fact of benami or establish circumstances unerringly and reasonably raising an inference of that fact. The essence of a benami is the intention of the party or parties concerned; and not unoften such intention is shrouded in a thick veil which cannot be easily pierced through. But such difficulties do not relieve the person asserting the transaction to be benami of any part of the serious onus that rests on him; nor justify the acceptance of mere conjectures or surmises, as a substitute for proof. Though the question, whether a particular sale is benami or not, is largely one of fact, and for determining this question, no absolute formulae or acid test, uniformally applicable in all situations, can be laid down; yet in weighing the probabilities and for gathering the relevant indicia, the courts are usually guided by these circumstances; (1) the source from which the purchase money came; (2) the nature and possession of the property, after*

*the purchase; (3) motive, if any, for giving the transaction a benami colour; (4) the position of the parties and the relationship, if alleged benamidar; (5) the custody of the title-deeds after the sale and (6) the conduct of the parties concerned in dealing with the property after the sale.*

23) இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரி அ.சா.172 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தமது குறுக்கு விசாரணையில்,

*1ம் எதிரியின் பினாமி சொத்துக்களாக காண்பித்து தான் இறுதி அறிக்கை என்னால் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் சிகா கல்வி அறக்கட்டளையை ஒரு எதிரியாக குற்றப்பத்திரிக்கையில் நான் காட்டவில்லை என்றால் சரிதான். 3 முதல் 5 எதிரிகள் குற்றப்பத்திரிக்கையில் தனிப்பட்ட நபர்களாக தான் காண்பிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.*

*என்னுடைய விசாரணையில் முதல் 3 எதிரிகளுமே அவர்கள் பெயரில் உள்ள சொத்துகளுக்கான விவரங்களையும் அந்த சொத்துக்கள் எவ்வாறு அவர்களுக்கு கிடைத்தது என்பதற்கான ஆதாரங்களையும் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் எதிரி தன்னுடைய விசாரணையில் 2ம் எதிரிக்கு திருமணத்தின்போது 100 சவரன் நகை சீதனமாக கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.*

*இந்த 4 மற்றும் 5எதிரிகள் தங்களது வாக்குமூலங்களில் தங்களுடைய பெயரில் சொத்துக்கள் உள்ளதாக வாக்குமூலங்கள் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். 4ம் எதிரி ஓய்வுபெற்ற கல்லூரி விரிவுரையாளராகவும், 5ம் எதிரி முதல் வகுப்பு அரசு ஒப்பந்ததாரர் ஆகவும் இருந்தார்கள் என்றால் சரிதான். 4ம் எதிரிகளின் மகன்களில் ஒருவர் அரசு போக்குவரத்து கழகத்தில் பொறியாளராகவும், இரண்டாவது மகன் துபாயிலும் பணி புரிந்து வந்தார்கள் என்றால் சரிதான்.*

*1 முதல் 5 எதிரிகள் யாரும் சிகா கல்வி அறக்கட்டளையிலிருந்து எவ்வித பலன்களும் பெறவில்லை என்றால் சரிதான்.*

14 விக்கிரைய ஆவணங்கள் மூலம் சிகா கல்வி அறக்கட்டளை சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று தெரிய வந்தாலும், ஆனால் எந்த சொத்து வாங்குவதற்கும் அதாவது பதிவுக் கட்டணம், முத்திரைத்தாள் கட்டணம், கிரைய கட்டணம் செலுத்துவதற்கோ எந்த வகையிலும் 1 வது எதிரி உதவியதாக இருந்ததாக தெரியவந்ததா என்றால் இல்லை.

1ம் எதிரி என்னுடைய விசாரணையில் ஆந்திர மாநிலம், மதனப்பள்ளி கிராமத்தில் 110 ஏக்கர் நிலங்கள் 3ம் எதிரியின் குடும்பத்தாருக்கு சொந்தமாக இருந்ததாக என் விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். 3ம் எதிரி 250 சவரன் தனது திருமணத்தின்போது தனக்கு சீதனமாக கொடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தன்னுடைய கணவர் அவரது பெற்றறோருக்கு ஒரே மகன் என்றும் எனவே அவர்களது குடும்ப சொத்துக்கள் அனைத்தும் தன் கணவருக்கு வாரிசு படி கிடைத்தது என்றும் அவரது காலத்திற்கு பிறகு தனக்கு கிடைத்ததாக என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேலும் எனது விசாரணையில் 3ம் எதிரி விற்றது போக 60 ஏக்கர் நிலம் வைத்துள்ளதாகவும், அது தவிர 400 சவரன் நகை, பாகாலாவில் 10 வீடுகள் மற்றும் 5 லட்ச ரூபாய் ரொக்கப்பணம் இருப்பதாக 3ம் எதிரி என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த நிலங்கள் மற்றும் மற்ற சொத்துக்கள் குறித்து 3ம் எதிரியின் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கான ஆவணங்களை நான் பெற்றேன் என்றால் சரிதான். மேலும் 3ம் எதிரி தன் வாக்குமூலத்தில் தனது மாமனார் காலத்திலிருந்து வட்டிக்கு விடுவதன் மூலம் தனக்கு வருமானம் வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 3ம் எதிரி வருமானவரி செலுத்துபவர் என்றாலும் அதற்கான கணக்குகளை தாக்கல் செய்தார் என்றாலும் சரிதான். மேலும் நகைகளின் ஒரு பகுதியை தன்னுடைய மகன் சுவாமிநாதன் மூலமாக விற்று காசாக்கிய விவரமும் என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

3ம் எதிரியின் மகன்களான சுவாமிநாதன், நடராஜன் மற்றும் கனகராஜன் ஆகியோரை நான் விசாரணை செய்தேன் என்றால் சரிதான். சுவாமிநாதன் என்னுடைய விசாரணையில் தனது தாயாருக்கு சென்னை, ஸ்ரீ நகர் காலனியில் வீடு கட்டும்போது ரூ.18,00,000/- இரண்டு தவணைகளாக பணம்

கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் சுவாமிநாதனின் வருமான வரி கணக்கில் 13,50,000/- ரூபாய் தான் தனது தாயாருக்கு கொடுத்ததாக காட்டப்பட்டுள்ளது. மற்ற மகன்களான நடராஜன் மற்றும் கனகராஜன் ஆகியோர் இருவரும் சேர்ந்து தனது தாயாருக்கு வீடு கட்டுவதற்காக ரூ.20,00,000/- கொடுத்ததாக என் விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். 3ம் எதிரியின் கணவர் 1993ம் ஆண்டு இறந்துவிட்டார் என்று என் விசாரணையில் தெரிய வந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் இருந்த அவர்களின் குடும்ப சொத்து 60 ஏக்கர் நிலம் 3ம் எதிரி உட்பட நான்கு நபர்களுக்கு பிரிக்கப்பட்டதாக ஒரு பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் என் விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். 3ம் எதிரிக்கு அவரது மாமனார் உயிருடன் இருந்த காலத்திலேயே பாகாலாவில் ஒரு வீடும் ஒன்றரை ஏக்கர் நன்செய் நிலமும் அவருக்கு கிடைத்தது என்றால் சரிதான். அதிலிருந்து வரும் மாத வாடகை ரூ.850/-ம் அந்த விவசாய நிலங்களிலிருந்து விவசாய வருமானத்தில் பாதி பாகம் 3ம் எதிரிக்கு கிடைத்தது என்றால் சரிதான். இந்த தணிக்கைக் காலத்தில் 3ம் எதிரியும் அவருடைய மகன்களும் 2ம் எதிரி விசாலாட்சிக்கு நிலங்களை பாக பாத்திய விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்தவகையில் 3ம் எதிரிக்கு ரூ.10000/- வருமானம் வந்தது என்றால் சரிதான். 3ம் எதிரி அவருக்கு சொந்தமான நகைகளை விற்ற வகையிலும் அவருக்கு வருமானம் வந்ததாக என் விசாரணையில் தெரியவந்தது. அ.சா.85, 86 மற்றும் 87 ஆகியோரின் வாக்குமூலங்களை நான் தவறாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.9 முதல் 14 வரை சாட்சிகளை விசாரித்த வகையில் 3ம் எதிரிக்கு வாடகை வருமானம் அவர் உயிருடன் இருந்தவரை வந்தது என்பது என் விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். அ.சா.14 பஷீர் அகமது, விசாரணையில் 1993லிருந்து 3ம் எதிரிக்கு குடும்ப ஓய்வூதியம் வந்தது என்பது என் விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். 1997லிருந்து 2001 வரைக்கான பென்ஷன் விவரம் கேட்டு நான் வேண்டுகோள் கடிதம் அ.சா.14 -இடம் கொடுத்தேன் என்றால் சரிதான். 1997 லிருந்து 2001 வரை பென்ஷன் வகையிலும் அரியர் வகையிலும் ரூ.4,19,824/- கிடைத்தது என்றால் சரிதான்

25) மேலும் இவ்வழக்கின் 1ம் எதிரி தனது சட்டவிரோத வருமானத்தை தனது மனைவி 2ம் எதிரி பெயரிலும் மற்றும் மாமியார் 3ம் எதிரியின் பெயரில் சிகா கல்வி அறக்கட்டளை சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றும், பணம் சிகா அறக்கட்டளையின்பேரில் 1ம் எதிரியால் வைப்பீடு செய்யப்பட்டது எனறும் அவைகள் வரிசை எண்கள் 35 முதல் 60 அட்டவணை எண்.2-ல் காண்பிக்கப்பட்டுள்ளது. சிகா கல்வி அறக்கட்டளை பவுண்டர் சேர்மேன் மற்றும் டிரஸ்டி 4ம் எதிரி திரு.மணிவண்ணன் மற்றும் 2வது டிரஸ்டி 3ம் எதிரி திருமதி. சரஸ்வதி மற்றும் 3வது டிரஸ்டி 5ம் எதிரி திரு.நந்தகோபால் ஆகும் என்றும் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

26) மாறாக 1ம் எதிரி தரப்பில் 2வது மற்றும் 3வது மற்றும் சிகா கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துக்கள் குறித்து சம்பந்தப்பட்ட நபர்களிடம் விளக்கம் கேட்காதது தவறானது என்றும் இதுகுறித்து 1ம் எதிரியிடம் அ.சா.ஆ.551-ன் முன்னிலைக்கு 1ம் எதிரியிடம் விளக்கம் கோரப்பட்டது என்றும் அவரது விளக்கம் அ.சா.ஆ.556 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் எவ்வித ஆதாரமும் இல்லாமல் மேற்படி அறக்கட்டளை 1ம் எதிரியின் பினாமியாக சித்தரித்து இவ்வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

27) சிகா கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துக்கள் மேற்படி அறக்கட்டளை பெயரிலும் 3 முதல் 5 எதிரிகள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிரிக்கும் சிகா கல்வி அறக்கட்டளைக்கும் நேரடி தொடர்பு இருப்பதற்கான எவ்வித ஆதாரமும் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் சிகா

அறக்கட்டளையின் டிரஸ்டிகள் 3 முதல் 5 எதிரிகள் தற்போது இறந்துவிட்ட நிலையில் அவர்களிடமிருந்து விளக்கம் பெறவும் அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்காத நிலையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின்படி மேற்படி 1ம் எதிரிக்கும் சிகா கல்வி அறக்கட்டளைக்கும் உள்ள தொடர்பு குறித்து எவ்வித ஆவணங்களும் இல்லாத நிலையில் அரசு தரப்பில் சிகா கல்வி அறக்கட்டளையை 1ம் எதிரியின் பினாமியாக எவ்வாறு சேர்த்தனர் என்ற விளக்கம் அளிக்கப்படாத நிலையில் அரசு தரப்பு வழக்கில் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. மேலும் அ.சா.146 ஆக வருமான வரித்துறை ' அதிகாரி யோகலிங்கம் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன் குறுக்கு விசாரணையில்,

> *சிகா அறக்கட்டளையில் தலைவர் மணிவண்ணன், உறுப்பினர் நந்தகோபல் மற்றும் சரஸ்வதி ஆகியோர்தான் அறக்கட்டளை நிர்வாகிகள் என்று அ.சா.ஆ 149-ஆக இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இணைப்பு ஆவணத்தின் படி பொன்முடியோ, விசாலாட்சியோ அதில் உறுப்பினர்கள் இல்லை என்றால் எங்கள் ஆவணத்தின் படி இல்லை.*

என்று சாட்சியம் அளித்தள்ளார். மேலும் 1ம் எதிரியின் பினாமியாக 3 முதல் 5 எதிரிகள் செயல்பட்டார்கள் என்பதை நிரூபிக்கவேண்டிய கட்டாயம் அரசுக்கு உள்ளது.

28) மேலும் 1ம் எதிரியின் பினாமியாக 3ம் எதிரி செயல்பட்டார் என்று அரசு தரப்பில் கூறும்போது தணிக்கை காலத்தில் தொடக்க காலத்தில் 3ம் எதிரியின் சொந்தமான சொத்துக்கள் குறித்து பட்டியல் 1-ல் குறிப்படப்படாதது ஏன் என்பதற்கு அரசு தரப்பில் ஏற்குக்கொள்ளக்டிய விளக்கம் எதுவும் கொடுக்காதது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. மேலும் மேற்படி அறங்காலவர்கள் இறந்து, அவர்களுக்கு எதிரான வழக்கு அற்றுப்போன நிலையில் மேற்படி நபர்கள் சார்பாக அறக்கட்டளை

சார்பாக நீதிமன்றத்தில் வழக்கு பற்றி எடுத்துரைக்க யாரும் இல்லாத நிலையில் 2,3 எதிரிகள் சிகால கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துக்களை கையகப்படுத்த 1ம் எதிரியிடமிருந்து பொருளதவி பெற்றார் என்ற அரசு தரப்பு வாதம் மெய்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

29) மேலும் சிகா கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான பல்வேறு சொத்துக்கள் அட்டவணையில் காண்பிக்கவில்லை என்று அ.சா.172 தமது குறுக்கு விசாரணையில் பின்வருமாறு ஒப்புக்கொண்டுள்ளார்.

> *அ.சா.146 யோகலிங்கம், சிகா கல்வி அறக்கட்டளைக்கு 2000-2001 ல் ரூ.36,80,000/- கிடைத்ததாகவும் அதில் 25000/-ரூபாய் அந்த அறக்கட்டளைக்கு வழங்குவதற்கும் மற்றும் 36,55,000/- நன்கொடை மூலமாகவும் கிடைத்ததாகவும் அது வருமான வரி கணக்கில் காட்டப்பட்டதாகவும் என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 2001-2002-ம் ஆண்டில் ரூபாய். 57,66,000/- அறக்கட்டளைக்கான நிதியாகவும், ரூபாய்.21,50,000/- நன்கொடையாகவும் பெறப்பட்டுள்ளதாகவும், பள்ளிக் கட்டணமாக ரூ.21,06,000/- மும், விடுதிக் கட்டணமாக ரூ.19,50,000/- ரூபாயும் வருமானமாக பெறப்பட்டுள்ளதாகவும் அந்த வருமானம் அந்த ஆண்டிற்குரிய வருமானவரி கணக்கில் காட்டப்பட்டுள்ளதாகவும் என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆக மொத்தம் 2001-2002ம் ஆண்டுகளில் 1,19,72,000/- ரூபாய் சிகா கல்வி அறக்கட்டளைக்கு வருமானம் வந்துள்ளதாகவும் அதிலிருந்து கல்வி நிறுவனங்களுக்கு தேவையான செலவுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், நிகர இருப்பாக 42,94,219/- ரூபாய் கையிருப்பில் இருந்ததாக வருமான வரி கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது என்று மேற்படி சாட்சி யோகலிங்கம், வருமானவரி அலுவலர் என் விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 1 மற்றும் 2 எதிரிகள், வருமான வரி கணக்குப்படி, சிகா கல்வி அறக்கட்டளையின் வருமானத்திற்கு சம்மந்தப்படவில்லை என்று என்னுடைய*

விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த வருமானங்களை என்னுடைய ஸ்டேட்மெண்ட் III ல் காட்டப்படவில்லை என்றால் சரிதான். அதில் வரிசை எண் 13 மற்றும் 14 சிகா மேல்நிலைப்ப பள்ளிக்கு வந்த பள்ளிக் கட்டணம் ரூ.1,10,77,530/- மற்றும் கடனாகப் பெறப்பட்ட தொகை ரூ.40,00,000/- மட்டும் தான் சிகா கல்வி அறக்கட்டளையின் வருமானமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிகா கல்வி அறக்கட்டளைக்கு வந்த கார்ப்பஸ் நிதியும் மற்றும் நன்கொடைகளும் என்னால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆனால் ஸ்டேட்மெண்ட் III-ல் மேற்படி தொகைகள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். ஸ்டேட்மெண்ட் IV-ல் வரிசை எண் 27, 28, 29 மற்றும் 38 ஆகியவற்றில் சிகா கல்வி அறக்கட்டளையின் செலவுகளாக தொகைகள் காட்டப்பட்டுள்ளன என்றால் சரிதான். அந்த செலவு கணக்குகளை வருமான வரி கணக்கில் காட்டப்பட்டுள்ளதின் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சிகா கல்வி அறக்கட்டளைக்கான செலவினங்களை வருமான வரி கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் தான் கணக்கிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் அதே சமயம் வருமானவரி கணக்குகளில் காண்பிக்கப்பட்ட வருமானங்களை நான் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஸ்டேட்மெண்ட் II-ல் வரிசை எண் 47 ல் காண்பிக்கப்பட்ட சொத்து வரிசை எண் 48 - லும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அந்த சொத்தானது 3ம் எதிரியால் கிரயம் பெறப்பட்டு சிகா கல்வி அறக்கட்டளைக்கு தானமாக கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் தான் வரிசை எண்.48ல் சொல்லப்பட்டுள்ளது. எனவே வரிசை 48ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை சிகா கல்வி அறக்கட்டளை நிறுவனத்தின் மொத்த வருமானத்தில் கழிக்கப்படவேண்டியது என்றால் சரிதான். இந்த சிகா கல்வி அறக்கட்டளைக்கு வங்கியில் நிரந்தர வைப்பீடு தொகைகள் இருந்தது என்பதை என் விசாரணையில் தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். ஸ்டேட்மெண்ட் II-ல் வரிசை எண் 37 மற்றும் 38 படி அந்த சொத்தை 5ம் எதிரி நந்தகோபால் கிரயம் பெற்று சிகா கல்வி அறக்கட்டளைக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு தானமாக கொடுக்கப்பட்ட சொத்தின் மதிப்பு வரிசை எண் 39ல்

*காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தொகையும் ஸ்டேட்மெண்ட் II-ல் இருந்து கழிக்கப்படவேண்டும் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் 3ம் எதிரி மற்றும் 5ம் எதிரிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை சிகா கல்வி அறக்கட்டளைக்கு தானமாக கொடுத்துள்ளதாகவும் அதன் காரணமாக சிகா கல்வி அறக்கட்டளையின் ஒரு டிரஸ்டிகளாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று 3 முதல் 5 எதிரிகள் என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.68 கியான்சன் போரா, ஆடிட்டர் அவர்கள் சிகா கல்வி அறக்கட்டளையின் வரவு செலவுகள் குறித்து என் விசாரணையில் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2000-2002ம் ஆண்டு வரையிலான இரு ஆண்டுகளில் மேற்படி அறக்கட்டளையின் வருமானமாக 1,96,69,833/- கிடைத்துள்ளது என்றும் அந்த இரண்டு ஆண்டுகளில் மேற்படி சிகா கல்வி அறக்கட்டளையின் மொத்த செலவாக ரூ.1,40,34,996/- காட்டப்பட்டுள்ளது என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். எனவே வருமான வரி கணக்குப்படி கையிருப்பில் ரூபாய் 56,34,637/- இருந்திருக்கும் என்றால் சரிதான். எனவே* ***சிகா கல்வி அறக்கட்டளை வருமானங்களில் 1 மற்றும் 2 எதிரிகள் நேரடியாக சம்மந்தப்பட்டிருப்பதாக என்னுடைய விசாரணையில் தெரிய வரவில்லை என்றால் சரிதான்.***

30) மேற்படி அ.சா.146 மற்றும் அ.சா.172 ஆகியோரது சாட்சியத்தின்படி, 1ம் எதிரிகள் 2ம் எதிரியின் நிறுவனங்களிலோ 3 முதுல் 5 எதிரிகள் நடத்தி வந்த சிகா கல்வி அறக்கட்டளை வருமானங்களில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளது புலன்விசாரணை அதிகாரியின் விசாரணையில் தெரியவரவில்லை என்று அ.சா.172 தெளிவாக தன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மேற்படி சிகா கல்வி அறக்கட்டளை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் வைப்பீடுகள் 1ம் எதிரியின் தணிக்கை கால வருமானமாக எடுத்துக்கொள்ள முடியாது என்ற எதிரிகள் தரப்பு வாதம் ஏற்புடையதாக உள்ளது.

31) மேலும் 3ம் எதிரி அதாவது 1ம் எதிரியின் மாமியார் மேற்படி சிகா அறக்கட்டளையின் ஒரு நிர்வாகி என்ற நிலையில், 3ம் எதிரி தணிக்கை காலத்திற்கு முன் எவ்வளவு வருமானம் பெற்றிருந்தார் என்ற விவரம் அரசு தரப்பில் கூறப்படவில்லை. சிகா கல்வி அறக்கட்டளையின் டிரஸ்டிகள் 3 முதல் 5 எதிரிகள் இறந்துவிட்ட நிலையிலும் சிகா கல்வி அறக்கட்டளை தரப்பினராக சேர்க்காத நிலையில் 1ம் எதிரியின் வருமானத்தில் இருந்து தான் சிகா கல்வி அறக்கட்டளை சம்பந்தப்பட்ட சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதற்கு எவ்வித வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் இல்லாத நிலையில், இதுகுறித்து புலன்விசாரணை அதிகாரி தெளிவாக தன் சாட்சியத்தில் 1,2 எதிரிகள் நேரடியாக சிகா அறக்கட்டளையுடன் சம்பந்தப்பட்டிருப்பதாக தன் விசாரணையில் தெரியவரவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில் 1ம் எதிரியின் சட்டவிரோத வருமானத்தில் இருந்து தான் சிகா கல்வி அறக்கட்டளை தோற்றுவிக்கப்பட்டது என்ற அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

32) மேலும் இவ்வழக்கில் இறந்துபோன 3ம் எதிரி 1ம் எதிரியின் மாமியார். அவர் குடும்ப தலைவி என்றும் அவருக்கு சொந்தமான வருமானம் இல்லை என்று அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. அ.சா.8 திரு.சாமிநாதன், 3ம் எதிரியின் மகன் ஆவார். மேற்படி அ.சா.3-க்கு சொந்தமான கட்டிடங்களில் குடியிருக்கும் வாடகைதாரர்கள் அ.சா.9 முதல் அ.சா.14 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அதேபோல் மேற்படி கட்டிடத்தை ஆய்வு செய்த ஆய்வாளர் அ.சா.39 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் 3ம் எதிரியின் வீட்டை சோதனை செய்தபோது ரூ.57500/- கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. அ.சா.85 முதல் 86 வரையான

சாட்சிகள், 3ம் எதிரிக்கு சொந்தமான நகைகளை விற்றது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.55, 3ம் எதிரி கிரையம் பெற்ற சொத்துக்கள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

33) அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட 3ம் எதிரியின் மகன் தன் சாட்சியத்தில், தங்களுடைய குடும்பத்திற்கு 110 ஏக்கர் விவசாய நிலங்கள் இருந்ததாகவும், 4 வீடுகள் மற்றும் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.8-ன் வருமான வரிக்கணக்கு அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அ.சா.3-ன் மற்ற மகன்கள் நடராஜன் மற்றும் கனகராஜ் ஆகியோரின் வருமான வரி கணக்கு எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அ.சா.8-ன் சாட்சியத்தின்படி 3ம் எதிரியின் குடும்பத்திற்கு வட்டிவிடும் தொழிலில் வருமானம் வந்ததாகவும் அ.சா.8 சாட்சியம் அளித்துள்ளார். இதுகுறித்து அரசு தரப்பில் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை. அ.சா.8 மேலும் தன் சாட்சியத்தில் தன் தாயார் 3ம் எதிரிக்கு ரொக்கமாக தான் ரூ.18,00,000/- கொடுத்ததாகவும், தன்னுடைய சகோதரர்கள் இருவரும் தலா ரூ.8,50,000/- மற்றும் ரூ.11,50,000/- கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.8 தன் சாட்சியத்தில் குடும்பத்தில் இருந்த 80 சவரன் நகைகளை விற்று ரூ.2,40,000/- பணமும் மறுபடியும் 110 சவரன் நகைகளை வீறு ரூ.3,50,000/- கொடுத்ததாகவும் ஆகமொத்தம் தாங்கள் தம்முடைய தாயாரான 3ம் எதிரிக்கு ரூ.45,90,000/- ரொக்கமாக கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.8 மற்றம் அவரது சகோதரர்கள் 3ம் எதிரிக்கு அளித்த தொகைகள் குறித்து அ.சா.170 தன் சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் அ.சா.170 தன் சாட்சியத்தில் 3ம் எதிரியின் குடும்பத்திற்கு லேவாதேவி தொழில் இருந்தது குறித்தும் ஒப்புக்கொண்டுள்ளார்.

34) மேலும் அரசு தரப்பில் சாட்சிப்பட்டியலில் வருமான வரித்துறை அதிகாரி திரு.பென்சாலியா என்பவர் 3ம் எதிரியின் வருமான வரிக் கணக்குகள் 1997 முதல் 2002 தாக்கல் செய்தது பற்றி விசாரணை செய்யப்போவதாக கூறியிருந்தபோதிலும், அவர் சாட்சியாக விசாரணை செய்யப்படாமல் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும் 3ம் எதிரியின் மற்ற மகன்களும் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை. மேலும் 3ம் எதிரியின் சைதாப்பேட்டை வீடு குறித்து அ.சா.170-ன் குறுக்கு விசாரணை சாட்சியம் பின்வருமாறு அமைந்துள்ளது.

*3-ம் எதிரியின் முகவரி, சென்னை சைதாப்பேட்டை, ஸ்ரீநகர் காலனி, வடக்கு அவன்யூ எண்.13 என்று காட்டப்பட்டுள்ளது.*

*3ம் எதிரி என்னுடைய விசாரணையில் ஆந்திர மாநிலம், மதனப்பள்ளி கிராமத்தில் 110 ஏக்கர் நிலங்கள் 3ம் எதிரியின் குடும்பத்தாருக்கு சொந்தமாக இருந்ததாக என் விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். 3ம் எதிரி 250 சவரன் தனது திருமணத்தின்போது தனக்கு சீதனமாக கொடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.*

*தன்னுடைய கணவர் அவரது பெற்றோருக்கு ஒரே மகன் என்றும் எனவே அவர்களது குடும்ப சொத்துக்கள் அனைத்தும் தன் கணவருக்கு வாரிசு படி கிடைத்து என்றும் அவரது காலத்திறகு பிறகு தனக்கு கிடைத்ததாக என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.*

*எனது விசாரணையில் 3ம் எதிரி விற்றது போக 60 ஏக்கர் நிலம் வைத்துள்ளதாகவும், அது தவிர 400 சவரன் நகை, பாகாலாவில் 10 வீடுகள் மற்றும் 5 லட்ச ரூபாய் ரொக்கப் பணம் இருப்பதாக 3ம் எதிரி என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.*

*இந்த நிலங்கள் மற்றும் மற்ற சொத்துகள் குறித்து 3ம் எதிரியின் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கான ஆவணங்களை நான் பெற்றேன் என்றால் சரிதான். மேலும் 3ம் எதிரி தன் வாக்குமூலத்தில் தனது மாமனார் காலத்திலிருந்து வட்டிக்கு விடுவதன் மூலம் தனக்கு வருமானம் வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.*

*3ம் எதிரி வருமான வரி செலுத்துபவர் என்றாலும் அதற்கான கணக்குகளை தாக்கல் செய்தார் என்றாலும் சரிதான். மேலும் நகைகளின் ஒரு பகுதியை தன்னுடைய மகன சுவாமிநாதன் மூலமாக விற்று காசாக்கிய விவரமும் என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.*

*ஸ்ரீ நகர் காலனியில் வீடு கட்டும்போது ரூ.18,00,000/- இரண்டு தவணைகளாக பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் சுவாமிநாதனின் வருமான வரி கணக்கில் 13,50,000/- ரூபாய் தான் தனது தாயாருக்கு கொடுத்ததாக காட்டப்பட்டுள்ளது. மற்ற மகன்களான நடராஜன் மற்றும் கனகராஜன் ஆகியோர் இருவரும் சேர்ந்து தனது தாயாருக்கு வீடு கட்டுவதற்காக ரூ.20,00,000/- கொடுத்ததாக என் விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்,.*

35) மேலும் மேற்படி நடராஜன் மற்றும் கனகராஜன் ஆகியோரது வருமான வரி கணக்குகள் அரசு தரப்பின் குறுக்கு விசாரணையின்போது எ.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தன் குறுக்கு விசாரணையில்,

*3ம் எதிரி அவருக்கு சொந்தமான நகைகளை விற்ற வகையிலும் அவருக்கு வருமானம் வந்ததாக என் விசாரணையில் தெரியவந்தது. ஆகையால் 3ம் எதிரி சரஸ்வதிக்கு தனிப்பட்ட முறையில் வருமான இருந்த வந்தது என்றால் சரிதான்.*

36) 3ம் எதிரியின் வருமானம் குறித்து தகுந்த சாட்சியங்கள் விசாரணை செய்யாத நிலையிலும், இவ்வழக்கை பதிவு செய்து புலன்விசாரணை செய்த அதிகாரியான அ.சா.172 தெளிவாக 3ம் எதிரிக்கு தனிப்பட்ட வருமானம் உள்ளதாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அ.சா.172-ன் குறுக்கு விசாரணை சங்கதிகள் 1ம் எதிரி தான் 3ம் எதிரிக்கு பொருளதவிகள் செய்து சொத்துக்கள் 3ம் எதிரி பெயரில் பினாமியாக வாங்கப்பட்டது என்ற அரசு தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை.

37) ஏற்கனவே 3ம் எதிரி இறந்துவிட்ட நிலையிலும், அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுவிட்டதாக உத்திரவிடப்பட்டுள்ள சூழ்நிலையில் அவர் வருமான வரி செலுத்துபவர் என்றும் இதுகுறித்து எதிரிகள் தரப்பில் வருமான வரி கணக்குகள் பொது ஆவணங்கள் என்றும் அவற்றை ஆவணமாக பெறுவதில் எவ்வித தடையுமில்லை, வருமான வரித்துறை அதிகாரியின் முடிவு நீதிமன்ற தீர்ப்புக்கு சமமானது என்றும் அதன் அடிப்படையில் வழக்குகள் தீர்மானம் செய்யப்படலாம் என்று வாதிட்டு அதற்கு ஆதவராக 2012-2-LW (Crl) P.39 என்ற தீர்ப்புரை எடுத்துக்காட்டப்பட்டது. மேற்படி முன்தீர்ப்பில்

There was no disproportionate assets at the hands of the Appellant at the end of the check period – Income from known sources would exceed the value for the alleged disproportionate assets. Para 22 copies of public documents could be received in evidence without their being marked for proof of the same. Para 13 Additional evidence can be received in evidence, since they are public documents which need no formal proof of marking – They do not appear to have been filed to fill up the lacuna – Finding of the Income Tax authority is a Judicial finding and to sub-serve the ends of justice they have to be received in evidence – There is no legal embargo for receiving the proceedings of the income tax authorities as additional evidence.

38) மேலும் 1998-99, 1999-2000, 2000-2001, 2001-2002 மற்றும் 2002-2003 ஆகிய ஆண்டுகளின் வருமான வரிக்கணக்குகளின் 3ம் எதிரியின் மொத்த வருமானம் பின்வருமாறு காண்பிக்கப்பட்டுள்ளது.,

| | | |
|---|---|---|
| 1997 - 1998 | = | Rs. NIL |
| 1998 - 1999 | = | Rs. 8,15,391.00 |
| 1999 - 2000 | = | Rs. 4,61,933.00 |
| 2000 - 2001 | = | Rs.18,53,237.00 |
| 2001 - 2002 | = | Rs.36,68,108.00 |
| 2002 - 2003 | = | Rs. 2,60,769.00 |
| **Total** | **=** | **Rs.70,59,438.00** |

இந்நிலையில் கற்றறிந்த 1ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையின்போது பட்டியல் 4-ன்படி 3ம் எதிரியின் செலவினங்கள் ரூ.61,932/- என்றும், ஆனால் அவருடைய சேமிப்பு (வருமானம் மற்றும் செலவுகள் கழித்து) ரூ.69,97,506/- என்றும், சொத்துக்கள் மதிப்பு ரூ.43,71,336/- என்றும், எனவே மீதி தொகை ரூ.26,26,170/- என்றும் எனவே 3ம் எதிரியை பொறுத்து மிகை வருமானம் உள்ளது என்றும் மேற்படி கணக்கீடுகளில் இருந்தே 1ம் எதிரி 3ம் எதிரிக்கு தொகை அளித்தார் என்றும் எனவே 3ம் எதிரி 1ம் எதிரியின் பினாமியாக செயல்பட்டார் என்ற அரசு தரப்பு வாதம் பொய்யானது என்றும் அது சட்டப்படி நிரூபிக்கப்படவில்லை என்ற எதிரிகள் தரப்பு கட்சி ஏற்புடையதாகவே உள்ளது.

39) மேலும் சிகா கல்வி அறக்கட்டளை வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்படாத நிலையில் சிகா கல்வி அறக்கட்டளைக்கு பல்வேறு நன்கொடைகள் வந்துள்ளது என்றும் அவைகளை அரசு தரப்பில் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. இதுகுறித்து அ.சா.172 தன் குறுக்கு விசாரணையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*ஆனால் சிகா கல்வி அறக்கட்டளையை ஒரு எதிரியாக குற்றப்பத்திரிக்கையில் நான் காட்டவில்லை என்றால் சரிதான். 3 முதல் 5*

எதிரிகள் குற்றப்பத்திரிக்கையில் தனிப்பட்ட நபர்களாக தான் காண்பிக்கப்பட்டுள்ளார்கள்.

3 முதல் 5 வரை உள்ள எதிரிகள் டிரஸ்டிகள் என்ற அடிப்படையில் சிகா கல்வி அறக்கட்டளையிலிருந்து வரும் வருமானங்களையோ நன்மைகளையோ அடைய முடியாது என்றால் சரிதான். 3 முதல் 5 டிரஸ்டிகள் உள்ளிட்ட 1 முதல் 5 எதிரிகள் யாரும் சிகா கல்வி அறக்கட்டளையிலிருந்து எவ்வித பலன்களுகம் பெறவில்லை என்றால் சரிதான்.

சிகா கல்வி அறக்கட்டளைக்கு நிறைய நன்கொடையாளர்கள் நன்கொடை அளித்துள்ளார்கள் என்ற விவரம் எனது விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான்.

1200 க்கும் மேற்பட்ட நன்கொடையாளர்கள் மூலமாக சுமார் ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமாக நன்கொடை பெறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் அதில் 135 நன்கொடையாளர்களை விசாரித்துள்ளதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான்.

11 நபர்கள் தமிழக அரசால் நிர்வகிக்கப்படும் விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பணியாளர்கள் என்றால் சரிதான். அவர்களை நான் எனது பதவியைப் பயன்படுத்தி கட்டாயப்படுத்தி வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஸ்டேட்மெண்ட் III ல் சிகா கல்வி அறக்கட்டளைக்கு வந்த வருமானத்தில் நன்கொடை வந்த விவரத்தை காட்டவில்லை என்றால சரிதான்.

நான் விசாரித்த 135 நன்கொடையாளர்களின் 17 சாட்சிகள் மட்டுமே தாங்கள் கொடுத்த நன்கொடைகளை திரும்ப பெற்றுக்கொண்டதாக வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். மற்ற மீதம் உள்ள 118

*நன்கொடையாளர்கள் தாங்கள் சிகா கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை கொடுத்த விவரத்தை ஒப்புக்கொண்டார்கள் என்றால் சரிதான்.*

40) மேலும், அ.சா.172 தன் குறுக்கு விசாரணையில் சிகா கல்வி அறக்கட்டளைக்கு மிகை வருமானம் இருப்பதாக வருமான வரி கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது என்பது சரிதான் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

*"நிகர இருப்பாக 42,94,219/- ரூபாய் கையிருப்பில் இருந்ததாக வருமான வரி கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது என்று மேற்படி சாட்சி யோகலிங்கம், வருமான வரி அலுவலர் என் விசாரணையில் குறிப்பிட்டள்ளார் என்றால் சரிதான்.*

41) மேலும் மேற்படி நன்கொடை வருமானங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்பது குறித்து

*இந்த வருமானங்களை என்னுடைய ஸ்டேட்மெண்ட்-III ல் காட்டப்படவில்லை என்றால் சரிதான்.*

என்றும் வருமான வரிக்கணக்குகளில் அனைத்தையும் வருமானமாக எடுத்துக்கொள்ளவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

*சிகா கல்வி அறக்கட்டளைக்கான செலவினங்களை வருமான வரி கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் தான் கணக்கிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் அதே சமயம் வருமான வரி கணக்குகளில் காண்பிக்கப்பட்ட வருமானங்களை நான் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.*

*என்னுடைய விசாரணையில் 3ம் எதிரி மற்றும் 5ம் எதிரிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட சிகா கல்வி அறக்கட்டளைக்கு தானமாக கொடுத்துள்ளதாகவும் அதன் காரணமாக சிகா கல்வி அறக்கட்டளையின் ஒரு டிரஸ்டிகளாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று 3 முதல் 5 எதிரிகள் என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.*

*2000-2002ம் ஆண்டு வரையிலான இரு ஆண்டுகளில் மேற்படி அறக்கட்டளையின் வருமானமாக 1,96,69,833/- கிடைத்துள்ளது என்றும் அந்த இரண்டு ஆண்டுகளில் மேற்படி சிகா கல்வி அறக்கட்டளையின் மொத்த செலவாக ரூ.1,40,34,996/- காட்டப்பட்டுள்ளது என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். எனவே வருமான வரி கணக்குப்படி கையிருப்பில் ரூபாய் 56,34,637/- இருந்திருக்கும் என்றால் சரிதான்.*

மேலும் தன் குறுக்கு விசாரணையில்,

*1 மற்றும் 2 எதிரிகள் வருமான வரி கணக்குப்படி, சிகா கல்வி அறக்கட்டளையின் வருமானத்திற்கு சம்மந்தப்படவில்லை என்று என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனவே சிகா கல்வி அறக்கட்டளை வருமானங்களில் 1 மற்றும் 2 எதிரிகள் நேரடியாக சம்மந்தப்பட்டிருப்பதாக என்னுடைய விசாரணையில் தெரிய வரவில்லை என்றால் சரிதான்.*

மேலும் அ.சா.169 ஆக விசாரிக்கப்பட்ட மற்றொரு புலன்விசாரணை அதிகாரி தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

*என்னுடைய விசாரணையில் சிகா கல்வி அறக்கட்டளைக்கும் முதல் எதிரிக்கு எந்த வகையிலும் தொடர்பு இருப்பதாக ஆவணங்கள் ஏதும் எனது விசாரணையில் எனது கவனத்திற்கு தெரியவரவில்லை என்றால் சரிதான்..*

42) மேலும் இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 1ம் எதிரிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. ஆனால் அவரது மனைவியான 2ம் எதிரியிடம் அல்லது 3 முதல் 5 எதிரிகளிடம் விளக்கம் கேட்கும் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. 2ம் எதிரி மற்றும் 3ம் எதிரி மீது முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 1,2 எதிரிகளின் மகன்கள் மீதும் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் 1,2 எதிரிகளின் மகன்களிடமோ, 2 முதல் 5 எதிரிகளிடமோ எவ்வித விளக்கமும் புலன்விசாரணை அதிகாரியால் கோரப்படவில்லை. 1ம் எதிரிக்கு அளிக்கப்பட்ட இறுதி அறிவிப்பிற்கு 1ம் எதிரி தரப்பில் உரிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து புலன்விசாரணை அதிகாரி தன் குறுக்கு விசாரணையில்,

> *1ம் எதிரி திரு.கே.பொன்முடி 10.10.2003 ம் தேதியிட்ட கடிதத்தை அவருடைய பதில் அனுப்பி உள்ளார். 1ம் எதிரி அனுப்பிய விளக்கங்களுடன் கூடிய பதில் கடிதம் அ.சா.ஆ.556ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. அதில் அவர் 4ம் எதிரி சிகா கல்வி அறக்கட்டளை சேர்மேன் மற்றும் 5ம் எதிரி திரு.நந்தகோபால் , டிரஸ்டி, அவருடைய பினாமி இல்லை என்றும் 2ம் எதிரி அவருடைய மனைவி திருமதி.விசாலாட்சி ஒரு (Independent Tax Assessee) என்றும் அவருக்கு தனிநபர் வருமானம் உள்ளதாகவும், அவருடைய சொத்துக்களில் 1ம் எதிரிக்கு எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் 3ம் எதிரி அவருடைய மாமியார் திருமதி.சரஸ்வதி Independent Tax Assessee என்றும் தனியாக வருமானவரி செலுத்துபவர் (Independent Tax Assessee) என்றும் அவருடைய சொத்துக்களுக்கும் முதல் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும் முதல் எதிரியுடைய சொத்துக்கள் அவருடைய வருமானத்திற்கு பொருந்தும் என்றும் பதில் அளித்துள்ளார்.*

43) மேற்படி விளக்கத்தில் 1ம் எதிரி தனக்கும் தன் மனைவி நடத்தி வரும் நிறுவனங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அதேபோல் 3ம் எதிரி நடத்தி வரும் சிகா கல்வி அறக்கட்டளைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் மறுத்துள்ளார். இதனையடுத்து மேற்படி நபர்களிடம் எவ்வித விளக்கமும் கேட்காமல், 1,2 எதிரிகளின் மகன்களை நீக்கியும் 4,5 எதிரிகளை புதிததாக சேர்த்தும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளார். இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட நபர்களிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது. ஆனால் உரிய வாய்ப்பு அளிக்காமல் அவர்களிடம் எவ்வித விளக்கமும் கேட்காமல் அவர்களிடமிருந்து பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே 2 முதல் 5 எதிரிகள் அனைவருமே வருமான வரி செலுத்தும் தனிப்பட்ட வருமானம் உள்ளவர்கள் என்ற நிலையில் அவர்ளுக்கு உரிய விளக்கம் கேட்கும் அறிவிப்பு அனுப்பாமல் 1ம் எதிரியின் மனைவி 2ம் எதிரிக்கும் 3 முதல் 5 எதிரிகளுக்கும் எதிராக இறுதி அறிக்கை தாக்கல் ஒருதலைப்பட்சமான விசாரணை என்ற 2ம் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாகவே உள்ளது.

44) மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் குறுக்கு விசாரணை சங்கதிகள் மற்றும் ஆவணங்கள் முன்னிலைக்கு மேலே விவாதிக்கப்பட்ட முன்தீர்ப்பு முடிவுகளின் அடிப்படையிலும், 1ம் எதிரி தரப்பில் வாதிடப்படுவது போல் 1ம் எதிரியின் மகன்களின் தனி நபர் வருமானம் சேர்க்கப்படாமல் அவர்களின் வியாபார பரிவர்த்தனைகள் சேர்க்கப்படாமல் தாக்கல் செய்த கணக்குப்பட்டியல் தவறானது என்பதும் 3 முதல் 5 எதிரிகள் 1ம் எதிரியின் பினாமியாக செயல்பட்டு வருகிறார்கள் என்பதும் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதும் இறந்த 3 முதல் 5 எதிரிகள் தனி வருமானம் உள்ளவர்கள் என்றும் 3 முதல் 5 எதிரிகள் வாங்கிய

சொத்துக்களுக்கும் 1ம் எதிரிக்கும் தொடர்பு இல்லை என்ற எதிரிகள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிரி தரப்பில் வாதிடப்படுவது போல் சிகா கல்வி அறக்கட்டளை சொத்துக்களுக்கும் 1ம் எதிரிக்கும் உள்ள தொடர்பில்லை என்பதும் அறக்கட்டளையை தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறானது என்பது சரியானது என்றும் 1ம் எதிரி பொது ஊழியர் என்ற வகையில் தனது அதிகார வரம்பை மீறி அட்டவணை பட்டியல் 2-ல் கண்டுள்ளபடி 2 முதல் 5 எதிரிகளின் பெயரில் வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்துள்ளார் என்ற குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் முன்னிலைக்கு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

45) மேலும் சிகா கல்வி அறக்கட்டளை ஒரு தரப்பினராக சேர்க்காமல் அதன் நிறுவனர், உறுப்பினர்களை மட்டும் தனிப்பட்ட முறையில் சேர்த்திருப்பதாலும் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று 1,2 எதிரிகள் தரப்பில் வாதிட்டு மேற்படி தங்கள் வாதத்திற்கு ஆதரவாக பின்வரும் மாண்பமை உச்சநீதிமன்ற முன்தீர் முடிவு தாக்கல் செய்யப்பட்டது.

**(2016) 1 Supreme Court Cases (Cri) 159**
**(2015) 12 Supreme Court Cases 781**

Sharad Kumar Sanghi // Versus // Sangita Rane

*Criminal Procedure Code, 1973 – Ss. 190(1)(a), 200, 202, 204 and 482 – Offence by Company – Initiation of Criminal proceedings against Managing Director or any Officer of Company – Pre requisites for – Where Company had not been arrayed as a party to the complaint, held, criminal proceedings initiated against Managing Director were not maintainable – More so where there was no specific allegation against him and even the allegations made were of vague nature – Penal Code, 1860, S.420.*

**2020(0) Supeme (AP) 319**
**Proddaturi Shobha and others // Versus // Sangita Rane,**

*Para 19 -- In N. Elangovan's case (Suprea) High Court of Madras held that*

*36. To put it precisely, without filing a complaint against the partnership firm, filing a complainant against the respondent / accused in his individual capacity is per se not maintainable in the eye of law, as opined by this Court.*

மேற்படி எதிரிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டள்ள மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிமன்ற தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சங்கதிகளும் பொருண்மைகளும் இவ்வழக்கின் சங்கதிகளுக்கும் பொருண்மைகளுக்கும் மிக்க பொருந்துவதாகவே உள்ளது.

**<u>46) வினா 5 :-</u>**

இவ்வழக்கில் 1,2 எதிரிகள் தரப்பில் இறந்து போன 3 முதுல் 5 எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே அற்றுப்போய்விட்டதாக நீதிமன்றம் தீர்மானித்து விட்ட நிலையில், 3 முதல் 5 எதிரிகளின் சொத்துக்கள் குறித்து 1,2 எதிரிகள் தற்போது விளக்கம் அளிக்கவேண்டிய சூழல் எழவில்லை என்று வாதிடப்பட்டது. மேலும் தங்களது வாதத்திற்கு ஆதரவாக மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பு

U. Suhadamma and others /v/ State of A.P. Rep;, by Public Prosecutor and another, 2016(3) SCC (Crl) 236

சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி முன்தீர்ப்பில், மாண்பமை உச்சநீதிமன்றம் பின்வருமாறு உத்தரவிட்டுள்ளது.

*If the law requires that the orders of attachment should be withdrawn upon acquittal it stands to reason that such orders must be withdrawn when the prosecution abates or cannot result in a conviction due to the death of the accused, whose property is attached. Concept of abatement of a trial could be subsumed in the clause where the final Judgment and Order of the Criminal Court is one of acquittal. In this context, the presumption of innocence of an Accused till he is convicted must be borne in mind and there is no reason to consider this presumption to have vaporized upon the death of an Accused. It may be noted that this Court has time and against reiterated the presumption of innocence of an Accused till he is convicted, (1955) 2 SCR 1140 at page 1195, (1963) 3 SCR 749 at page 766, (2002) 7 SCC 317 at para 8, (2005 5 SCC 294 at para 35, (2015) 3 SCC 724 at paras 12 and 17.*

*A fortiori a criminal court cannot continue proceedings against a dead person and find him guilty. Such proceedings and the findings are contrary to the very foundation of criminal jurisprudence. In such a case the Accused does not exist and cannot be convicted. Consequently, the learned District Judge committed a gross error of law in acting upon such a finding and treating Ramachandraiah as guilty of such offences while making the order of attachment and while confirming the said order of attachment of properties.*

47) மேற்படி முன்தீர்ப்பில் கண்டுள்ள வழக்கில் 1,2 எதிரிகளில் 2ம் எதிரி விடுதலை செய்யப்பட்டு, இறந்துபோன 1ம் எதிரி குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு, அவரது சொத்துக்கள் குறித்து மேல்நடவடிக்கை எடுக்க மாவட்ட நீதிமன்றத்தால்

உத்திரவிடப்பட்டுள்ளது.  அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேற்படியானவாறு கருத்துரைகளை கூறியும் ஒரு நபர் இறந்துவிட்டால் அவரை பொறுத்து குற்றவியல் நடவடிக்கைகளை தொடர முடியாது என்றும் இறந்த நபரை குற்றம் சாட்டி அவரை பொறுப்பாக்கி அவரது சொத்துக்களின் மேல் நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டுள்ளது தவறானது என்று கூறி மேற்படி மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்துள்ளது. மேற்படி தீர்ப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம்,

> "*There is no legal provision which enables continuance of prosecution upon the death of the accused.  We must record that the proceedings and decisions of the Court below are disturbing, to say the least.  In the first place, though the accused had died, the trial court proceeded with the trial and recorded with a conviction two years after his death.  Then, this null and void conviction was used as a basis for making an attachment of his properties before the Sessions Court.  Astonishingly, all applications succeeded, the attachment was made and voer and above all, the High Court upheld the attachment.*
>
> *The orders of the Criminal Court vis-a-vis Ramachandriah are illegal and liable to be set aisde. We also find that the impugned Judgment in appeal is unsustainable and is liable to be set aside.*"

***2014-O- Supreme (Ori) 81,***
***Smt.Birajini Panda and others /versus/ State of Orissa (Vigilance)***

*If there is no possibility of recording any conviction as in the case of death of the person affected and abatement of the criminal trial against him, a confiscation cannot be made as there is no possibility of the person affected being convicted for the offence under the P.C. Act - If the person affected or the accused in the criminal trial dies and the case abates against him, then the confiscation proceeding cannot proceed against the other persons in whose name he allegedly held property or money which he amassed by means of the offence.*

*48)* எனவே, மேலே கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் இவ்வழக்கினை பரிசீலணை செய்யும்போது, இவ்வழக்கின் 3 மற்றும் 5 எதிரிகளுக்கு எதிராக குற்றசாட்டுக்கள் வனைவதற்கு முன்பாகவே இறந்துவிட்டுள்ளார்கள். 4ம் எதிரி குற்றச்சாட்டு வனைந்த பின்னர் விசாரணை நிலுவையில் இருந்தபோது இறந்துள்ளார். மேலும் மேற்படி இறந்த நபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய்விட்ட நிலையில், மேலும் அவர்களிடம் சொத்துக்கள் குறித்து அறிவிப்பு கொடுக்கப்பட்டு விளக்கம் பெறாத சூழிலையில் அவர்கள் குறித்து எடுத்துரைப்பு எதுவும் இல்லாத நிலையில், 1,2 எதிரிகள் தரப்பில் வாதிடப்படுவது போல் இறந்த 3 முதல் 5 நபர்களின் பெயரில் உள்ள சொத்துக்கள் மீதான நடவடிக்கை கைவிடப்படவேண்டும் என்ற 1,2 எதிரிகிள் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது என்றே வினா 4-க்கு விடை அளிக்கப்படுகிறது.

49) வினா 6 மற்றும் 7:.-

மேலே சொன்ன சூழ்நிலையில் 3 முதல் 5 எதிரிகள் ஏற்கனவே இறந்துவிட்ட சூழ்நிலையில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போனதாகவும் அவர்கள பெயரில் உள்ள சொத்துக்கள் மீது நடவடிக்கை கைவிடப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள சூழ்நிலையிலும், மேலும் 2ம் எதிரி சுய வருமானம் உள்ளவர் என்பதும் தனிப்பட்ட முறையில் வருமான வரி செலுத்துபவர் அவர் என்றும் அவர் 1ம் எதிரியின் பினாமியாக செயல்பட்டார் என்று அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்படாத நிலையில், அரசு தரப்பில் 1ம் எதிரி பொது ஊழியர் என்ற வகையில் தனது அதிகார வரம்பை மீறி அட்டவணை பட்டியல் 7-ல் கண்டுள்ளபடி வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்துள்ளார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராயவேண்டி உள்ளது. மாறாக 1ம் எதிரி தரப்பில் தணிக்கை காலத்திற்கு முந்தைய வருமானம் அரசு தரப்பில் தவறாக அட்டவணை பட்டியல் 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது என்று வாதிடப்பட்டுள்ளது.

*50)* இவ்வழக்கின் அ.சா.1 - 1ம் எதிரி மீதான வழக்கு தொடர்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 முதல் 7, 15 மற்ம் 20 ஆகிய சாட்சிகள் 1ம் எதிரியின் பெற்றோர்கள் வருமானம் மற்றும் சொத்துக்கள் குறித்து சாட்சியமிளத்துள்ளனர். அ.சா.18 மற்றும் 64 ஆகியோர் 1ம் எதிரிக்கு அரசு வழங்கிய சம்பளம் குறித்து சாட்சியம் அளித்துளார்கள். அ.சா.5 வருமான வரி அதிகாரி 1ம் எதிரியின் வருமான வரி அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் 1ம் எதிரியின் வருமான வரி ஆவணங்கள் அ.சா.ஆ.105 முதல் 109 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.ச.68, 1,2 எதிரிகளின் ஆடிட்டர் ஆவார். அவர் மூலம் அ.சா.ஆ.141 முதல் 145 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.130, 131 மற்றும் 140 ஆகிய சாட்சிகள் 1ம்

எதிரியின் மகன்கள் கல்லூரி கட்டணங்கள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.144, தேர்தல் அதிகாரி, 1ம் எதரியின் தேர்தல் செலவுகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

51) மேற்படி வருமானத்திற்கு அதிகமான சொத்து பொது ஊழியர் சேர்த்துள்ளார் என்பது குறித்து தீர்மானிக்க சில சாராம்சங்களை மாண்புமிகு உச்சநீதிமன்றம் பின்வரும் முன்தீர்ப்பில் கூறியுள்ளது.

**AIR 1993 Supreme Court 313, Krishna Reddy *v* Dy. Superintendent of Police, Hyderabad.**

*Section 13(1)(e) of the new Act of 1988 shows that it is not the mere acquisiton of property that consitutes an offence under the Provisions of the Act but it is the failure to satisfactorily account for such possession that makes the possessiion objectionable as offending the law.*

*To substantiate a charge under S.5(1)(e) of the Act, the prosecution must prove the following ingredients, namely, (1) the prosecution must establish that the accused is a public servant, (20 the nature and extent of the pecuniary resources or property which were found in his possession, (3) it must be proved as to what were his known sources of income, i.e., known to the prosecution, and (4) it must prove, quite objectively, the such resources or property found in possession of the accused were disproportionate to his known sources of income. Once the above ingredients are satisfactorily established, the offence of criminal misconduct under Section 5(1)(e) is complete, unless the accused is able to account for such resources or properly. In other words, only after the prosecution has proved the required ingredients, the burden of satisfactorily accounting for the possession of such resources or property shifts to the accused.*

52) இவ்வழக்கின் 1,2 எதிரிகள் தரப்பில், 1ம் எதிரி பொது ஊழியர் என்ற நிலையில், அவர் வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்கள் சேர்த்தார் என்று அரசு தரப்பில் புலன்விசாரணை அதிகாரி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் முன்னிலைக்கு நிரூபணம் செய்யவேண்டும் என்றும் அந்த பொறுப்பு அரசு தரப்பை சார்ந்தது என்றும் அவ்வாறு அரசு தரப்பில் நிரூபிக்க புலன்விசாரணை அதிகாரி செய்ய தவறும்பட்சத்தில் அந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என வாதிடப்பட்டு அதுகுறித்து பின்வரும் தீர்முடிவு தாக்கல் செய்யப்பட்டது. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தன் தீர்ப்பில் கூறியுள்ளது.

**(2006) 0 Supreme (Mad) 2412 2007 1 MLJ (Cri) 86 , G. Malliga // Versus // State, rep. by the Deputy. Superintendent of Police**

*In a case of this nature, where allegations are made against the public servant that he had assets disproportionate to the known sources of his income, the duty of the Investigating Officer is as follows:-*

*(i) The Investigating Officer should assess the value of the assets of the public servant immediately prior to the check period with relevance to the tax Returns of the concerned person and also loans and other incomes available to the person and also about the liability of the person prior to the check period.*

*(ii) The actual income during the check period and the expenditure actually incurred by the public servant should be calculated without any inflation and on a reasonable basis.*

*(iii) The total income during the check period and assets prior to the check period must be taken together as the total assets of the public servant from which the actual expenditure and amounts saved either by cash or by properties must be deducted from the total amount and see whether there is*

*much disproportion to the known sources of income of the public servant and the assets on his hand. While making the calculation regarding the value of the properties and expenditure a reasonable margin has to be given this way or that way to find out the truth. Such kind of procedure to be adopted only by an unbiased Investigating Officer. There should be no suppression of income or under estimation of the income of the accused or inflation of the expenditure or inflation of the assets of the accused.*

*(iv) The Investigating Officer should not suppress any of the income, by way of loan or gift while considering the income of the public servant.*

*(v) Similarly after finding out that there is any disproportionate wealth in the hands of the public servant beyond his known sources of income, the Accused must be given an opportunity to explain the same. Failure to given an opportunity to the Accused to explain the same is fatal to the prosecution.*

53) மேற்படி உச்ச நீதிமன்றத்தின் முன்தீர்ப்பின்படி, அரசு தரப்பில் வருமானத்திற்கு அதிகமாக ஒரு பொது ஊழியர் சொத்து சேர்த்துள்ளார் என்று நிரூபிக்கப்படும் பட்த்தில் அதுகுறித்து சொத்துக்களுக்கு முறையான கணக்கு காண்பித்து விளக்கம் அளிக்கவேண்டியது எதிரியின் பொறுப்பை சார்ந்தது என்று கூறப்பட்டுள்ளது. மேலும் புலன்விசாரணை அதிகாரி எதிரிக்கு கிடைக்கும் எந்தவிதமான வருமானத்தையும் அதாவது பரிசு பொருட்கள், கடன்கள் போன்ற சொத்துக்கள் பற்றி கணக்கிடும்போது மறைக்கக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கை பொறுத்தமட்டில் தணிக்கை காலத்திற்கு முந்தைய 1ம் எதிரியின் சொத்துக்கள் மதிப்பு அட்டவணை பட்டியல் 1-ன்படி தொடக்கத்தில் 13.05.1996 அன்று முதல் எதிரி திரு.கே.பொன்முடி தனது பெயரிலும்

தனது மனைவி 2ம் எதிரி விசாலாட்சி பெயரிலும் ரூ.18,10,644.50 அளவுக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் 1ம் எதிரி கடந்த 06.01.1972 முதல் 21.12.1988 வரை பேராசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறித்து அரசு தரப்பில் மறுக்கப்படவில்லை. அவரது ஊதியம் குறித்து சாட்சியம் அளித்த திரு.மனோகர், விழுப்புரம் அரசு கல்லூரி விரிவுரையாளர் அ.சா.5 திரு.மனோகர் தனது குறுக்கு விசாரணையில் தான் அளித்த சான்றிதழ் 1ம் எதிரியின் பணிப்பதிவேட்டை பார்த்து அளிக்கவில்லை என்றும் கல்லூரியில் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றும் அவரது ஓய்வூதிய பலன்கள் குறித்து எதுவும் கூறவில்லை என்றும் பல்கலைகழக மாணியம், பிழைப்பூதியம், கடன் பெற்ற விவரங்கள் எதுவும் தான் குறிப்பிடவில்லை என்றும் கல்லூரியின் நிதியாளர் வழங்கிய ஊதிய விபரங்கள் கொண்ட பட்டியலை சரிபார்த்து அது சரியாக உள்ளது என சான்றொப்பமிட்டு வழங்கியதாக குறிப்பிட்டுள்ளது அ.சா.5 -ன் சாட்சியத்தின் உண்மைதன்மையை கேள்விக்குரியதாக ஆக்குவதாகவே உள்ளது.

54) மேலும் 1ம் எதிரியின் விவசாய வருமானம் குறித்து அரசு தரப்பில் "1996-1997 லிருந்து 2001-2002 வரையிலான 1ம் எதிரிக்கு விவசாய நிலங்களிலிருந்து கிடைத்த வருமானம் ரூ249510/-" என அ.சா.172 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.68 திரு.கியான்சந்த போத்ரா தன் சாட்சியத்தில் 1ம் எதிரியின் சம்பளம் மற்றும் விவசாய வருமானம் குறித்து சாட்சியம் அளிக்கும்போது 5 வருடங்களுக்கான வருமான வரிக்கணக்கு மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் 1997-1998 ம் ஆண்டிற்கான விவசாய வருமானம் மற்றும் சம்பள வருமானம் கணக்கில் கொள்ளப்படவில்லை என்றும் கூறியுள்ளார். அ.சா.68 சாட்சியத்தின்படி 1ம் எதிரியின் சம்பளம் ரூ.652226/- என்பதும் விவசாய வருமானம் ரூ.595000/.

என்பதும் அ.சா.ஆ,141 முதல் அ.சா.ஆ.145 வரையான ஆவணங்கள் முன்னிலைக்கு தெரியவருகிறது. அதன் விவரம்

| Assessment Year | | Salary | | Agricultural Income |
|---|---|---|---|---|
| 1998 – 1999 | - | Rs.1,28,758/- | - | Rs.1,25,000/- vide Ex.P105-P141 |
| 1999 – 2000 | - | Rs.1,27,500/- | - | Rs.1,25,000/- vide Ex.P106-P142 |
| 2000 – 2001 | - | Rs.1,30,500/- | - | Rs.1,20,000/- vide Ex.P107-P143 |
| 2001 – 2002 | - | Rs.1,30,500/- | - | Rs.1,00,000/- vide Ex.P108-P144 |
| 2002 – 2003 | - | Rs.1,34,968/- | - | Rs.1,25,000/- vide Ex.P109-P145 |
| **Total** | **-** | **Rs.6,52,226/-** | **-** | **Rs.5,95,000/-** |

**So the total income as per Income Tax return is Rs.6,52,226 + Rs.5,95,000 = Rs.12,47,226/-.**

55) மேலும் அ.சா.169-ன் சாட்சியத்தின்படி 1ம் எதிரிக்கு 5.55 ஏக்கர் நிலங்கள் உள்ளது என்பதும் அதிலிருந்து விவசாய வருமானம் வருவதும் மேற்படி விவசாய நிலங்களை நடனசிகாமணி என்பவர் பயிர் செய்து வருவதாகவும் கூறப்பட்ட நிலையில் மேற்படி நடனசிகாமணி என்பவர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. இதுகுறித்து அ.சா.169 தன் குறுக்கு விசாரணையில்

> *"மேற்படி நிலத்தின் பாசன வசதி எத்தனை போகங்கள் பயிரிடலாம் மண்ணின் தன்மை ஆகிய குறித்து நான் குறிப்பாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அந்த நிலங்கள் மண் வளம் மற்றும் பாசன வசதி நிறைந்த மூன்று போகம் விவசாயம் நடக்கும் நிலங்கள்தான் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த நிலங்களை சாகுபடி செய்து வருவது நடனசிகாமணி என்று தெரிந்திருந்தும் அந்த நிலங்களில் இருந்து கிடைத்த வருமானங்களை பற்றி அவரை நான் விசாரிக்காததற்கு தனிப்பட்ட காரணம் உண்டா என்றால் இல்லை. "*

56) மேலும் எதிரி தரப்பில் 1ம் எதிரியின் நிலத்தில் கரும்பு பயிரிடப்பட்ட நிலையில் அதுகுறித்து வருமானம் பட்டியலில் காண்பிக்கப்படவில்லை என்றும் வாதிடப்பட்டது. இதுகுறித்து அ.சா.172 தன் குறுக்கு விசாரணையில்,

*ஆனால் கரும்பு பயிரிட்டத்திலிருந்த வந்த வருமானம் 1-வது எதிரியின் வருமானத்தில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.*

57) மேலும் அ.சா.137 வாசுதேவன் என்பவர் விசாரிக்கப்பட்டு, அவர் 1ம் எதிரியின் நிலத்தில் கரும்பு பயிர் செய்யப்பட்டு அதன் மூலம் வந்த வருமானம் ரூ.3,99,884/- என்று கூறியுள்ளார். அவர் கொடுத்த அறிக்கை அ.த.சா.ஆ.372, 373 மற்றும் 373 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வருமானத்தை அரசு தரப்பு பட்டியலில் இணைக்கப்படவில்லை.

மேலும் அ.சா.169 தன் குறுக்கு விசாரணையில்,

*மேற்படி நிலத்தின் பாசன வசதி எத்தனை போகங்கள் பயிரிடலாம் மண்ணின் தன்மை ஆகியவை குறித்து நான் குறிப்பாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அந்த நிலங்கள் மண் வளம் மற்றும் பாசன வசதி நிறைந்த வருடத்திற்கு மூன்று போகம் விவசாயம் நடக்கும் நிலங்கள்தான் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.*

*மேற்படி நடனசிகாமணி 1ம் எதிரியின் சகோதரர். 1ம் எதிரிக்கு சொந்தமான விவசாய நிலங்களை அவர் பயிர் செய்து வரும் நிலையில் அவரை மட்டும் அரசு தரப்பில் ஏன் விசாரணை செய்யப்படவில்லை என்ற விளக்கம் அளிக்கப்படவில்லை. இதுகுறித்து அ.சா.172 மேலும் தன் குறுக்கு விசாரணையில்*

*1வது எதிரி ஆதியில் கல்லூரி விரிவுரையாளர் மற்றும் பேராசிரியாராக இருந்தார்கள் அவரது பெற்றோர்கள் பள்ளி தலைமை ஆசிரியர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான் அவர்களுடைய பெற்றோர்களுக்கு எடையார் என்ற கிராமத்தில் நிலம், வீடு போன்ற சொத்துகள் இருந்தன என்றால்*

சரிதான். 1வது எதிரியின் பெற்றோர்களுக்கு பள்ளியிலிருந்து ஒய்வு பெற்ற போது பென்ஷன் கிரரிஜவிடி போன்ற வருமானங்கள் வந்தது என்று விசாரணையில் தெரிய வந்தது என்றால் சரிதான். 1வது எதிரியின் பெற்றோர்கள் எனது விசாரணையின் போது உயிருடன் இருந்தார்கள் அவர்களை நான் விசாரிக்கவில்லை 1வது எதிரிக்கு அவர்கள் எவ்வளவு பென்ஷன் வருமானத்தை கொடுத்தார்கள் என்பதை நான் விசாரிக்கவில்லை. விசாரணை காலத்தில் 1வது எதிரியின் குடும்ப சொத்துகள் பாகம் செய்யபடவில்லை என்றாலும் அந்த சொத்துகளை 1வது எதிரியின் சகோதரர் தான் நடனசிகாமணி என்பவர் மற்றொர் நபர் சார்பாக பராமரித்து வந்தார் என்றால் சரிதான். அந்த நிலங்கள் வளமையான நிலங்கள் என்றால் சரிதான். அந்த கூட்டுகுடும்ப வருமானத்திலிருந்து 1வது எதிரிக்கு என்ன வருமானம் வந்தது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கூட்டுகுடும்ப சொத்துகள் தவிர 1வது எதிரிக்கு மேல்பாதிகிராமத்திலும் நிலங்கள் இருந்தது என்றால் சரிதான். 1வது எதிரி வருடவருட வருமான வரி செலுத்துபவர் என்றால் சரிதான். 1வது எதிரி கல்லூரியில் 16 வருடம் 11 மாதங்கள் வேலை பார்த்தார் என்றால் சரிதான் ஆனால் அவரது பணிக்காலம் முழுவதும் ஆன சம்பள கணக்குகளை நான் பரீசிலனை செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. பன்னீர் செல்வம் ஆய்வாளர் அது குறித்து கணக்குகளை சேகரித்துள்ளார். 1வது எதிரி என்னுடைய விசாரணை காலத்தில் கரும்பு பயிரிட்ட விவரம் எனக்கு தெரியும். ஆனால் கரும்பு பயிரிட்டதிலிருந்து வந்த வருமானம் 1வது எதிரியின் வருமானத்தில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணை காலத்தில் 1997-1998 முதல் 2001-2002 வரை விவசாய வருமானமாக 595000/- பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளவாறு 1வது எதிரிக்கு வருமானமாக 249510/- தான் வந்ததாக சொன்னால் தவறு என்றாலும் அந்த வருமானத்துடன் 345490/- ரூபாய் சேர்க்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய தணிக்கை காலத்தில் 1வது எதிரி தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் தமிழ்நாடு மந்திரியாகவும் இருந்தார் என்றால் சரி. தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் உள்ளது என்றால் மேலும் மந்திரிகளுக்கு அதைவிட அதிகமான சம்பளம் மற்றும் படிகள்

*உள்ளது என்றாலும் சரிதான். மந்திரிகளுக்கு வருடம் முழுவதும் போக்குவரத்து செலவுகள், மருத்துவ செலவுகள், தொலைபேசி செலவுகள் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது என்றால் சரிதான். தணிக்கை காலத்தில் 1வது எதிரிக்கு வாகன எரிபொருள் அலவன்சாக 574986/= ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.*

58) இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செயலாராக பணிபிரிந்த எ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் எரிபொருள் அலவன்ஸ் அறிக்கை எ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.172-ம் தன் குறுக்கு விசாரணையில்,

*அது மட்டுமின்றி அவர் மந்திரியாகவும் திமுக-வில் மாவட்ட செயலாளராக இருந்தபோது கட்சி கூட்டங்களில் பேசுவதற்கும் கட்சி சார்பானவர்களின் திருமணங்களுக்கும் செல்லும்போது பணம் மற்றும் சால்வைகள் அன்பளிப்பாக கிடைத்த வகையில் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 50000 முதல் 100000/- வரை கிடைத்து வந்ததாக தனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு கிடைத்த தொகைகளை தனது குடும்ப செலவுகளுக்காகவும், தனது குழந்தைகளின் படிப்பு செலவுகளுக்காகவும், வாகன செலவுகளுக்காகவும், மனைவி மற்றும் மகன்களின் வியாபாரத்திற்கு ஒரு பகுதியாக முதலீடு செய்வதற்கும் உபயோகப்படுத்தியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.*

*59)* மேலும் அரசு தரப்பில் தணிக்கை காலத்தில் 1,2 எதிரிகளின் வருமானம், செலவினம் மற்றும் அவர்களால் சேர்க்கப்பட்ட சொத்துக்கள் குறித்து தனித்தனியாக குறிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு கணக்கிடப்பட்டிருந்தால் மட்டுமே 1ம் எதிரியால் தெரிந்த வருமானத்திகு பொருத்தம்ற வகையில் சொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளதா என்பது தெரியவரும். ஆனால் அவ்வாறு சேர்க்காமல் 1 முதல் 5 எதிரிகளின் சொத்துக்களை சேர்த்து பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிரி

பொது ஊழியர் என்ற முறையில் 2ம் எதிரி அவரது மனைவி என்ற நிலையில், 3ம் எதிரி 1ம் எதிரியின் மாமியார் ஆவார். 4,5 எதிரிகள் 3ம் நபர்கள். ஆனால் 1ம் எதிரியின் குடும்ப சொத்துக்கள் என்று 3 முதல் 5 எதிரிகளின் சொத்துக்கள் சேர்த்து தாக்கல் செய்துள்ளது அரசு தரப்பு வழக்கை வலுவற்றதாக ஆக்குவதாகவே உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

60) மேலும் இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 1ம் எதிரிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. ஆனால் அவரது மனைவியான 2ம் எதிரியிடம் அல்லது 3 முதல் 5 எதிரிகளிடம் விளக்கம் கேட்கும் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. 2ம் எதிரி மற்றும் 3ம் எதிரி மீது முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 1,2 எதிரிகளின் மகன்கள் மீதும் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் 1,2 எதிரிகளின் மகன்களிடமோ, 2 முதல் 5 எதிரிகளிடமோ எவ்வித விளக்கமும் புலன்விசாரணை அதிகாரியால் கோரப்படவில்லை. 1ம் எதிரிக்கு அளிக்கப்பட்ட இறுதி அறிவிப்பிற்கு 1ம் எதிரி தரப்பில் உரிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து புலன்விசாரணை அதிகாரி தன் குறுக்கு விசாரணையில்,

> *1ம் எதிரி திரு.கே.பொன்முடி 10.10.2003 ம் தேதியிட்ட கடிதத்தை அவருடைய பதில் அனுப்பி உள்ளார். 1ம் எதிரி அனுப்பிய விளக்கங்களுடன் கூடிய பதில் கடிதம் அ.சா.ஆ.556ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. அதில் அவர் 4ம் எதிரி சிகா கல்வி அறக்கட்டளை சேர்மேன் மற்றும் 5ம் எதிரி திரு.நந்தகோபால் , டிரஸ்டி, அவருடைய பினாமி இல்லை என்றும் 2ம் எதிரி அவருடைய மனைவி திருமதி.விசாலாட்சி ஒரு (Independent Tax Assessee) என்றும் அவருக்கு தனிநபர் வருமானம் உள்ளதாகவும், அவருடைய சொத்துக்களில் 1ம் எதிரிக்கு எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் 3ம் எதிரி அவருடைய மாமியார்*

*திருமதி.சரஸ்வதி Independent Tax Assessee என்றும் தனியாக வருமானவரி செலுத்துபவர் (Independent Tax Assessee) என்றும் அவருடைய சொத்துக்களுக்கும் முதல் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும் முதல் எதிரியுடைய சொத்துக்கள் அவருடைய வருமானத்திற்கு பொருந்தும் என்றும் பதில் அளித்துள்ளார்.*

61) மேற்படி விளக்கத்தில் 1ம் எதிரி தனக்கும் தன் மனைவி நடத்தி வரும் நிறுவனங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அதேபோல் 3ம் எதிரி நடத்தி வரும் சிகா கல்வி அறக்கட்டளைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் மறுத்துள்ளார். இதனையடுத்து மேற்படி நபர்களிடம் எவ்வித விளக்கமும் கேட்காமல், 1,2 எதிரிகளின் மகன்களை நீக்கியும் 4,5 எதிரிகளை புதிததாக சேர்த்தும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளார். இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட நபர்களிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது. ஆனால் உரிய வாய்ப்பு அளிக்காமல் அவர்களிடம் எவ்வித விளக்கமும் கேட்காமல் அவர்களிடமிருந்து பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே 2 முதல் 5 எதிரிகள் அனைவருமே வருமான வரி செலுத்தும் தனிப்பட்ட வருமானம் உள்ளவர்கள் என்ற நிலையில் அவர்ளுக்கு உரிய விளக்கம் கேட்கும் அறிவிப்பு அனுப்பாமல் 1ம் எதிரியின் மனைவி 2ம் எதிரிக்கும் 3 முதல் 5 எதிரிகளுக்கும் எதிராக இறுதி அறிக்கை தாக்கல் ஒருதலைப்பட்சமான விசாரணை என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாகவே உள்ளது.

*62)* எனவே எதிரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது போல் பட்டியல் 3-ல் கண்டபடி 1ம் எதிரியின் விவசாய வருமானம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவரது விவசாய வருமானம் தவறானது என்பதும் தெரியவரும் நிலையில், 1ம்

எதரியின் விவசாய வருமானம், இதர வருமானங்கள் குறித்து புலன்விசாரணை அதிகாரி சரிவர புலன்விசாரணை செய்யப்படவில்லை என்பதும், பல்வேறு வருமானங்களை 1ம் எதிரியின் வருமானத்தில் காட்ட தவறி உள்ளார்கள் என்பதும் 1ம் எதிரி தரப்பில் வாதிடப்படுவது போல் கணக்கு பட்டியல் தவறாக அவசர அவசரமாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதும், பல்வேறு இனங்களை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் 1ம் எதிரியின் விவசாய வருமானம் மற்றும் சம்பள விவரம் குறித்த சரியான கணக்கு விவரங்களை பட்டியலில் இணைக்க அரசு தரப்பில் தவறி உள்ளது என்பது புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இருந்து நிரூபணமாகிறது.

63) மேலும் 1ம் எதிரி தரப்பில் 1,2 எதிரிகளின் மகன்கள் களதம் சிகாமணி மற்றும் அசோக் சிகாமணி ஆகியோர் முதல்தகவல்அறிக்கையில் 3,4 எதிரிகளாக காட்டப்பட்டிருந்தபோதிலும் இறுதி அறிக்கையில் நீக்கப்பட்டள்ளனர் என்றும் குடும்ப உறுப்பினர்களின் வருமானம் மற்றும் செலவினங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்போது அவர்களின் சேமிப்பு வருமானத்தை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது உள்நோக்கம் கொண்டது என்று வாதிடப்பட்டது. மாறாக அரசு தரப்பில் போதிய ஆதாரங்கள் 1ம் எதிரியின் மகன்களுக்கு எதிராக இல்லை என்பதால் அவர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்று கூறியுள்ளார். தணிக்கை கணக்கில் இவர்கள் இருவருக்கும் &.35>89>429.00 வருமானம் வந்துள்ள விவரம் தெரியவந்ததாலும் இவர்கள் இருவரும் தங்கள் பெற்றோருடன் தணிக்கை காலத்தில் கூட்டு குடும்பமாக வசித்து வந்த காரணத்தினால் மேற்படி வருமானம் அரசு வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்ற காரணத்தினால் அவர்களது வருமானத்தை மறைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இறுதி அறிக்கையில் அவர்களது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்று 1ம் எதிரி தரப்பில் வாதிடப்பட்டது.

64) 1,2 எதிரிகளின் மகன்கள் கௌதம் சிகாமணி மற்றும் அசோக் கிகாமணி ஆவார்கள். மேற்படி இரு மகன்களும் 1,2 எதிரிகளுடன் கூட்டுக்குடும்பமாக உள்ளார்கள் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. அதேபோல் அசோக்சிகாமணி "Hello Agency" என்ற ஏர்செல் முகவர் நிறுவனத்தை நடத்தி வருவதும் திரு.கௌதம் சிகாமணி இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முகவர் என்றும் அரசு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து அ.சா.172 தன் குறுக்கு விசாரணையில்

> *முதல் தகவல் அறிக்கை 1 மற்றும் 2 எதிரிகளின் மகன்கள் அஷோக் சிகாமணி மற்றும் கௌதம் சிகாமணிக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது விசாரணையின் அடிப்படையில் 1, 2 எதிரிகளின் மகன்களை நீக்கிவிட்டு 3 முதல் 5 எதிரிகளை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 1, 2 எதிரிகளின் மகன்களை குற்றப்பத்திரிக்கையிலிருந்து நீக்கியதற்கு தக்க காரணம் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவர்களை குற்றப்பத்திரிக்கையில் சேர்க்கவில்லை.*
>
> *முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கௌதம் சிகாமணி இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முகவர் என்றால் சரிதான். தணிக்கை காலத்தில் அவருக்கு இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்திலிருந்து 2345800/= ரூபாய் கமிஷனாக அவருடைய நிறுவனமான கௌதம் டிரேடர்ஸ்க்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.*
>
> *சாட்சி பட்டியலின் சாட்சி 203 ராஜேஷ் சங்கர் என்பவர் முதல் தகவல் அறிக்கையில் உள்ள அசோக் சிகாமணி என்பவருக்கு சொந்தமான Hello Agency நிறுவனம் Aircel நிறுவனத்தின் முகவர் நிறுவனம் என்று தணிக்கை காலத்தில் மேற்படி நிறுவனத்திற்கு தங்களால் 1243629/= ரூபாய் தரபட்டுள்ளதாக வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். தணிக்கை காலத்தில் 1, 2 எதிரிகளும் மற்றும் அசோக் சிகாமணி மற்றுமம் கௌதம் சிகாமணி கூட்டுகுடும்பமாக இருந்தார்கள் என்றால் சரிதான்.*

மேற்படி கௌதம் சிகாமணி மற்றும் அசோக் சிகாமணி ஆகியோரின் திருமணத்தின்போது கிடைத்த பரிசுப்பொருட்களை வருமானமாக காட்டிய நிலையில், மேற்படி இருவரும் ஏர்செல் மற்றும் சிமெண்ட் வியாபாரம் செய்து வரும் நிலையில், மேற்படி இருநபர்களும் கூட்டுக்குடும்பமாக இருப்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில், மேற்படி இருநபர்களின் வருமானங்களை நீக்கிவிட்டு, இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது 1,2 எதிரிகள் தரப்பில் வாதிடப்படுவதை போல சந்தேகத்திற்கு இடமான நடவடிக்கைகளாக உள்ளது. எனவே 1,2 எதிரிகளின் மகன்களின் வருமானமான ரூ.35,89,249/- கணக்குப்பட்டியலில் சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள பட்டியல் தவறானது என்ற 1,2 எதிரிகளின் வாதம் ஏற்புடையதாக உள்ளது வினா 7-க்கும் மேலும் 1ம் எதிரி பொது ஊழியர் என்ற வகையில் தனது அதிகார வரம்பை மீறி அட்டவணை பட்டியல் 1ல் கண்டுள்ளபடி வருமானத்திற்கு அதிகமான ொத்து சேர்த்துள்ளார் என்ற குற்றசாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்று வினா 6-க்கு விடை அளிக்கப்படுகிறது.

<u>65) வினா 8 மற்றும் 9˙.-</u>

இவ்வழக்கின் 2ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி. 3ம் எதிரியின் மகள். அரசு தரப்பில் 2ம் எதிரி குடும்ப தலைவி என்றும் 1ம் எதிரியின் பினாமியாக 2ம் எதிரி செயல்பட்டு, 1ம் எதிரி தெரிந்த வருமானத்திற்கு அதிகமாக நிதிவள சொத்துக்களை குவிப்பதற்கு உதவியாக இருந்தார் என்று கூறப்பட்டு 2ம் எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. 2ம் எதிரி 1ம் எதிரியின் பினாமியாக செயல்பட்டார் என்று நிரூபிக்கவேண்டிய கட்டாயம் அரசு தரப்பை சார்ந்ததாகும்.

66) கற்றறிந்த 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையின்போது 2வது எதிரி வெறும் குடும்ப தலைவி மட்டுமல்ல அவர் ஒரு தொழில் முனைவர் ஆவார்

என்றும் 2வது எதிரி ஒரு செல்வ செழிப்பான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர், அவர் பொருளாதார ரீதியாக வலுவான நிலையில் இருப்பவர், அவருக்கு திருமண சமயத்தில் சீர்வரிசையாக அவருக்கு மட்டும் 150 சவரன் தரப்பட்டுள்ளது என்பதை அ,த,சா,8 தனது சாட்சியத்தில் கூறியுள்ளார் என்றும் வாதிடப்பட்டது.

67) மேலும் 2ம் எதிரி தரப்பில் 2ம் எதிரி விஷால் எக்ஸ்போ, விஷால் ஆட்டோமொபைல்ஸ், விஷால் பிரிண்டர்ஸ், விஷால் பப்ளிகேஷன்ஸ், டிப்பர் லாரி மூலம் வருமானம் கிரானைட் வியாபாரம் மற்றும் விவசாய நிலங்களில் இருந்து கரும்பு சப்ளை செய்துள்ளதாகவும் அவருக்கு தனிப்பட்ட வருமானம் திருமணமான நாள் முதல் உள்ளது என்றும், 2ம் எதிரி முறையாக வருமான வரி செலுத்தி வருபவர் என்றும் 2ம் எதிரி பெயரில் அவருடைய குடும்பத்தில் இருந்து அளிக்கப்பட்ட அந்திர மாநிலம் பாகாலாவில் உள்ள வளமான விவாசய நிலங்களில் இருந்து மிகுந்த வருமானம் வருகிறது என்றும், முறையாக வணகவரி செலுத்தி வருபவர் என்றும் 2ம் எதிரி 1ம் எதிரியின் பினாமியாக செயல்படவில்லை என்று வாதிடப்பட்டது.

68) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் பலர் 2ம் எதிரி மேற்படி தொழில் நிறுவனங்களை நடத்தி வருவது குறித்து சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் 2ம் எதிரி மேற்படி நிறுவனங்கள் நடத்தி வந்தார் என்பது குறித்து புலன்விசாரணை அதிகாரி தன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

> *2-ம் எதிரி விஷால் எக்ஸ்போ, விஷால் பப்ளிகேஷன், விஷால் பிரிண்டர்ஸ், விஷால் ஆட்டோ மொபைல்ஸ் ஆகிய நிறுவனங்களை நடத்திவந்தார் என்றால் சரிதான்.*
>
> *இது தவிர 2-ம் எதிரிக்கு 2 டிப்பர் லாரிகளும் சொந்தமானது என்றால் சரிதான். அனைத்து நிறுவனங்களும் சட்டப்படியாக பதிவு செய்யப்பட்டு*

*முறையாக வணிக வரி செலுத்தப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். இந்த வியாபாரத்திற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வியாபாரத்திற்கான ஆவணங்கள் அனைத்தும் என்னால் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான்.*

*2-ம் எதிரிக்கு பாத்யப்பட்ட நிலங்களாக 23.42 ஏக்கருடன் சேர்த்து மேலே சொன்ன 5.02 ஏக்கர் மொத்தம் 28.44 ஏக்கர் அவருக்கு பாத்யப்பட்டது என்றால் சரிதான்.*

*சாட்சி ஜெயசந்திரன் வருவாய் ஆய்வாளர் என்னுடைய சாட்சயித்தில் பாகால தாலுாக்காவில் அனைத்து நிலங்களும் வளமான நிலங்கள் வாக்குமூலங்கள் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்*

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் 2ம் எதிரி தரப்பின் விளக்கம் இவைகளை குறித்து பார்க்கும்போது 2ம் எதிரி தரப்பில் வாதிடப்படுவது போல் அரசு தரப்பு சாட்சிகளின் கூற்றுப்படி 2வது எதிரி வெறும் குடும்ப தலைவி மட்டுமல்ல என்பதும் அவர் விஷால் எக்ஸ்போ, விஷால் பப்ளிசர்ஸ், விஷால் ஆட்டோ மொபைல்ஸ் என்ற நிறுவனங்களின் மூலம் ஏற்றுமதி, இறக்குமதி, புத்தக வெளியீடு, கிரானைட் கற்கள் உள்ளிட்ட தொழில் நடத்தி வருபவர், டிப்பர் லாரிகளை வைத்து தொழில் செய்து வந்துள்ளார், இவற்றிற்கு முன்னதாக அரசு ஒப்பந்ததாரராகவும் அவர் இருந்துள்ளார் என்பதும் எ.த.சா.ஆ.5 மூலமும் எதிரி தனிப்பட்ட முறையில் கணக்கு வழக்குகள் கொண்ட வருமான வரி செலுத்தும் நபர் என்பதும் அ.சா.ஆ.146 முதல் 148 மற்றும் எ.சா.ஆ.3 மற்றும் எ.சா.ஆ.4 மூலம் +அவரது வியாபாரம், வரவு, செலவு அனைத்தும் முறையாக அரசுக்கு வருமான வரி படிவங்களின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் 2ம் எதிரி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

69) அடுத்ததாக கற்றறிந்த 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையின்போது பட்டியலி 3-ல் கண்ட வருமானத்தில் இனம் 6-ல் 2ம் எதிரி

15,00,0000/- ரூபாய் கடனாக பெற்றது மட்டும் கூறப்பட்டுள்ளது என்றும் ஆனால் 05.02.2021 தேதியில் அதே இந்தியன் வங்கியில் இருந்து ரூ.35,00,000/- கடனாக பெற்றது மறைக்கப்பட்டுள்ளது என்றும் அதுகுறித்து அ.சா.78 வங்கி மேலாளர் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் வாதிடப்பட்டது. எதிரி தரப்பில் கூறப்படுவதுபோல் அ.சா.78 தன் சாட்சியத்தில்,

> *அவர்கள் கடலூரில் ஹீரோ ஹோண்டா ஷோரூம் கட்டுவதற்காக ரூ.15,00,000/- மட்டும். 16.12.2000 அன்று மனு அளித்தார் அதன் பேரில் 05.02.2001-ல் ரூ.15,00,000/- உடன் மேலும் ரூ.35,00,000/- யும் 2-ம் எதிரி திருமதி. விசாலாட்சி அவர்களுக்கு இந்தியன் வங்கியிலிருந்து கடன் வழங்கியது. அது அரசு தரப்பில் அ.த.சா.ஆ.216 மற்றும் 217 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.*
>
> *அந்த தரம்ந்த் பைனான்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட **ரூ.7,00,000/-** பாகப்பிரிவினை சமயத்தில் கிடைத்த **ரூ.20,000**/- விஷால் ஆட்டோமொபைல்ஸ் யிருந்து கிடைத்த கமிஷன் தொகை **ரூ.5,75,235**/- ஆகியவை (12,95,235/-) மட்டும் சேர்க்கப்படவேண்டும்.*

என்று கூறியுள்ளார். எனவே மேற்படி வருமானத்தை அரசு தரப்பில் வேண்டுமென்றே மறைத்துள்ளார்கள் என்ற வாதம் ஏற்படையதாக உள்ளது. மேலும் பட்டியல் 4-ல் இனம் 39-ல் கடன் பெற்றதாக ரூ.7,00,000/- வரவு வைக்கப்பட்ட நிலையில் அதுகுறித்து வருமானமாக பட்டியில் 3-ல் குறிப்பிடவில்லை என்ற 2ம் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாக உள்ளது. மேலும் விஷால் பப்ளிகேஷனில் இருந்து வந்த வருமானத்தை வேண்டுமென்றே அரசு தரப்பில் புலன்விசாரணை அதிகாரி மறைத்துள்ளார் என்று எதிரி தரப்பில் வாதிடப்பட்டது. இதுகுறித்து பரிசீலணை செய்கையில், அ.சா.172 தன் குறுக்கு விசாரணையில்

*விஷால் பப்ளிக்கேஷன் நிறுவனத்திடமிருந்து கிடைத்த வருமானமான ரூ.1,33,075/- என்ற வருமானமானது தணிக்கை காலத்தில் கடைசியில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ததால் 2-ம் எதிரியின் வருமான கணக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.*

என்று புலன்விசாரணை அதிகாரி சாட்சியமளித்துள்ளது 2ம் எதிரி தரப்பு வாதத்திற்கு ஆதரவாகவே அமைந்துள்ளது.

70) அ,த,சா.68 பட்டய கணக்காளரும் அ,த,சா,146 வருமான வரித்துறை அதிகாரியும் 2வது எதிரியின் வரவு செலவு மற்றும் 2ம் எதிரி செலுத்திய வரிகள் குறித்து சாட்சியமளித்துள்ளனர், அ,த,சா,68 நிதியாண்டுகள் 1997 - 1998 முதல் 2001 - 2002 வரை 2வது எதிரி தாக்கல் சேய்த வருமான வரி கணக்கின் அப்டைபடையில் அவரது வருமானம் குறித்து விளக்கமாக சாட்சியமளித்தள்ளார்.

71) அடுத்ததாக, 2ம் எதிரியின் வருமானம் வேண்டுமென்றே குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், பல வருமானங்கள் விடுபட்டுள்ளது என்றும் எனவே 2ம் எதிரியின் வருமானமாக காட்டப்பட்டுள்ள அட்டவணை 3 செல்லத்தக்கதல்ல என்றும் அது நிராகரிக்கப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டது. மேலும் 2ம் எதிரியின் விவசாய வருமானம் வேண்டுமென்றே விடுபட்டுள்ளது என்றம் கூறப்பட்டது.

இதுகுறித்து அ.சா.169 தன் சாட்சியத்தில்,

*"மேற்படி நிலத்தின் பாசன வசதி எத்தனை போகங்கள் பயிரிடலாம் மண்ணின் தன்மை ஆகியவை குறித்து நான் குறிப்பாக விசாரிக்கவில்லை என்றூல் சரிதான்,. அந்த நிலங்கள் மண் வளம் மற்றும் பாசன வசதி நிறைந்த வருடத்திற்கு மூன்று போகம் விவசாயம் நடக்கும் நிலங்கள் என்ற சொன்னால் அதுபற்றி தனக்கு தெரியாது"*

72)) 2ம் எதிரி 1995 முதல் 2002 வரை சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்பியது குறித்தும் அதற்காக மேற்படி சர்க்கரை ஆலையால் வழங்கப்பட்ட தொகை குறித்து அ.சா.137 சாட்சியமளித்துள்ளார். அதன் மூலம் ரூ.4,19,425/- கிடைத்துள்ளது. இந்த தொகை 2ம் எதிரியின் வருமானமாக காட்டப்படாமல் மறைக்கப்பட்டுள்ளது என்பதை அ.சா.172 ஒப்புக்கொண்டுள்ளார். எனவே 2ம் எதிரியின் விவசாய வருமானம் அவரது வருமான வரி கணக்குகளின்படி ரூ.34,50,000/- என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்படுவது ஏற்புடையதாக உள்ளது.

73) அதேபோல் டிப்பர் லாரி மூலம் வந்த வருமானம் முறையாக கணக்கிடப்படவில்லை என்று அரசு தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. டிப்பர் லாரி செலவினமாக அரசு தரப்பில் ரூ.16,30,225./ என காட்டப்பட்டுள்ளது. டிப்பர் லாரி மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.17000/- வருமானம் வந்துள்ளது என்றும் டிப்பர் லாரி வருமானமே அரசு தரப்பில் காண்பிக்கப்படவிலல்ல என்றும் எனவே டிப்பர் லாரியின் குறைந்தபட்ச வருமானமாக மாதம் ரூ.17000/- கணக்கீடு செய்து ரு.8,16,000/- காண்பிக்கப்படவேண்டும் என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாக உள்ளது.

எனவே அரசு தரப்பில் ஒப்புக்கொண்டுள்ளபடி இந்தியன் வங்கி கண், தர்மேஷ் பைனான்ஸ், லாரிகள் வருமானம் , லாரி கடன் , விவசாய வருமானம், விஷால் பப்ளிகேஷன்ஸ், பாகப்பிரிவினை தொகை, ஆட்டோமொபைல் கமிஷன் ஆகிய மொத்த தொகை ரூ.97,10,677/- 2ம் எதிரியின் வருமானத்தில் சேர்க்கப்படவேண்டும் என்ற அரசு தரப்பு வாதம் ஏ்புடையதாக உள்ளது.

74) அடுத்ததாக அ.த.சா.ஆ.146,147 மற்றும் 148 முன்னிலைக்கும், எ.சா.ஆ.1 மற்றும் 2 முன்னிக்கு தணிக்கை காலத்தில் 2வது எதிரியின் மொத்த வருமானம் ரூ.1,56,08,232/- கணக்கில் காண்பிக்கப்படவில்லை என்றும் செலவினங்கள்

ரூ.36,98,346.75 என்றும் எனவே சேமிப்பு ரூ.1,19,09,885.25 அதில் கையகப்படுத்திய சொத்து மதிப்பு ரூ.65,37,689 என்றும் மீதம் ரூ.53,72,196.25 என்றும் வாதிடப்பட்டு பின்வருமாறு அதற்கான விவரங்கள் அளிக்கப்பட்டது.

மேற்படி 146 முதல் 148 மற்றும் எ.சா.1 மற்றும் 2 ஆகிய ஆவணங்களின்படி 2ம் எதிரியின் மொத்த வருமானம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

**<u>அ.த.சா.ஆ.-146 - நிதியாண்டு 1997-1998-ற்கான வருமான வரி கணக்கு</u>**

**மொத்த லாபம் - ரூ. 5,48,538.00**

**<u>அ.த.சா.ஆ.-147 - நிதியாண்டு 1998-1999-ற்கான வருமான வரி கணக்கு</u>**

**மொத்த லாபம் - ரூ. 15,83,016.00**

**<u>அ.த.சா.ஆ.-148 - நிதியாண்டு 1999-2000-ற்கான வருமான வரி கணக்கு</u>**

**மொத்த லாபம் - ரூ. 28,55,387.00**

**நிதியாண்டு 2000-2001-ற்கான வருமான வரி கணக்கு(எ.த.சா.ஆ.1)**

**மொத்த லாபம் - ரூ. 16,56,940.00**

**நிதியாண்டு 2001-2002-ற்கான வருமான வரி கணக்கு(எ.த.சா.ஆ.3)**

**மொத்த லாபம் - ரூ. 18,64,351.00**

**2ம் மொத்த வருமானங்கள்**

| | |
|---|---|
| 1997 – 1998 | - ரூ. 5,48,538.00 |
| 1998 – 1999 | - ரூ.15,83,016.00 |
| 1999 - 2000 | - ரூ.28,55,387.00 |
| 2000 – 2001 | - ரூ.16,56,940.00 |
| 2001 – 2002 | - ரூ.18,64,351.00 |
| **மொத்தம்** | **- ரூ.85,08,232.00** |

மேற்படி வருமானங்களில், கடன்கள் விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| **மொத்த வருமானம்** | - Rs. 85,08,232.00 |
| **கடன்கள்** | |
| **இந்தியன் வங்கி** | - Rs. 15,00,000.00 |
| **இந்தியன் வங்கி** | - Rs. 35,00,000.00 |
| GIC Housing Finance | - Rs. 14,00,000.00 |
| **தரம்சந்த்** Finance | - Rs. 7,00,000.00 |
| **Total** | **- Rs.1,56,08,232.00** |

**தணிக்கை காலத்தில் 2வது எதிரியின் மொத்த மற்றும் கடன்கள் வருமானம் ரூ.1,56,08,232/-.** என்று எதிரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது குறித்து அரசு தரப்பில் மறுத்தளிக்கப்படவில்லை. மொத்த வருமானம் ரூ.8508232/- என்று வருமானவரித்துறை கணக்கின்படி கூறப்பட்டிருந்தபோதிலும் அதுகுறித்த செலவினங்கள் என்ன என்பது பற்றி கூறப்படவில்லை. எனவே மேற்படி மொத்த வருமானத்தில் விவசாய வருமானத்தை மட்டும் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

மேலும் 2ம் எதிரி தரப்பில் செலவினங்கள் குறித்து சரிவர பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மிகைப்படுத்தி பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் 2ம் எதிரியின் செலவினம் போக மீதி எஞ்சி இருக்கும் என்றும் வாதிடப்பட்டு பின்வருமாறு அதன் விவரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

<u>செலவினங்கள்</u>:-

அரசு தரப்பில் பட்டியல் - IV வரிசை எண்கள்,18 to 25, 31, 36 & 39ன் படி காட்டப்பட்டுள்ள தொகை ரூ.36,98,346.75.

<u>சேமிப்பு</u>:-

| | |
|---|---|
| மொத்த வருமானம் | - Rs.1,56,08,232.00 |
| செலவினங்கள் | - Rs. 36,98,346.75 |
| சேமிப்பு | - Rs.1,19,09,885.25 |

<u>அரசு தரப்பில் தணிக்கை காலத்தில் 2வது எதிரி கையகப்படுத்திய சொத்துகள் மதிப்பு</u>

தணிக்கை காலத்தில் 2வது எதிரி கையகப்படுத்திய சொத்துகள் என்று பட்டியல்-IIல் (அ.த.சா.ஆ.-545) வரிசை எண்கள். 14 to 25 மற்றும் வரிசை எண்.26 மற்றும் 27ல் காட்டப்பட்டுள்ள சொத்துகளின் மொத்த மதிப்பு ரூ.65,37,689/-

<u>எஞ்சிய வருமானம்</u>:-

| | |
|---|---|
| மொத்த சேமிப்பு | - Rs.1,19,09,885.25 |
| கையகப்படுத்திய சொத்து | - Rs. 65,37,689.00 |
| மீதம் | - Rs. 53,72,196.25 |

எனவே, 2வது எதிரி தனது சட்டப்பூர்வமான தெரிந்த வருமானத்திற்கு பொருந்தாத வகையில் கையகப்படுத்திய சொத்துக்கள் என எதுவுமில்லை. மாறாக, அவருக்கு தணிக்கை காலத்தில் கையகப்படுத்திய சொத்துகளுக்கான மதிப்பு போக ரூ.53,72,196,25/- எஞ்சியிருக்கும் என்று 2ம் எதிரி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

75) அரசு தரப்பில் 1வது எதிரி அரசு தெரியா வகையில் பொருளீட்டியதாகவும், அது 2வது எதிரி மூலம் சொத்துகளாக மாற்றப்பட்டதாகவும் என்றம் கூறியிருந்தபோதிலும் 1ம் எதிரி தரப்பில், அரசு தரப்பால் சுமத்தப்பட்டுள்ள குற்றசாட்டுக்கள் குறித்த ஆதாரங்கள் அரசு தரப்பில் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என்றும் தணிக்கை காலத்தில் 2வது எதிரி கையகப்படுத்திய சொத்துகள் அனைத்தும் அவரது வருமானத்தை கோண்டு அவரால் தனிப்பட்ட முறையில் பெறப்பட்டவை என 2ம் எதிரி தரப்பில் ஆதாரப்பூர்வமாக

நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தணிக்கை காலத்தில் 2வது எதிரிக்கு கடன்கள் ஆட்டோ மொபைல்ஸ் வியாபாரம் மற்றும் டிப்பர் லாரிகளினால் கிடைத்த வருமானம் ரூ.97,10,677.00 அரசு தரப்பால் வேண்டுமேன்றே மறைக்கப்பட்டுள்ளது என்றும 2வது எதிரியின் வருமானம் மிகவும் குறைத்துக் காட்டப்பட்டு, செலவினங்கள் செயற்கையாக மிகைப்படுத்தி காட்டப்பட்டு 2வது எதிரியை 1வது எதிரியின் பினாமியாக சித்தரிக்க அரசு தரப்பில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற 2ம் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாகவே உள்ளது. மேலும் தணிக்கை காலத்தில் 2வது எதிரிக்கு ஏற்பட்ட செலவினங்கள் என்று அரசு தரப்பால் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கணக்கில் எடுத்துக்கொண்டாலும் அவருக்கு எஞ்சிய தொகை ரூ.53,72,196.25 என மேற்கண்ட கணக்கீட்டின் படி நிரூபிக்கப்பட்டுள்ளது என்ம் மேலும், 1வது எதிரியிடம் இருந்து 2வது எதிரிக்கு எவ்வகையிலும் பொருளுதவி கிடைக்கப்பெற்றதாக எவ்வித ஆதாரமும் இல்லாத நிலையில் 2வது எதிரியை 1வது எதிரியின் பினாமி என்றோ? அவர் 1வது எதிரிக்கு ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 13(1)(e)ன் கீழ் குற்றமிழைக்க உடந்தையாக இருந்தார் குற்றச்சாட்டை அரசு தரப்பு தக்க வகையில் நிரூபிக்க தவறிவிட்டது என்ற 2ம் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாக உள்ளது என்ற வாதம் ஏற்புடையதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**76) வினா 10:-**

அரசு தரப்பில் அட்டவணை பட்டியல் 1 முதல் 7 வரையான கணக்கீடுகள் 1 முதல் 5 எதிரிகளை சேர்த்து பின்வருமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| I | The Value of properties and pecuniary resources as on 13.05.1996 (Statement -I) held by A1 and A2 | Rs.18,10,644.50 |

| | | |
|---|---|---|
| II | Value of properties found to have acquired by A1 in the name of A2 and A3 Vishal Expo (Owned by Accused – 2) and in the name of Sige Education Trust (Statement -II) | Rs.4,10,04,307.95 |
| III | Hence, value of properties acuqired during the check period in the names of A1 and others (Statement – V) | Rs.3,91,93,663.45 |
| IV | Income of Accused 1 during check period (Statement-III) | Rs.2,21,61,391.45 |
| V | Expenditure incurred by A1 during check period (Statement -IV) | Rs.1,38,02,794.97 |
| VI | Likely savings of A1 at the end of check period (Statement -VI) (Rs.2,21,391.45 – Rs.83,58,596.48) | Rs.83,58,596.48 |
| VII | Pecuniary resources and properties dispropertionate to the known sources of income of Accused 1 (Statement VII) (Rs.3,91,93,663.45 – Rs.83,58,596.48) | Rs.3,08,35,066.97 |

ஏற்கனவே விவாதித்தபடி, 3 மற்றும் 5 எதிரிகள் குற்றச்சாட்டு வனைவதற்கு முன்பாகவே இறந்துவிட்டனர். 4ம் எதிரி விசாரணை தொடங்கிய காலத்தில் இறந்துவிட்டார். 3 முதல் 5 வரையான எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய்விட்டதாக இந்நீதிமன்றம் ஏற்கனவே உத்திரவிட்டுள்ளது. 1ம் எதிரியின் மிகை வருமானம் 2ம் எதிரிக்கோ அல்லது 3 முதல் 5 எதிரிகள் நடத்தி வந்த அறக்கட்டளையால் உபயோகப்படுத்தப்பட்டது குறித்து அரசு தரப்பில் எவ்வித ஆவணமும் இல்லை. 3ம் எதிரி தனிப்பட்ட வருமானவரி செலுத்தும் நபர் என்பதும் 3ம் எதிரியின் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டு அவை சிகா அறக்கட்டளைக்கு தானமாக கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் 4,5 எதிரிகளும் தங்கள் சொத்துக்களை சிகா அறக்கட்டளையின் நிர்வாகிககளாக இருந்து வாங்கி உள்ளனர். சிகா அறக்கட்டளையால் மாணவர்களிடம் நன்கொடைகள் வசூலிக்கப்பட்டுள்ளது. சிகா அறக்கட்டளையால் வசூலிக்கப்பட்ட நன்கொடை குறித்த ரசீதுகள் போலியானவை என்று அரசு தரப்பில் கூறப்பட்டு அந்த ரசீதுகள் நாசிக்கில் உள்ள

ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பபட்டு அந்த ரசீதுகள் உண்மையானவை என்று ஆய்வு முடிவுகள் வந்துள்ளது குறித்து முடிவுகள் வந்துள்ளது என்பது குறித்து அரசு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

77) ஏற்கனவே விவாதித்து முடிவு கண்டுள்ளபடி 1ம் எதிரியின் தணிக்கை காலத்திகு முன்பிருந்த வருமானம் மற்றும் தணிக்கை காலத்தில் உள்ள பல்வேறு வருமானங்கள் சரிவர காண்பிக்கப்படவில்லை என்றும் 3ம் எதிரி பெயரில் உள்ள சொத்துக்கள் 1ம் எதிரி தான் அவருடைய சட்டவிரோதமாக சம்பாதித்த தொகையை கொண்டு 3ம் எதிரி பெயரில் சொத்து வாங்கப்பட்டது குறித்தும் 1 மற்றும் 3 எதிரிக்கும் இடையே உள்ள தொடர்பு அரசு தரப்பில் சரிவர மெய்பிக்கப்படவில்லை என்பதும், சிகா அறக்கட்டளை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தீர்மானித்த நிலையிலும், 2ம் எதிரி குடும்பத்தலைவி அல்ல என்றும் அவர் வருமானவரி செலுத்தும் நபர் என்ற முறையில் பல்வேறு நிறுவனங்களை நடத்தி வருபவர் என்றும் 1ம் எதிரியின் பினாமியாக 2ம் எதிரி செயல்பட்டு, 1ம் எதிரி சட்டவிரோதமாக சொத்து குவிப்பிற்கு உடந்தையாக இருந்தார் என்று அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. அதேபோல் 3ம் எதிரி குடும்பத் தலைவி அல்ல என்பதும் முறையாக வருமானவரி செலுத்தி வருபவர் என்றும், தணிக்கை காலத்தில் அவர் 1ம் எதிரியின் பினாமியாக செயல்பட்டார் என்பதும் 1ம் எதிரிக்கும் 3 முதல் 5 எதிரிகள் நடத்தி வரும் சிகா கல்வி அறக்கட்டளைக்கும் உள்ள தொடர்பு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.. அறக்கட்டளையின் அறங்காவலர்களை வழக்கில் காட்டாததும் அறக்கட்டளையின் நபர்கள் இறந்து அவர்களுக்கு எதிராக வழக்கு அற்றுப்போன நிலையில் அறக்கட்டளையின் சார்பாக நீதிமன்றத்தில் யாரும் எடுத்துரைக்க யாரம் இல்லாத நிலையில் 1ம் எதிரியின் விவசாய வருமானம், சம்பள விபரம் குறைத்து

கூறப்பட்டுள்ளதும், பெட்ரோல் அலவன்ஸ், தேர்தல் செலவு மற்றும் திருமண மொய் பணம் ஆகியவைகள் குறித்து முன்னுக்கு பின் கூறியுள்ள நிலையிலும் அட்டவணை 1 முதல் 7-ல் கண்ட விபரங்கள் சரிவர கணக்கீடு செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. ஆனாலும் அட்டவணை பட்டியல் 1 முதல் 7-ல் கண்டுள்ள சரியான கணக்கு என்ன என்பதை நீதிமன்றம் உறுதி செய்தால் தான் உண்மையான கணக்கு விபரம் தெரியவரும். ஆனால் அட்டவணை பட்டியல் 1 முதல் 7 எதிரிகள் 1 முதல் 5 வரை பொதுவாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு எதிரிக்கும் தனித்தனியாக அட்டவணை பட்டியல் காண்பிக்காமல் மொத்தமாக அரசு தரப்பில் அட்டவணை தயாரித்துள்ள நிலையில், ஏற்கனவே விவாதித்துள்ள சங்கதிகளின்படி, அரசு தரப்பால் ஒப்புக்கொள்ளப்பட்ட 1 மற்றும் 2 எதிரிகளின் விடுபட்ட வருமானம் மற்றும் 1,2 எதிரிகளின் செலவு ஆகியவற்றை சேர்த்து கணக்குபட்டியலை கணக்கிட்டும், விடுப்பட்ட வருமானங்களை கணக்கிட்டால் தான் உண்மையான நிலை தெரியவரும் என்பதால் அதுகுறித்து தற்போது தீர்மானிக்கவேண்டிய அவசியம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது.

78) தற்போது 1,2 எதிரிகளின் விடுபட்ட வருமானம் குறித்து அரசு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட சாட்சியங்கள் அடிப்படையில் தீர்மானம் செய்யவேண்டி உள்ளது.

<u>விடுபட்ட வருமானங்கள்:-</u>

1ம் எதிரி பொது ஊழியர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் 1ம் எதிரியின் தணிக்கை காலத்திற்கு முன்பிருந்த சொத்து, தனிக்கை காலத்தில் அவரது பெயரில் வாங்கப்பட்ட சொத்துகக்ள், வருமானம், செலவினங்கள் மற்றும் சேமிப்புகள் குறித்து தற்போது பட்டியல் 1 முதல் 7 வரை பின்வருமாறு கணக்கிடப்படுகிறது. 1ம்

எதிரியை பொறுத்த வரையில், பல்வேறு வருமானங்கள் விடுபட்டுள்ளது. இதுகுறித்து அரசு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்படி

**(1) மகன்களின் வருமானம் ரூ.35,89,429/-**

அ.சா.156 சாட்சியத்தின்படியும், பட்டியல் சாட்சி 203-ன் வாக்குமூலத்தின்படியும், அ.த.சா.ஆ.418-ன்படியும் 1ம் எதிரியின் மகன் கௌதம் சிகாமணி இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முகவர் என்ற முறையில் ரூ.23,45,800/- கமிஷனாக பெற்றுள்ளார். பட்டியல் சாட்சி 203-ன் வாக்குமூலத்தின்படி அசோக் சிகாமணி உறலோ ஏஜென்ஸி நிறுவனம் ஏர்செல் நிறுவன முகவர் மூலம் ரூ.12,43,629/- தரப்பட்டுள்ளதாக வாக்குமூலம் அளித்துள்ளார். மேற்படி சங்கதிகள் குறித்து அ.சா.172 புலன்விசாரணை அதிகாரி தன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். புலன்விசாரணை அதிகாரி மேற்படி வருமானத்தை கணக்கு பட்டியலில் காட்டவில்லை என்று ஒப்புக்கொண்டுவிட்ட நிலையில் அந்த மொத்த வருமானம் ரூ35,89,249/- 1ம் எதிரியின் வருமானத்தில் சேர்க்கவேண்டியது அவசியமாக உள்ளது.

**(2) 1ம் எதிரியின் விடுபட்ட சம்பள வருமானம் ரூ.26,699/-**

ஏற்கனவே விவரித்துள்ளபடி அட்டவணை பட்டியலில் முதலாவதாக முதல் எதிரி திரு.கே.பொன்முடி போக்குவரத்து துறை அமைச்சராகவும் மற்றும் சட்ட மன்ற உறுப்பினராகவும் 13.05.1996 லிருந்து 31.03.2002 வரை பதவியிலிருந்த காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் அலவன்சஸ் ரூ.6,25,527/- என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.68 பட்டய கணக்கரின் சாட்சியத்தின்படி 1997 முதல் 2002 வரையிலான எதிரிக்கு கிடைத்த வருமானம் ரூ.6,52,226/- ஆகும் ஆக விடுபட்ட தொகை ரூ.26,699/- அரசு தரப்பில் 1996-1997ம் ஆண்டிற்கான சம்பள

வருமானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. என்றபோதிலும் ரூ.26,699/- 1ம் எதிரியின் விடுபட்ட சம்பள வருமானமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

**(3) 1ம் எதிரியின் விவசாய வருமானம் ரூ.3,45,490/-**

1ம் எதிரியின் விவசாய வருமானம் ரூ.2,49,510/- என அட்டவணை பட்டியல் 3-ல் கூறப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.68 ஆடிட்டரின் சாட்சியத்தின்படியும் புலன்விசாரணை அதிகாரி 172 சாட்சியத்தின்படியும் வருமான வரித்துறையில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின்படி 1ம் எதிரியின் விவசாய வருமானம் ரூ.5,95,000/- ஆகும். ஆக ரூ.595000 - ரூ.249510 = ரூ.345490/- ஆகும்.

**(4) கரும்பு ஆலையில் இருந்து வந்த வருமானம் ..ரூ.3,99,884/-**

1ம் எதிரியின் விவசாய நிலங்களில் இருந்து கரும்பு சப்ளை செய்யப்பட்டது குறித்து அ.சா.137 வாசுதேவன் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.372-ன்படி சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்பிய வகையில் கிடைத்த வருமானம் ரூ.3,99,884/- ஆகும். இந்த வருமானம் சேர்க்கப்படவேண்டிய வருமானம்.

**(5) எரிபொருள் செலவினத்தொகை ரூ.5,74,986/-**

எதிரி தரப்பில் சென்னை, தலைமை செயலகத்தில் பொதுத்துறை (பணப்பிரிவு) பிரிவு அலுவலராக பணிபுரியும் திரு.ஆனந்த் என்பவர் விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் எ.த.சா.ஆ.7 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவரது சாட்சியத்தனிபடி மே 1996 முதல் ஏப்ரல் 2001 வரை ஆன காலக்கட்டத்திற்கு 1ம் எதிரி திரு.கே.பொன்முடி அவர்கள் அமைச்சராக பொறுப்பில் இருந்தபோது அவருக்கு ஒதுக்கப்பட்ட அலுவலக வாகனத்திற்கு வழங்கப்பட்ட எரிபொருள் செலவினத்

தொகை வழங்கியது குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியல். அதில் 5,74,986/- ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(6) பரிசுத்தொகை ரூ.5,19,861/-**

அடுத்ததாக 1ம் எதிரி அவரது மகனின் திருமண காலத்தில் பரிசுத்தொகையாக ரூ.519861/-ஐ பெற்றார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி வருமானம் சிகா அறக்கட்டளை வருமானமாக அரசு தரப்பில் காண்பிக்கப்பட்டுள்ளது. அது 1ம் எதிரியின் வருமானத்தில் காட்டப்படவேண்டும். சிகா கல்வி அறக்கட்டளை வருமானத்தில் இருந்து நீக்கறவு செய்யப்படவேண்டும்.

**1ம் எதரியின் டிராக்டர் விற்ற தொகை ரூ.1,25,000/-**

1ம் எதிரி டி.என்.32 1285 என்ற டிராக்டரை வாங்கியதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. டிராக்டர் வருமானம் ரூ.90,691/- என கூறப்பட்டுள்ளது. அதேபோல் டிராக்டர் ரூ.2,30,000/-த்திற்கு வாங்கியது குறித்தும் அட்டவணை பட்டியல் 2-ல் கூறப்பட்டுள்ளது. ஆனால் 1999-ல் அந்த டிராக்டர் 1ம் எதரியால் விற்கப்பட்டுள்ளது. அந்த தொகை ரூ.1,25,000/- 1ம் எதிரியின் வருமான கணக்கில் காண்பிக்கப்படவில்லை.

ஆக, தணிக்கை காலத்தில் 1ம் எதிரியின் அரசு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி விடுபட்ட வருமானம் ரூ.55,81,349 1ம் எதிரியின் விடுபட்ட வருமாத்தில் சேர்க்கப்படவேண்டும்.

79) இதன்படி 1ம் எதரியின் கணக்கு பட்டியல் பின்வருமாறு

## STATEMENT – I

| | |
|---|---|
| தணிக்கை காலத்திற்கு முன்பிருந்த சொத்து | Rs. 629680.00 |

## STATEMENT – II

| | |
|---|---|
| 1ம் எதிரி தணிக்கை காலத்தின் இறுதியில் சேர்த்த சொத்துக்கள் மதிப்பு | Rs. 871655.00 |

## STATEMENT – III

| | | |
|---|---|---|
| அரசு தரப்பில் பட்டியல் 1ம் எதிரியை பொறுத்து 3-ல் கூறப்பட்டுள்ள தணிக்கை காலத்திற்கான வருமானம் (13.05.1996 முதல் 31.03.2002) | | ரூ. 9,65,458.00 |
| 1ம் எதிரியின் விடுபட்ட வருமானம் | | |
| (1) மகன்களின் வருமானம் | ரூ.35,89,429.00 | |
| (2) விடுபட்ட சம்பளம் | ரூ.26,000.00 | |
| (3) விடுபட்ட விவசாய வருமானம் | ரூ.3,45,490.00 | |
| (4) கரும்பு ஆலை தொகை | ரூ.3,99,884.00 | |
| (5) எரிபொருள் செலவினம் | ரூ.5,74,986.00 | |
| (6) பரிசத்தொகை | ரூ.5,19,861.00 | |
| (7) டிராக்டர் விற்ற தொகை | ரூ.1,25,000 | |
| **1ம் எதிரியின் விடுபட்ட மொத்த வருமானம்** | | ரூ.55,81,349.00 |
| **ஆக மொத்தம்** | | ரூ.6546807.00 |

1 ம் எதிரி தேர்தல் செலவாக Rs.3,62,027.00 குறித்து அட்டவணை 4-ல் கூறப்பட்டுள்ளது. ஆனால் 1ம் எதிரியின் எதிரி செலவழிக்கவில்லை என்று அரசு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் 1ம் எதிரி திருமண வரவேற்பு செலவுகள் ரூ.3,00,000/- செலவு செய்யவில்லை என்றும் அவரது சம்பந்தி

தான் செலவு செய்ததாக எதிரிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இரண்டு செலவினங்களும் அட்டவணை 5-ல் கழிக்கப்படவேண்டும். அதன்படி 4ம் அட்டவணை பின்வருமாறு.

## STATEMENT – IV

| | |
|---|---|
| 1ம் எதிரி தணிக்கை காலத்தில் செய்த செலவினங்கள் (13.05.1996 and 31.03.2002) | Rs. 26,50,267.00 |
| **Less : 1ம் எதிரியின் தேர்தல் செலவு Rs.3,62,027.00**<br>**திருமண வரவேற்பு Rs.3,00,000.00**<br>**Total : Rs.6,62,027.00** | **Rs.6,62,027.00** |
| **ஆக மொத்த செலவினம்** | **Rs.19,88,240.00** |

அதன்படி அட்டவணை 1 முதல் 4 வரையிலான கணக்கு வழக்குகள் அடிப்படையில் அட்டவணை 5 முதல் 7 பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

## STATEMENT – V

## ASSETS ACQUIRED BY THE ACCUSED NO.I DURING THE CHECK PERIOD

| | |
|---|---|
| 1ம் எதிரி தணிக்கை காலத்தின் இறுதியில் சேர்த்த சொத்துக்கள் மதிப்பு (Statement II) | Rs.871655.00 |
| தணிக்கை காலத்திற்கு முன்பிருந்த சொத்து 13.05.1996 (Statement I) | Rs.629680.00 |
| தணிக்கை காலத்தில் அடைந்த சொத்துக்கள் மதிப்பு | **Rs.241975.00** |

## STATEMENT – VI

## LIKELY SAVINGS OF THE ACCUSED NO.I DURING THE CHECK PERIOD

| | |
|---|---|
| அரசு தரப்பில் பட்டியல் 3-ல் கூறப்பட்டுள்ள தணிக்கை காலத்திற்கான வருமானம் (13.05.1996 முதல் 31.03.2002) (vide Statement – III) | **Rs.6546807.00** |
| 1 ம் எதிரி தணிக்கை காலத்தில் செய்த செலவினங்கள் (13.05.1996 and 31.03.2002) (vide Statement-IV) | **Rs. 1988240.00** |
| 1 ம் எதிரியின் சேமிப்பு | **Rs. 4558567.00** |

## STATEMENT – VII

## DISPROPORTIONATE ASSETS OF THE ACCUSED NO.I DURING THE CHECK PERIOD

| | |
|---|---|
| எதிரிகள் தணிக்கை காலத்தில் சொத்து (vide Statement – V) | **Rs.2,41,975.00** |
| 1 ம் எதிரியின் சேமிப்பு (vide Statement-VI) | **Rs. 45,58,567.00** |
| வருமானத்திற்கு அதிகமான சொத்து | **(-) Rs.43,16,592.00** |

80) அடுத்ததாக 2ம் எதிரியின் விடுபட்ட வருமானம் குறித்து பார்க்கவேண்டி உள்ளது.

2ம் எதிரி தணிக்கை காலம் 13.05.1996 முதல் 31.03.2002 வரை 6 நிதியாண்டுகளில் வருமான வரிக்கணக்குகள் தாக்கல் செய்துள்ளார். அவைகள் முறையே அ.த.சா.ஆ.146 முதல் 148 மற்றும் எ.சா.1 மற்றும் 2 அக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அரசு தரப்பில் 1996-97 ம் ஆண்டிற்கான வருமான வரி

கணக்கு தாக்கல் செய்யவில்லை. ஐந்து ஆண்டுகளுக்கான வருமானம் குறித்து அ.சா.68 பட்டய கணக்காளர் சாட்சியம் அளித்துள்ளார். அதன்படி மொத்த வருமானம் ரூ.85,08,232/- என்று கூறியுள்ளார். வருமானத்தை மட்டும் கூறிய நிலையில் வருமான வரி கணக்குகளில் வெவ்வேறு செலவினங்கள் காட்டப்பட்டுள்ளது. விவசாய வருமானம் தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது.

2) இந்தியன் வங்கி கடன் ரூ.35,00,000/-

அ.சா.78 இந்தியன் வங்கி மேலாளர் சாட்சியத்தின்படி, 2ம் எதிரி முதலில் ரூ.15,00,000/- தன் விஷால் ஆட்டோமொபைல்ஸ் விரிவாக்கத்திற்காக வாங்கியதாகவும் பின்னர் மேலும் ரூ.35,00,000/- கடன் பெற்றார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி ரூ.35,0,000/- பட்டியல் 3-ல் விடுபட்டுள்ளது. ரூ.15,00,000/- மட்டுமே காண்பிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து புலன்விசாரணை அதிகாரி அ.சா.172 தன் சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். அந்த வகையில் ரூ.35,00,000/- விடுபட்ட வருமானம் சேர்க்கப்படவேண்டும்.

3) தர்மேஷ் பைனான்ஸ் கடன் ரூ.7,00,000/-

அ.சா.143-ன் சாட்சியத்தின்படி 2ம் எதிரி ரூ.7,00,000/- அதாவது ரு.2,50,000/- மற்றும் ரூ.2,50,000/- மற்றும் ரூ.2,00,000/- கடனாக வாங்கியுள்ளார். இதுகுறித்த ஆவணம் அ.சா.ஆ.379 முதல் 381 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த கடன் விடுபட்டுள்ளது குறித்து அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட புலன்விசாரணை தன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே அந்த வகையில் ரூ.7,00,000/- பட்டியல் 3-ல் விடுபட்ட வருமானமாக சேர்க்கப்படவேண்டும்.

4) அசோக் சிகாமணி மற்றும் கௌதம் சிகாமணி கடன்கள் ரூ.9,50,000/-

அ.சா.68 திரு.கியான்சந்தபோரா, அரசு தரப்பு சாட்சியம் முடிந்த நிலையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தின்படி

*2ம் எதிரி தணிக்கை ஆண்டு 2002-2003 ல் பி.அஜோக் சிகாமணி என்பவரிடம் இருந்து ரூ.4,75,000/- மும் பி.கௌதம் சிகாமணியிடம் இருந்து ரூ.4,75,000/- மும் இந்தியன் வங்கியிலிருந்து ஓசிசி வங்கிக் கடனாக ரூ.35,00,000/-மும், இந்தியன் வங்கியிலிருந்து டெர்ம் லோன் ரூ.15,00,000/- மும் பெற்றுள்ளதாக 2ம் எதிரி வருமான வரிக்கணக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்*

என்று கூறியுள்ள நிலையில் மேற்படி ரூ.9,50,000/- 2ம் எதிரியின் விடுபட்ட வருமானமாக சேர்க்கப்படவேண்டும்.

5) விஷால் பப்ளிகேஷன்ஸ் தொகை ரூ.1,33,075/-

மேற்படி விஷால் பப்ளிகேஷன்ஸ் வருமானமாக 2ம் எதிரி மேற்படி தொகை பெற்றுள்ளது குறித்து அ.சா.172 தன் விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி தொகை 2ம் எதிரியின் வருமானமாக சேர்க்கப்படவேண்டும்.

**6) டிப்பர் லாரி கடன மற்றும் பாகப்பிரிவினை தொகை்.-**

2ம் எதிரி பெயரில் 2 டிப்பர் லாரிகள் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் டிப்பர் லாரி செலவினங்களாக பட்டியல் 4-ல் காண்பிக்கப்பட்ட நிலையில் மேற்படி டிப்பர் லாரிகளை வாங்குவதற்காக 2ம் எதிரி பெற்ற கடன் தொகை ரூ.11,37,000/- குறித்து பட்டியல் 3-ல் விடுபட்டுள்ளது. மேலும் பாகப்பிரிவினை தொகை ரூ.20,000/-மும் விடுபட்டுள்ளது. ஆக ரூ.11,37,000/- மற்றும் ரூ.20,000/- விடுபட்ட வருமானமாக பட்டியல் 3-ல் சேர்க்கப்படவேண்டும்.

7) டிப்பர் லாரி வருமானம் ரூ.8,16,000/-

அ.சா.124-ன் சாட்சியத்தின்படியும், அ.சா.299 -ன்படியும் டிப்பர் லாரியிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானமாக மேற்படி ஐந்து ஆண்டுகளுக்கான வருமானமாக ரூ.81,6,000/- என்று கூறப்பட்டள்ளது. மேற்படி அறிக்கையை பொய்யானது என்றோ அது தவறாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபணம் செய்யத அரசு தரப்பில் முன்வரவில்லை. எனவே மேற்படி ரூ.8,16,000/- அ.சா..299-ன்படியான வருமானம் பட்டியல் 3-ல் காண்பிக்கப்படவேண்டும்.

8) 2ம் எதிரியின் விவசாய வருமானம் ரூ.28,29,367/-

2ம் எதிரியின் விவசாய வருமானமாக ரூ.6,20,633/- மட்டுமே பட்டியல் 3-ல் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.68 ஆடிட்டர் சாட்சியத்தின்படி 2ம் எதிரியின் விவாசய வருமானம் ரூ.34,50,000/- எனவே விடபட்ட தொகை ரூ.28,29,367/- சேர்க்கப்படவேண்டும். மேற்படி விடுபட்ட வருமானங்களை சேர்த்து, தற்போது 2ம் எதிரியின் கணக்கீடு தாக்கல் செய்யப்படுகிறது.

## STATEMENT – I

| | |
|---|---|
| 2ம் எதிரிக்கு தணிக்கை காலத்திற்கு முன்பிருந்த சொத்து | **Rs. 1180964.50** |

## STATEMENT – II

| | |
|---|---|
| 2ம் எதிரி தணிக்கை காலத்தின் இறுதியில் சேர்த்த சொத்துக்கள் மதிப்பு | **Rs. 7718593.50** |

## STATEMENT – III

| | |
|---|---|
| அரசு தரப்பில் பட்டியல் 2ம் எதிரியை பொறுத்து 3-ல் கூறப்பட்டுள்ள தணிக்கை காலத்திற்கான வருமானம் (13.05.1996 முதல் 31.03.2002) | ரூ. **50,24,721.45** |

| | | |
|---|---|---|
| | | |
| (1) விவசாய வருமானம் | .ரூ.28,29,367.00 | |
| (2) இந்தியன் வங்கி கடன் | ரூ.35,00,000.00 | |
| (3) தர்மேஷ் பைனான்ஸ் கடன் | ரூ.7,00,000.00 | |
| (4) அசோக் சிகாமணி மற்றும் கௌதம் சிகாமணி கடன்கள் | ரூ.9,50,000.00 | |
| (5) விஷால் பப்ளிகேஷன்ஸ் | ரூ.1,33,075.00 | |
| (6) டிப்பர் லாரி கடன் | ரூ.11,37,000.00 | |
| (7) பாகப்பிரிவினை தொகை | ரூ.20,000.00 | |
| (8) டிப்பர் லாரி வருமானம் | ரூ.8,16,000.00 | |
| | | |
| 2ம் எதிரியின் விடுபட்ட மொத்த வருமானம் | | ரூ.1,00,85,442.00 |
| **ஆக மொத்தம்** | | ரூ.1,51,10,163.45 |

## STATEMENT – IV

| | |
|---|---|
| 2ம் எதிரி தணிக்கை காலத்தில் செய்த செலவினங்கள் (13.05.1996 and 31.03.2002) | Rs. 7118372.75 |

அதன்படி அட்டவணை 1 முதல் 4 வரையிலான கணக்கு வழக்குகள் அடிப்படையில் அட்டவணை 5 முதல் 7 பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

## STATEMENT – V

## ASSETS ACQUIRED BY THE ACCUSED NO.2 DURING THE CHECK PERIOD

| | |
|---|---|
| 2ம் எதிரி தணிக்கை காலத்தின் இறுதியில் சேர்த்த சொத்துக்கள் மதிப்பு (Statement II) | Rs.**7718593.50** |
| தணிக்கை காலத்திற்கு முன்பிருந்த சொத்து 13.05.1996 (Statement I) | **Rs. 1180964.50** |
| தணிக்கை காலத்தில் அடைந்த சொத்துக்கள் மதிப்பு | **Rs.6537629.00** |

## STATEMENT – VI

## LIKELY SAVINGS OF THE ACCUSED NO.2 DURING THE CHECK PERIOD

| | |
|---|---|
| அரசு தரப்பில் பட்டியல் 3-ல் கூறப்பட்டுள்ள தணிக்கை காலத்திற்கான வருமானம் (13.05.1996 முதல் 31.03.2002) (vide Statement – III) | **Rs.15110163.45** |
| 2ம் எதிரி தணிக்கை காலத்தில் செய்த செலவினங்கள் (13.05.1996 and 31.03.2002) (vide Statement-IV) | **Rs. 7118372.75** |
| 2 ம் எதிரியின் சேமிப்பு | **Rs. 7991790.70** |

## STATEMENT – VII

## DISPROPORTIONATE ASSETS OF THE ACCUSED NO.II DURING THE CHECK PERIOD

| | |
|---|---|
| எதிரிகள் தணிக்கை காலத்தில் சொத்து (vide Statement – V) | **Rs.65,37,629.00** |
| 1 ம் எதிரியின் சேமிப்பு (vide Statement-VI) | **Rs.79,91,790.70** |
| வருமானத்திற்கு அதிகமான சொத்து | (-) **Rs. 1454161.70** |

ஆக 2ம் எதிரியின் வருமானம் உபரயாக ரூ.1,45,162.25 என்ற நிலையில், 2ம் எதிரி வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார் என்ற அரசு தரப்பு வாதம் நிராகரிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பில் வாதிடப்படுவது போல் 2ம் எதிரி தனிப்பட்ட வருமானம் உள்ளவர் என்ற நிலையில் அவர் வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்பவர் என்ற நிலையில் 2ம் எதிரியின் வருமானம் மிகை வருமானம் என்ற அரசு தரப்பு வாதம் தவறானது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

81) மேற்படியாக விவரிக்கப்பட்டுள்ள சங்கதிகளில் இருந்து, அரசு தரப்பில் சாட்சியங்கள் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளின்படியும், ஆடிட்டர், வருமான வரித்துறை அதிகாரிகள், அரசு தரப்பு மற்ற சாட்சிகள் மற்றும் புலன்விசாரணை அதிகாரிகள் சாட்சியத்தில் இருந்தும் அரசு தரப்பில் 1ம் எதிரி பொது ஊழியர் என்ற முறையில் 1ம் எதரியின் பெயரிலும் அவரது மனைவியான 2ம் எதிரி பெயரிலும் வருமானத்திற்கு அதிகமாக அரசு தரப்பில் அட்டவணை 7-ல் கண்டபடி வருமானத்திற்கு அதிகமாக சேர்த்துள்ளார் என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. மாறாக 3 முதல் 5 எதிரிளின் வருமானம் செலவினங்கள் மற்றும் 1,2 எதிரிகளின் விடுபட்ட வருமானங்களை சேர்த்து கணக்கீடு செய்தால் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்க்கப்படவில்லை என்பதும் உபரி வருமானமே உள்ளது என்றும் மேலே கண்ட கணக்கீடுகளின்படி தெரியவருகிறது.

82) எனவே, அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளதுபோல் 1ம் எதிரி பொது ஊழியராக இருந்து திருப்திகரமான விளக்கம் அளிக்க இயலாத வகையில் தெரிந்த அளவிலான வருமானத்திற்கு அதிகமாக நிதிவள வசதிகள் மற்றும் சொத்துக்களை சேர்த்து வைத்து, வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்து வைத்துள்ள பொது ஊழியர் என்ற குற்றமுறு தவறான நடத்தை உடைய பொது ஊழியர் என்ற முறையில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார் என்ற குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

83) அதேபோல் 1ம் எதரியின் மனைவியான 2ம் எதிரி 1ம் எதிரியின் பினாமியாக இருந்து செயல்பட்டு நிறுவனங்களை நடத்தினார் என்ற குற்றச்சாட்டும் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் 2ம் எதிரி பிரிவு 13(2) உ/இ

13(1)(இ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 உடன் இணைந்த இ.த.ச.பிரிவு 109-ன்படி குற்றவாளி அல்ல என்றே இந்நீதிமன்றம் தீரமானித்து பின்வருமாறு இவ்வழக்கில் தீர்ப்பளிக்கப்படுகிறது.

__தீர்ப்பு :.-__

**முடிவாக 1ம் எதிரி மீதான ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன்படியான குற்றச்சாட்டும், 2ம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு 109 உடன் இணைந்த பிரிவு 13(2) உ/இ 13(1)(இ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன்படியான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் மேற்படி பிரிவுகளின் கீழ் 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து கு.வி.மு.ச.235(1)-ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**இவ்வழக்கின் 3 முதல் 5 எதிரிகள் இறந்துவிட்டபடியால் அவர்களை பொறுத்து வழக்கு அற்றுப்போய்விட்டதாக உத்தரவிடப்படுகிறது.**

**இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் முற்படுத்தப்படவில்லை.**

என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கனினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023ம் ஆண்டு ஜுன் மாதம் 28ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N VASANTHALEELA

Digitally signed by N VASANTHALEELA

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
வேலூர், வேலூர் மாவட்டம்..

## இணைப்புகள்

அரசு தரப்பு சாட்சிகளின் பட்டியல் :–

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ராஜாராமன், அரசு செயலாளர் |
| அ.சா.2 | திரு.S.ராமகிருஷ்ணன், கூடுதல் தொடக்க கல்வி அலுவலர் (ஓய்வு) |
| அ.சா.3 | திரு.தவிடன் |
| அ.சா.4 | திரு.கேசவன், துணை வட்டாட்சியர், திருக்கோவிலூர் வட்டம் (ஓய்வு) |
| அ.சா.5 | திரு.மனோகர், பேராசிரியர், விழுப்புரம் அரசு கலை கல்லூரி (ஓய்வு) |
| அ.சா.6 | திரு.சூரியா போகு சாமுவேல், மாவட்ட பதிவாளர், (ஓய்வு) |
| அ.சா.7 | திரு.ஜெயசந்திரா, வட்டாட்சியர், சித்தூர் |
| அ.சா.8 | திரு.சாமிநாதன் |
| அ.சா.9 | திரு.சரவணன் |
| அ.சா.10 | திரு.ஏழுமலை |
| அ.சா.11 | திரு.பத்ரிநாராயணன் |
| அ.சா.12 | திரு.முனிரத்தினம் |
| அ.சா.13 | திரு.சேகர் |
| அ.சா.14 | திரு.பஷீர் அகமது, கிளை மேலாளர், மத்திய வங்கி, பாகாலா, ஆந்திரபிரதேசம். |
| அ.சா.15 | திரு.கிருஷ்ணமூர்த்தி |
| அ.சா.16 | திரு.V.N.ரங்கநாதன், சார் பதிவாளர், இணை 1, விழுப்புரம் |
| அ.சா.17 | திரு.மதனமோகனா |
| அ.சா.18 | திரு/திருமதி.கஸ்தூரி, இணை செயலாளர், தலைமை செயலகம் |
| அ.சா.19 | திரு.நடராஜன், சார் பதிவாளர் (ஓய்வு) |
| அ.சா.20 | திரு.குபேரன் |
| அ.சா.21 | திரு/திருமதி.P.ஜோதி |
| அ.சா.22 | திரு.K.செல்வராஜ், பத்திர எழுத்தர் |
| அ.சா.23 | செல்வி/திருமதி.ேஹமலதா தேவி, சார் பதிவாளர், விக்கிரவாண்டி |
| அ.சா.24 | திரு.ஞானசம்மந்தன், சார் பதிவாளர், விக்கிரவாண்டி |
| அ.சா.25 | திரு.ஜனகராஜ் |
| அ.சா.26 | திரு.ஆறுமுகம் |

| | |
|---|---|
| அ.சா.27 | திரு.சுகுமார் |
| அ.சா.28 | திரு.ஜெயசந்திரன் |
| அ.சா.29 | திரு.பழனிவேல் |
| அ.சா.30 | திரு.தண்டபாணி |
| அ.சா.31 | திரு.அருள்சாமி, சார் பதிவாளர் |
| அ.சா.32 | திரு.மோகன் சீனிவாசன், மாவட்ட பதிவாளர், வளவனூர் |
| அ.சா.33 | திரு.விஷ்ணுராம், பத்திர எழுத்தர் |
| அ.சா.34 | திரு.ஜெயவேல் |
| அ.சா.35 | திரு.லோகநாதன் |
| அ.சா.36 | திரு.கோவிந்தசாமி |
| அ.சா.37 | திரு.ஜெகந்நாதன் |
| அ.சா.38 | திரு.சந்திரசேகரன், முதன்மை மேலாளர், இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி |
| அ.சா.39 | திரு.நடராஜன், பொறியாளர், பொதுப்பணித்துறை (மதிப்பீடு) |
| அ.சா.40 | திரு.கலிவரதன் |
| அ.சா.41 | திரு.செந்தில்குமரன் |
| அ.சா.42 | திரு.வைத்தியலிங்கம் |
| அ.சா.43 | திரு.ஜனார்தனன் |
| அ.சா.44 | திரு.கேசவன் |
| அ.சா.45 | திரு.தட்சிணாமூர்த்தி, மாவட்ட பதிவாளர், மைலாப்பூர் |
| அ.சா.46 | திரு.சேகர், துணை வட்டாட்சியர் |
| அ.சா.47 | திரு.ரவிக்குமார், வட்டாட்சியர் |
| அ.சா.48 | திரு.மாடசாமி, கூட்டுறவு சார் பதிவாளர் |
| அ.சா.49 | திரு.சிங்காரவேலு, வட்டார போக்குவரத்து அலுவலர் |
| அ.சா.50 | திரு.பொன்முடி, நகர சர்வேயர் |
| அ.சா.51 | திரு.சீனிவாசன், கண்காணிப்பாளர் (நெடுஞ்சாலைத்துறை) (ஓய்வு) |
| அ.சா.52 | திரு.முருகேசன், துணை காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| அ.சா.53 | திரு.கலியபெருமாள், செயலாளர் (ஓய்வு), வீட்டு வசதி மேம்பாட்டு சங்கம், திருச்சி |
| அ.சா.54 | திரு.குப்புசாமி, துணை காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| அ.சா.55 | திரு.விஜயராகவன், சார் பதிவாளர் (ஓய்வு), அடையார், சென்னை |
| அ.சா.56 | திரு.ரங்கநாதபிள்ளை |

| | |
|---|---|
| அ.சா.57 | திரு.நடராஜன் |
| அ.சா.58 | திரு.முருகசாமி, துணை காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| அ.சா.59 | திரு.சிவானந்தம், துணை வட்டாட்சியர் (ஓய்வு) |
| அ.சா.60 | திரு.கோவிந்த், வட்டாட்சியர் (ஓய்வு) |
| அ.சா.61 | திரு.பாலன், துணை காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| அ.சா.62 | திரு.சரவணன், கிளை மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி |
| அ.சா.63 | திரு.நடனம், கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு) |
| அ.சா.64 | திரு.ரிச்சர்டு, கீழ் செயலாளர் (நிதி), தலைமை செயலகம் |
| அ.சா.65 | திரு.சுந்தரராகவன், இணை ஆணையர், (வருமான வரி) |
| அ.சா.66 | திரு.செல்வராஜ், மண்டல துணை வட்டாட்சியர் (ஓய்வு) |
| அ.சா.67 | திரு.சீனிவாசன், மாவட்ட புள்ளியியல் (ஓய்வு) |
| அ.சா.68 | திரு.கயன்சந்த் போரா, தணிக்கையாளர் |
| அ.சா.69 | திரு.தாமோதரன், இணை இயக்குநர், (வேளாண்மை துறை) |
| அ.சா.70 | திரு.லூர்துராஜ், துணை இயக்குநர், (தோட்டக்கலை துறை) (ஓய்வு) |
| அ.சா.71 | திரு.ராமசாமி, பொது மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (ஓய்வு) |
| அ.சா.72 | திரு.இளங்கோ |
| அ.சா.73 | திரு.நாராயணன், வணிகவரி துறை (ஓய்வு) |
| அ.சா.74 | திரு.ரவிசந்திரன், மேலாளர், லட்சுமி கார்கோ கம்பெனி (ஓய்வு) |
| அ.சா.75 | திரு.முஸ்தபா |
| அ.சா.76 | திரு.ஹக்டே |
| அ.சா.77 | திரு.மணிவாசகம், பொது மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி (ஓய்வு) |
| அ.சா.78 | திரு.ராஜபாண்டியன், முதன்மை மேலாளர், இந்தியன் வங்கி |
| அ.சா.79 | திரு.ஜனகராஜ், நிதி மேலாளர், மாதவ் மார்பல்ஸ் மற்றும் கிரானைட் லிமிடெட், (ஓய்வு) |
| அ.சா.80 | திரு.செல்வராஜ், கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு) |
| அ.சா.81 | திரு.திருஞானம், கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு) |
| அ.சா.82 | திரு.செல்வம், கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு) |
| அ.சா.83 | திரு.மகேந்திரன், பளுதூக்கும் இயந்திரம் இயக்குபவர் |
| அ.சா.84 | திரு.மோகன்தாஸ், மேலாளர், ஸ்ரீராம் சிட்ஸ் |
| அ.சா.85 | திரு.நாராயணசாமி |
| அ.சா.86 | திரு.ராஜரத்தினம் |

| | |
|---|---|
| அ.சா.87 | திரு.ஜெயசந்திரன் |
| அ.சா.88 | திரு.மூர்த்தி |
| அ.சா.89 | திரு.ஆசைதம்பி |
| அ.சா.90 | திரு.இராமநாதன் |
| அ.சா.91 | திரு.P.மனோகரன் |
| அ.சா.92 | திரு.G.மனோகரன், பொது மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் (ஓய்வு) |
| அ.சா.93 | திரு.முரளி, பொது மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி |
| அ.சா.94 | திரு.சேஷாத்திரி, உதவி மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் |
| அ.சா.95 | செல்வி/திருமதி.லலிதா பாய், மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் |
| அ.சா.96 | திரு.ராஜாராமன், உதவி பொது மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் |
| அ.சா.97 | திரு.ரகுபதி, மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் |
| அ.சா.98 | திரு.அரிதாசன் |
| அ.சா.99 | திரு.சத்தியசங்கரன், உதவி பொது மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் |
| அ.சா.100 | திரு.சுந்தரேசன், உதவி மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் |
| அ.சா.101 | திரு.ஸ்ரீதர், மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி |
| அ.சா.102 | திரு.நாராயணன், கரூர் வைஸ்யா வங்கி |
| அ.சா.103 | திரு.ஜோசப் ரெஜ்ஜி சேவியர், உதவி மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி |
| அ.சா.104 | திரு.ஆறுமுகம் |
| அ.சா.105 | திரு.வெங்கடேசன், மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி |
| அ.சா.106 | திரு.பாபு, வழக்கறிஞர் |
| அ.சா.107 | திரு.ஏழுமலை |
| அ.சா.108 | திரு.சுகுமார் |
| அ.சா.109 | திரு.ரமணன் |
| அ.சா.110 | திரு.கருணாநிதி |
| அ.சா.111 | திரு.தண்டபாணி |
| அ.சா.112 | திரு.கார்த்திகேயன் |
| அ.சா.113 | திரு.கோகுல் |

| | |
|---|---|
| அ.சா.114 | திருமதி/செல்வி.அருள்மொழி |
| அ.சா.115 | திரு.ராஜகோபால் |
| அ.சா.116 | திரு.இராமநாதன் |
| அ.சா.117 | திரு.வெங்கடேசன் |
| அ.சா.118 | திரு.பார்த்திபன் |
| அ.சா.119 | திரு.குமரவேல் |
| அ.சா.120 | திரு.குப்புசாமி |
| அ.சா.121 | திரு.மணி |
| அ.சா.122 | திரு.செந்தில்குமார் |
| அ.சா.123 | திரு.கருணாநிதி |
| அ.சா.124 | திரு.மனோகரன், தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி துறை, கடலூர் |
| அ.சா.125 | திரு.முத்தையன் |
| அ.சா.126 | திரு.தனசேகரன், உதவி பொது மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் |
| அ.சா.127 | திரு.ராஜாகண்ணு, உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், விழுப்புரம். |
| அ.சா.128 | திரு.முத்து, இணை ஆணையர் (ஓய்வு), வட்டார போக்குவரத்து அலுவலகம், சென்னை |
| அ.சா.129 | திரு.செல்வம், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1, வட்டார போக்குவரத்து கழகம், விழுப்புரம் |
| அ.சா.130 | திரு.சேகர் |
| அ.சா.131 | திரு.குமரவேல் |
| அ.சா.132 | திரு.விஸ்வநாதன், உதவி பொது மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் |
| அ.சா.133 | திரு.ரத்தின சபாபதி, பதிவாளர், அண்ணாமலை பல்கலைக்கழகம் (ஓய்வு) |
| அ.சா.134 | திரு.சிதம்பரநாதன், தொழிற்சாலை ஆய்வாளர் (ஓய்வு) |
| அ.சா.135 | திரு.இளவழகன், உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கடலூர் |
| அ.சா.136 | திரு.வைத்தியலிங்கம், கீழ் செயலாளர், பொதுத் துறை, (தமிழ்நாடு), தலைமை செயலகம் |
| அ.சா.137 | திரு.வாசுதேவன், இயக்குநர், தென்னிந்திய சர்க்கரை (ஓய்வு), முன்டியாம்பாக்கம் |
| அ.சா.138 | திரு.கிருஷ்ணமூர்த்தி |

| | |
|---|---|
| அ.சா.139 | திரு.நாகராஜன் |
| அ.சா.140 | திரு.நந்தகுமார் |
| அ.சா.141 | திரு.கதிர்வேலு |
| அ.சா.142 | திரு.முத்துசாமி |
| அ.சா.143 | திரு.தரம்சந்த் |
| அ.சா.144 | திரு.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் தனி உதவியாளர், விழுப்புரம் |
| அ.சா.145 | திரு.ஆறுமுகம் |
| அ.சா.146 | திரு.யோகலிங்கம், வருமான வரித்துறை அலுவலர், விழுப்புரம் |
| அ.சா.147 | திரு.அசோக்குமார், பொது மேலாளர், குருதேவ் மோட்டார்ஸ் (V.S.T. மோட்டார்ஸ்) |
| அ.சா.148 | திரு.பாலசுந்தரம், செயலாளர், கூட்டுறவு விவசாய வங்கி, விழுப்புரம் |
| அ.சா.149 | திரு.லட்சுமி நாராயணன், கணக்காளர், ஸ்ரீராமசந்திரா மருத்துவ கல்லூரி |
| அ.சா.150 | திரு.முருகன், உழியர் (ஓய்வு), தமிழ்நாடு மின்சார வாரியம் |
| அ.சா.151 | திரு.சண்முகசுந்தரம், உதவி பொது மேலாளர், BSC மோட்டார் |
| அ.சா.152 | திரு.A.S.ரவி, சிறப்பு நீதித்துறை நடுவர், கோயமுத்தூர் |
| அ.சா.153 | திரு.சுப்பிரமணியன், கணக்காளர் (ஓய்வு), பாரத் சஞ்சார் நிகார் லிமிடெட் |
| அ.சா.154 | திரு.பத்மநாபன், செயலாளர், கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் |
| அ.சா.155 | திரு.வடிவேலு |
| அ.சா.156 | திரு.சாம்பசிவம், மண்டல மேலாளர், இந்தியா சிமெண்ட்ஸ் |
| அ.சா.157 | திரு.சந்தோஷ்குமார், கிளை மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி, விழுப்புரம் |
| அ.சா.158 | திரு.வெங்கடேஷ், சார் பதிவாளர், திண்டிவனம் |
| அ.சா.159 | திரு.ஆறுமுகம், இணை சார் பதிவாளர் |
| அ.சா.160 | திரு.விஸ்வநாதன், புள்ளியியல் ஆய்வாளர் |
| அ.சா.161 | திரு.ரவிச்சந்திரன், செயற்பொறியாளர், பொது பணித்துறை, கட்டடம் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), கடலூர் |
| அ.சா.162 | திரு.செந்தில்நாதன், கிளை மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, விழுப்புரம் |
| அ.சா.163 | திரு.வெங்கடேசன், மண்டல போக்குவரத்து அலுவலர், விழுப்புரம் |
| அ.சா.164 | திரு.சரவணன், செயற்பொறியாளர், பொது பணித்துறை, மின்சார பிரிவு |
| அ.சா.165 | திருமதி/செல்வி.சங்கீதா, கிளை மேலாளர், மத்திய கூட்டுறவு வங்கி, விழுப்புரம் |

| | |
|---|---|
| அ.சா.166 | திரு.செல்வம், உதவி ஆணையர், வருமான வரித்துறை அலுவலகம், விழுப்புரம். |
| அ.சா.167 | திரு.பார்த்திபன், மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி |
| அ.சா.168 | திருமதி/செல்வி.சுபிதா, கிளை மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, விழுப்புரம் |
| அ.சா.169 | திரு.பன்னீர்செல்வம், துணை காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| அ.சா.170 | திரு.சரவணன், துணை காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| அ.சா.171 | திருமதி/செல்வி.ஆதிலட்சுமி, தலைமை எழுத்தர், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விழுப்புரம் |
| அ.சா.172 | திரு.P.V.தாமஸ், துணை காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) |

<u>எதிரி தரப்பு சாட்சியின் பட்டியல் :–</u>

| | |
|---|---|
| எ.சா.1 | திரு.ஆனந்த், பிரிவு அலுவலர், Public (case) Office, தலைமை செயலகம். |

<u>அரசு தரப்பு சான்றாவணங்களின் பட்டியல் :–</u>

| ஆவண எண் | ஆவண தேதி | ஆவண விவரம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.11.2003 | பேரவைத் தலைவர் காளிமுத்து அவர்கள் பிறப்பித்த செயல்முறை ஆணையின் Rc.No.20785/2003–TNLAS/OP/I (8 பக்கங்கள்) | அசல் |
| அ.சா.ஆ.2 | –– | திரு.கந்தசாமியின் ஓய்வூதிய கோப்பின் பக்கம் 19, 20 மற்றும் 41–ன் | சான்றிட்ட நகல் |
